
# இந்திய வரலாறு

8



தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்

# இந்திய வரலாறு

## எட்டாம் வகுப்பு

மனிதத்தன்மையற்ற செயல்
**தீண்டாமை :** ஒரு பாவச்செயல்
ஒரு பெருங்குற்றம்

தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு—1983

ஆசிரியர் :

திரு. பீ. எஸ். வீரராகவன்,
சர் எம். சி. டி. முத்தைய செட்டியார்
மேல் நிலைப் பள்ளி,
புரசைவாக்கம்,
சென்னை

மேலாய்வாளர்கள் :

பேரா. ஏ. ஆலாலசுந்தரம்,
முதல்வர்,
அரசினர் கலைக் கல்லூரி,
தருமபுரி

திரு. எஸ். இராமமூர்த்தி,
தலைமையாசிரியர்,
பி. எச். இ. எல். மேல் நிலைப் பள்ளி,
திருச்சிராப்பள்ளி

விலை : ரூ. 2-50

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
ஏ. எஸ். பிரிண்டர்ஸ், சென்னை-600 018

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முதல் இந்திய சுதந்தரப் போர் (கி. பி. 1857) | ... | 1 |
| 2. | முக்கிய அரசப் பிரதிநிதிகள் | ... | 15 |
| 3. | பிரிட்டிஷ் இந்தியாவில் ஐரோப்பியச் செல்வாக்கு | ... | 32 |
| 4. | இந்தியப் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவு | ... | 46 |
| 5. | இந்திய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் மேல்நாட்டுக் கல்விக் கருத்துகளின் செல்வாக்கு | ... | 54 |
| 6. | இந்திய சுதந்தரப் போராட்டமும் பிரதிநிதித்துவ ஆட்சிமன்றங்களின் வளர்ச்சியும் (முதல் நிலை) | ... | 91 |
| 7. | இந்திய சுதந்தரப் போராட்டமும் பிரதிநிதித்துவ ஆட்சிமன்றங்களின் வளர்ச்சியும் (இரண்டாம் நிலை) | ... | 106 |
| 8. | இந்திய சுதந்தரப் போராட்டம் (இறுதி நிலை) | ... | 121 |
| 9. | இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் | ... | 138 |

ஒரு மனிதனுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? அவன் தனது வாழ்நாளில் சுதந்தரத்தோடு வாழ அவனைத் தகுதிப்படுத்துவதற்கே கல்வி தேவை.

—தந்தை பெரியார்

# 1. முதல் இந்திய சுதந்தரப் போர் (கி. பி. 1857)

## முன்னுரை

பண்டைக் கால முதற்கொண்டே இந்தியா ஐரோப்பிய நாடுகளுடன் வாணிக உறவு கொண்டிருந்தது. இடைக்காலம் வரை வாணிகம் பெரும்பாலும் தரை வழியாகவே நடைபெற்று வந்தது. ஆனால், 15ஆம் நூற்றாண்டில் துருக்கியர்களின் எழுச்சியினால் தரைவழி வாணிகம் தடைப்பட்டது. எனவே, இந்தியாவிற்கும் கீழை நாடுகளுக்கும் புதிய கடல்வழி ஒன்று கண்டு பிடிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப் பணியில் ஐரோப்பியர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர்.

இந்தியாவுக்குக் கடல்வழி காண்பதில் முதன் முதலாக வெற்றி பெற்றவர்கள் போர்த்துகீசியர்களே யாவர். வாஸ்கோடகாமா என்ற போர்த்துகீசியர் ***நன்னம்பிக்கை முனை*** வழியாக வந்து கி. பி. 1498ஆம் ஆண்டு, மே மாதம் 27ஆம் தேதியன்று இந்தியாவில் மேற்குக் கரையிலுள்ள ***கோழிக்கோடு*** துறை முகத்தை அடைந்தார். பின்னர் போர்த்துகீசியர் நம் நாட்டின் மேற்குக் கரையில் வாணிக நிலையங்களை ஏற்படுத்தினர்.

போர்த்துகீசியரைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் வாணிகம் செய்ய இந்தியாவுக்கு வந்தனர். தொடக்கத்தில் ஐரோப்பியர்களிடையே இந்திய வாணிகத்தில் போட்டி ஏற்பட்டது. நாளடைவில் அவர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் முனைந்தனர்.

அங்ஙனம் ஏற்பட்ட கடும் போட்டிகளில் இறுதி வெற்றியடைந்தவர்கள் ஆங்கிலேயரேயாவர்.

கி.பி. 1600ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31ஆம் தேதி ஆங்கில வாணிகர்கள் சிலர் ஒன்று கூடி ***கிழக்கிந்தியக் கம்பெனியை*** நிறுவினர். அந்த நிறுவனத்திற்கு இந்தியாவோடு வாணிகம் செய்யும் தனியுரிமையை அந்தநாளில் இங்கிலாந்தின் அரசியாக ஆட்சி புரிந்துவந்த முதலாம் எலிசபெத் வழங்கினார். இங்ஙனம் வாணிகர்களாக வந்த ஆங்கிலேயர் இறுதியில் இந்தியாவைத் தங்களது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர். இந்திய அரசர்களின் ஒற்றுமையின்மையும், வலிமையின்மையும், உட்பூசல்களும் ஆங்கிலேயர் இந்நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு வழி செய்தன. இராபர்ட் கிளைவ் 1757ஆம் ஆண்டு பிளாசிப் போரில் பெற்ற வெற்றி ஆங்கிலேயர்கள் முதலில் வங்காளத்தையும், இறுதியில் இந்தியா முழுவதையும் கைப்பற்றுவதற்கு அடிகோலியது.

இந்தியாவில் ***கிழக்கிந்திய வாணிக நிறுவனம்*** நடத்தும் ஆட்சியைச் சீர்செய்யும் நோக்கத்தோடு இங்கிலாந்தின் பாராளுமன்றம் ***1773***ஆம் ஆண்டு ***ஒழுங்கு முறைச் சட்டத்தை*** நிறைவேற்றியது. அது முதல் கிழக்கிந்திய வாணிக நிறுவனத்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட இந்தியப் பகுதிகளை ஆளும் பொறுப்பைத் தலைமை ஆளுநர் (கவர்னர் ஜெனரல்) மேற்கொண்டார். முதல் தலைமை ஆளுநராக ஆட்சி புரிந்தவர் வாரன்ஹேஸ்டிங்ஸ். அவரும் அவருக்குப்பின் வந்த ***காரன்வாலிஸ், வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ், டெல்ஹௌசி*** ஆகியோர் சுதேச மன்னர்களிடம் போரிட்டுப் பல இந்தியப் பகுதிகளை ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். வெல்லெஸ்லி பிரபுவின் ***துணைப்படைத் திட்டமும்***




படம் 1. 1857இல் இந்தியா

டல்ஹௌசி பிரபுவின் ***அவகாசியிலிக் கொள்கை***யும் பல சுதேச மன்னர்களை நாடிழக்கச் செய்தன. நாடிழந்த மன்னர்களும், ஆங்கில ஆட்சியை விரும்பாத இந்திய மக்களும் ஆங்கில ஆட்சியின் மீது வெறுப்பு அடைந்தனர். அவ்வித வெறுப்பே, 1857இல் கானிங் பிரபு தலைமை ஆளுநராக ஆட்சி புரிந்த காலத்தில் பெரும் புரட்சியாக வெடித்தது. இந்த நிகழ்ச்சி நமது நாட்டு வரலாற்றில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியர்கள் நடத்திய ***முதல் சுதந்தரப் போர்*** என வழங்கப்படுகிறது.

ஆனால், சில ஆங்கில எழுத்தாளர்கள் இதனை 'சிப்பாய்க் கலகம்' என்று குறிப்பிட்டுள்ளனர். இப்போருக்குப் பல காரணங்கள் உண்டு.

## முதல் இந்திய சுதந்தரப் போர் 1857

***காரணங்கள்***

***அரசியல் காரணங்கள் :*** டல்ஹௌசி பிரபுவின், நாடுபிடிக்கும் கொள்கை (அவகாசியிலிக் கொள்கை) நாட்டில் பெருத்த குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. நேரடி வாரிசு இல்லாத பல சுதேச மன்னர்களின் இராச்சியங்கள் ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. ***ஜான்சி, சதாரா, ஜெய்த்பூர், சாம்பல்பூர், உதயபூர், நாகபுரி*** முதலியன ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. ***ஜான்சி அரசி இலட்சுமிபாய்*** சுவீகாரமெடுத்துக்கொள்ள விரும்பியதை ஆங்கிலேயர் ஏற்கவில்லை. மகாராஷ்டிரத்தில் பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகனான ***நானா சாகிபுக்கு*** ஓய்வுக்கால ஊதியம் மறுக்கப்பட்டது. இவை இந்துக்களின் மனத்தில் அதிருப்தியை உண்டுபண்ணியது.

நல்லாட்சி நடைபெறவில்லை என்ற காரணம் காட்டி டல்ஹௌசி பிரபு, அயோத்தி நாட்டை ஆங்

கிலப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். மொகலாயப் பேரரசர் என்ற பட்டத்தை நீக்க டல்ஹெளசி விரும்பினார். மேலும் பேரரசரை அப்பதவியிலிருந்து விலக்க ஏற்பாடு செய்தார். இவை முகம்மதியர் மனத்தைப் புண்படுத்தின.

அவகாசியிலிக் கொள்கையால் அரச குடும்பங்களைச் சார்ந்திருந்த எண்ணற்ற குடும்பங்கள் வேலை நீக்கம் செய்யப்பெற்றன. அவர்கள் பல பொருளாதாரக் கொடுமைகளுக்கு உள்ளாயினர். பல பெரு நிலக்கிழார்கள் (ஜமீன்தார்கள்) தங்கள் நிலங்களை இழந்தனர். சுதேச மன்னர்களின் படை கலைக்கப்பட்டதும் படைவீரர்கள் வேலையிழந்தனர். அதனால் அவர்களும் ஆங்கிலேய ஆட்சியின் மீது சீற்றம் கொண்டனர்.

***சமூக, சமயக் காரணங்கள் :*** கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் மேலை நாகரிகம் மிக வேகமாகப் பரவியது. இதனால் பழமைப் பற்றாளர்கள் மிகவும் அச்சம் கொண்டனர். இரயில், தந்தி-தபால் முறைகள், மேனாட்டுக் கல்வி முறை, உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டம், குழந்தைக் கொலை சட்ட விரோதமாக்கல், கைம்பெண்களின் மறுமணச் சட்டம் முதலிய சீர்திருத்தங்கள் இந்தியரின் அச்சத்தை மேலும் அதிகப்படுத்தின. கிறித்துவ சமயத்திற்கு மாறியவர்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டது. சில கிறித்துவப் பாதிரிமார்களின் செயல்களும் இந்து, முஸ்லீம் ஆகிய இரு சமயத்தவர்களிடையே பெரும் அச்சத்தை விளைவித்தன. ஆங்கில அரசாங்கமானது இந்தியர்களுடைய சமூக அமைப்பை அழிக்க முயல்கிறது என அவர்கள் அஞ்சினார்கள். இந்தியப் பழக்க வழக்கங்களை மாற்றி மேலை நாட்டு முறைகளைப் புகுத்துவதாக எண்ணினர். மேலும் இந்தியரைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றவும் முயலுகின்றனர் எனக் கருதினர்.

***இராணுவக் காரணங்கள் :*** அவற்றுடன் இந்தியப் போர்வீரர்களின் அதிருப்தியும் சேர்ந்து கொண்டது. பல காரணங்களால் அவர்கள் அந்நிய ஆட்சியாளர்கள்பால் வெறுப்புக் கொண்டிருந்தனர். அயல் நாடுகளில் நடந்த போரில் தங்களை ஈடுபடுத்தியதை அவர்கள் வெறுத்தனர். அயல் நாடுகளில் போரிட அதிகப்படியான ஊதியம் அல்லது படி மறுக்கப்பட்டது. திறமைக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை. ஐரோப்பியர்களுக்கே உயர் பதவி அளிக்கும் கொள்கை பின்பற்றப்பட்டது. இந்தியப் படை வீரர்களைவிட ஐரோப்பியப் படை வீரர்களுக்கே அதிக ஊதியம் தரப்பட்டது. இந்தியப் படை வீரர்கள் கடல் கடந்து சென்று அயல் நாடுகளிலும் போர் புரியும்படி பணிக்கப்பட்டனர். கடல் கடந்து செல்லுதலை, சமயக் கோட்பாடுகளை மீறும் செயலாக இந்து வீரர்கள் கருதினர். ஊதியம், பதவி உயர்வு, சலுகைகள் ஆகியவற்றில் இந்தியர்களைவிட ஐரோப்பிய வீரர்களே மிகுந்த நன்மைகளைப் பெற்றிருந்தனர். மேலும், ஆங்கிலப் படையில் ஐரோப்பியர்களைவிட இந்தியர்களே எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தனர். எனவே, ஆங்கிலேய ஆட்சியை எளிதில் வீழ்த்திவிட முடியும் என்ற நம்பிக்கை இந்தியப் படையினரிடம் மேலோங்கி நின்றது.

***உடனடிக் காரணம் :*** படை வீரர்களுக்குப் புதியதாக என்பீல்ட் துப்பாக்கி வழங்கப்பட்டது. அதில் பசு அல்லது பன்றியின் கொழுப்புத் தடவிய தோட்டாக்கள் பயன்படுத்தப்பட வேண்டியதாயிற்று. இது தங்களைக் கிறித்துவச் சமயத்திற்கு மாற்றுவதற்காகத்தான் என இந்தியப் போர் வீரர்கள் எண்ணினர். பசுவைப் புனிதமாக இந்துக்கள் கருதினர். முஸ்லீம்களோ பன்றியை வெறுப்பவர்கள். எனவே, அவர்கள் மிருகக் கொழுப்புத் தடவிய தோட்டாக்களைப் பயன்படுத்த மறுத்தனர். இதுவே முதல் இந்திய சுதந்தரப் போருக்கு உடனடிக் காரணமாயிற்று.

*போரின் போக்கு*

புரட்சியின் முதல் அறிகுறி தோன்றியது வங்காளத்திலிருந்த *பாரக்பூர்* எனும் இடமாகும். கொழுப்புத் தடவிய துப்பாக்கித் தோட்டாக்களைப் பயன்படுத்த மறுத்த இந்திய வீரர்கள் ஆங்கில இராணுவ அதிகாரிகளால் தண்டிக்கப்படவிருந்தனர். 1857ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29ஆம் நாள் மங்கள் பாண்டே என்ற இந்து வீரர் இரு ஆங்கில அதிகாரிகளைத் தம் வாளால் வெட்டினார். ஆனால் அவர் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

1857ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி *மீரட்டில்* இருந்த இந்தியப் படை வீரர்கள் வெளிப்படையாகப் பெரும் கிளர்ச்சியைத் தொடங்கினர். அவர்கள் சிறைச்சாலைகளில் புகுந்து சிறைப்படுத்தப்பட்ட தம் தோழர்களை விடுவித்தனர். அங்கிருந்த ஐரோப்பியர்களைக் கொன்று, அவர்களுடைய வீடுகளுக்கும் தீ வைத்தனர். அதன்பின் கிளர்ச்சிக்காரர்கள் டில்லிக்கு விரைந்து சென்று அதைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். இ ர ண் டா ம் பகதூர்ஷாவே இந்தியாவின் பேரரசர் என அறிக்கை விடுத்தனர்.

நானாசாகிபும் அவரது நண்பர் ***தாந்தியாதோபே***யும் கான்பூரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். கான்பூரிலிருந்த ஐரோப்பியர்களை அவர்கள் கொன்று குவித்தனர். முடிவில் சர் காலின் கேம்பெல் என்பவரால் கான்பூர் கைப்பற்றப்பட்டது.

***கான்பூர், லட்சுமணபுரி, அயோத்தி, ரோகில் கண்ட்*** ஆகிய இடங்களிலும் புரட்சி பரவியது. நீல், அவுட்ரம், ஹேவ்லாக் ஆகிய ஆங்கிலேயத் தளபதிகள் இவ்விடங்களை ஒன்றன்பின் ஒன்றாக மீட்டனர்.

1857 செப்டம்பரில் டில்லியை ஆங்கிலேயர் மீட்டனர். பகதூர்ஷா கைது செய்யப்பட்டு இரங்கூ

னுக்கு அனுப்பப்பட்டார். அவருடைய இரண்டு பிள்ளைகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மத்திய இந்தியாவின் புரட்சியாளர்கள் ***தாந்தியா தோபேயைத்*** தலைவராகக் கொண்டனர். அவருடன் குவாலியர் கிளர்ச்சிக்காரர்களும் நானாசாகிபும் சேர்ந்து கொண்டனர். ஆனால், தாந்தியாதோபே காலின் கேம்பெல்லால் தோற்கடிக்கப்பட்டுத் துரத்தியடிக்கப் பட்டார்.

அதன் பிறகு தாந்தியாதோபே ஜான்சியின் அரசியான இலட்சுமிபாயுடன் சேர்ந்து மத்திய இந்தியாவில் தீவிரமாகப் போராடினார். குவாலியரில் நடந்த போரில் ஆண் உடையில் போரிட்ட ஜான்சி அரசி கொல்லப் பட்டாள். தாந்தியாதோபே ஆங்கிலேயரால்தூக்கிலிடப் பட்டார். நானாசாகிப் நேப் பாள நாட்டிற்குத் துரத்தப் பட்டு அங்கு அவர் இறந் தார். இவ்வாறு இந்தியர் களின் முதல் சுதந்தரப் போர் தோல்வியில் முடிந்தது.



படம் 2.
ஜான்சி ராணி இலட்சுமி பாய்

### *இந்தியர்களின் தோல்விக்குக் காரணங்கள்*

1. இந்தியா முழுவதிலும் புரட்சி பரவவில்லை. நருமதை நதிக்குத் தெற்கே இருந்த இந்தியப் பகுதி இப்புரட்சியால் பாதிக்கப்படவில்லை.

2. புரட்சி வீரர்களிடம் நவீன படைக்கலன்கள் ஏதும் இல்லை. தரத்தில் குறைந்த பழைய

துப்பாக்கிளையும், ஈட்டி, வாள் முதலியவைகளையும் கொண்டு போரிட்டனர். ஆனால், ஆங்கிலேயர் நெடுந்தூரம் சுடக்கூடிய புதிய துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் உபயோகப்படுத்தினார்கள். மேலும் மேற்கத்திய இராணுவ முறையில் நன்கு பயிற்றப் பட்ட படைகளையும் ஆங்கிலேயர்கள் பெற்றிருந் தனர்.

3. நானாசாகிபு, தாந்தியாதோபே, ஜான்சி அரசி இலட்சுமிபாய் போன்றோர் சிறந்த வீரமும் ஊக்கமும் உடையவர்களே. ஆயினும், இந்திய புரட்சித் தலைவர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு ஒருமித்த திட்டத்தை வகுத்துக் கொண்டு செயல் படாமல், தனித்தனியாக ஒவ்வொரு பகுதியிலும் இயங்கியதால் ஒற்றுமையற்ற இவர்களை ஆங்கிலேயர் எளிதில் தோற்கடிக்க முடிந்தது. *லாரன்ஸ், அவுட்ரம் ஹேவ்லாக், நிக்கல்சன், நீல், காம்பெல்* போன்ற திறமை வாய்ந்த தளபதிகள் ஆங்கிலேயர் பக்கம் இருந்தனர். அவர்கள் நன்கு திட்டமிட்டு, பயிற்சி பெற்ற ஐரோப்பியப் படை வீரர்களை நன்கு வழி நடத்தினர்.

4. ஜான்சி அரசி இலட்சுமிபாய், அயோத்தியின் பீகம், சிற்றரசர் சிலர் ஆகியவர்களைத் தவிர, பெரும் பாலான இந்திய அரசுகளின் ஆதரவு ஆங்கிலேயருக்கு இருந்தது.

5. பஞ்சாபில் சீக்கியர்களும், நேப்பாளத்தில் கூர்க்கர்களும் ஆங்கிலேயருக்கு ஆதரவு அளித்தனர்.

6. குவாலியர் மன்னர் சிந்தியாவும், அவரது அமைச்சரும், ஹைதராபாத் நிஜாமும் தங்கள் அரசு களில் புரட்சி பரவாமல் பார்த்துக் கொண்டனர்.

7. ஆப்கானிஸ்தானில் தோஸ்த் முகம்மது ஆங்கி லேயருடன் நட்புறவு கொண்டிருந்தார்.

8. ஆங்கிலேயர்களால் தந்தி முறை, அஞ்சல் முறை, இரயில் போக்குவரத்து ஆகியவற்றைப் பயன்படுத்தி புரட்சியை ஒடுக்குவதற்கு முன்னேற்பாடுகள் செய்ய முடிந்தது. இத்தகைய நவீன வசதிகளைப் புரட்சியாளர்கள் பெற இயலவில்லை.

*போரின் விளைவுகள்*

இந்திய வரலாற்றில் 1857இல் நடந்த இப்புரட்சி ஒரு திருப்புமுனையைக் குறிக்கின்றது. ஆங்கிலேய ஆட்சி முறையிலும் அரசாங்கத்தின் கொள்கையிலும் முக்கிய மாற்றங்களை இப்புரட்சி உண்டாக்கியது.

இப்புரட்சிக்குப் பின் இந்தியாவில் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சி நீக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தை இங்கிலாந்தின் அரசியார் ஏற்றுக் கொண்டார். இதற்காக 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ஆம் நாள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பினைக் கவனிக்க இங்கிலாந்தில் ***இந்தியச் செயலர்*** என்ற அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவிபுரிய 15 உறுப்பினர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வித மாற்றங்களின் சின்னமாகத் தலைமை ஆளுநர் 'அரசப் பிரதிநிதி' (வைஸ்ராய்) என்ற பெயர் பெற்றார். கானிங் பிரபு முதல் அரசப் பிரதிநிதி ஆனார்.

பிரிட்டிஷ் அரசானது இந்திய அரசாங்கத்தைத் தன் நேராட்சியின்கீழ் ஏற்றுக் கொண்டதைக் குறிக்கும் வகையில் ***பேரரசியார் விக்டோரியா*** அறிக்கையொன்று விடுத்தார். அவ்வறிக்கையில் கூறப்பட்டதாவது: 'இந்திய சுதேச மன்னர்களின் உரிமைகள் மதிக்கப்படும். இந்திய சுதேச மன்னர்கள் கிழக்கிந்திய

வாணிக நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன் படிக்கைகள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படும். இந்திய சுதேச அரசுகள் பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். புரட்சியின்போது கொலைக் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தவிர மற்றவர்களுக் கெல்லாம் மன்னிப்பு அளிக்கப்படும். குடிமக்களின் சமய நம்பிக்கை, வழிபாடு ஆகியவைகளில் பிரிட்டிஷ் அரசு தலையிடாது.'

அதே சமயம் ஐரோப்பிய வீரர்கள், தளபதிகள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

பீரங்கிப் படையானது ஐரோப்பியரை மட்டுமே கொண்டதாக வைக்கப்பட்டது. இந்திய சிப்பாய்கள் வெறும் காலாட் படைகளாக மட்டுமே இருந்தனர்.

புரட்சியின் விளைவாக ஆங்கிலேயருக்கும் இந்திய ருக்குமிடையே வெறுப்பும் வேற்றுமை உணர்ச்சியும் வளர்ந்தன. ஆங்கிலேயரின் இனச் செருக்கும், நியாய மற்ற செயல்களும் இந்தியரை வெறுப்படையச் செய்தன.

## பயிற்சி

**I. பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந் தெடுத்து எழுதுக:**

1. முதல் இந்திய சுதந்தரப் போரின் உடனடிக் காரணம்:

(அ) டல்ஹௌசி பிரபுவின் அவகாசியிலிக் கொள்கை.

(ஆ) இந்தியப் பழக்கவழக்கங்களை மாற்றி, மேலைய முறைகளைப் புகுத்தியது.

(இ) இந்தியப் படை வீரர்கள் கடல் கடந்து சென்று அயல் நாடுகளிலும் போர் புரியும்படி பணிக்கப் பட்டனர்.

(ஈ) இந்திய வீரர்கள் பசு அல்லது பன்றியின் கொழுப்புத் தடவிய துப்பாக்கித் தோட்டாக்களைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று.

2. முதல் இந்திய சுதந்தரப் போர் அனைத்துச் சமயங்களைச் சார்ந்த மக்களின் ஒருங்கிணைந்த தேசிய இயக்கமென்பதை விளக்கும் நிகழ்ச்சி எதுவென்றால் :

(அ) பகதூர்ஷாவை இந்தியாவின் பேரரசர் என அறிக்கை விடுத்தது.

(ஆ) கிளர்ச்சிக்காரர்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்த அனைவரையும் விடுவித்தது.

(இ) புரட்சியாளர்கள் ஐரோப்பியரின் உயிருக்கும் உடமைக்கும் மட்டுமே சேதம் விளைவித்தது.

(ஈ) ஜான்சி அரசி இலட்சுமி பாய், அயோத்தி பீகம் ஆகியோர் புரட்சியில் தீவிரப் பங்கேற்றது.

3. இந்தியாவில் கிழக்கிந்திய வாணிக நிறுவனத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரச் செய்த முக்கிய நிகழ்ச்சி :

(அ) டில்லியில் இரண்டாம் பகதூர்ஷா பேரரசர் என அறிவிக்கப்பட்டது.

(ஆ) முதல் இந்திய சுதந்தரப் போராட்டம்.

(இ) கானிங் பிரபு அரசப் பிரதிநிதியானது.

(ஈ) இங்கிலாந்தில் வாணிகக் குழுவினரின் ஆட்சியின் மீது எழுந்த எதிர்ப்பு.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1 டல்ஹெளசிப் பிரபுவின்———கொள்கை, முதல் இந்திய சுதந்தரப் போருக்கு அடிப்படை அரசியல் காரணமாகும்.

2. முதல் இந்திய சுதந்தரப் போர்———ஆண்டில் நடந்தது.

3. ———விடுத்த அறிக்கை, இந்தியாவின் ஆட்சியைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது என அறிவித்தது.

4. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தின் கடைசி தலைமை ஆளுநரான———பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதியானார்.

5. முதல் இந்திய சுதந்தரப் போரில் ஆங்கிலேயரை எதிர்த்து, மிக்க வீரமுடன் போரிட்ட பெண்ணரசி ———ஆவார்.

III. குறுகிய விடை எழுதுக:

1. டல்ஹௌசிப் பிரபுவின் அவகாசியிலிக் கொள்கையினால் ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்ட சுதேச அரசுகள் யாவை?

2. முதல் இந்திய சுதந்தரப் போரில் பங்கு பெற்ற இந்தியத் தலைவர்கள் யாவர்?

3. முதல் இந்திய சுதந்தரப் போருக்கு உடனடிக் காரணம் யாது?

4. முதல் இந்திய சுதந்தரப போரில் ஆங்கிலேயர் வெற்றிபெறக் காரணமாயிருந்த ஆங்கில இராணுவ அதிகாரிகள் யாவர்?

5. விக்டோரியா பேரரசியார் தமது அறிக்கையில் கூறியவை யாவை?

IV. விரிவான விடை எழுதுக

1. முதல் இந்திய சுதந்தரப போரின் அரசியல் காரணங்களை எழுதுக

2. முதல் இந்திய சுதந்தரப போரின் சமூக, சமயக் காரணங்களை விவரி.

3. முதல் இந்திய சுதந்தரப போரின் இராணுவக் காரணங்கள் யாவை?

4. முதல் இந்திய சுதந்தரப போரின் முக்கிய நிகழ்ச்சிகள் யாவை?

5. முதல் இந்திய சுதந்தரப் போரில் இந்தியர்கள் தோல்வியடையக் காரணங்கள் யாவை?

6. முதல் இந்திய சுதந்தரப் போரின் விளைவுகள் யாவை?

## செய்முறைப் பயிற்சி

1. டல்ஹௌசி காலத்திய ஆங்கில ஆட்சியின் பரப்பை இந்தியா படத்தில் குறிப்பிடுக.

2. முதல் இந்திய சுதந்தரப் போராட்டத்தைப்பற்றி விவாதிக்கவும்.

3. முதல் இந்திய சுதந்தரப் போராட்டத்தில் பங்கேற்ற ஓர் இந்தியப் போர் வீரராகக் கற்பனை செய்து கொண்டு உனது சாகசச் செயல்களை நடித்துக் காட்டுக.

# 2. முக்கிய அரசப் பிரதிநிதிகள்

## கானிங் பிரபு (1858-62)

முதல் இந்திய சுதந்தரப் போருக்குப் பின் 1858ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டுவரை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதிகளின் ஆட்சி நடைபெற்றது. அரசப் பிரதிநிதியே கவர்னர் ஜெனரலு மாவார். 1858ஆம் ஆண்டின் விக்டோரியா பேரரசியாரின் அறிக்கையின்படி கானிங் பிரபுவே இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதியானார்.

கானிங் பிரபு ஆட்சியில் நிகழ்ந்த சிறப்பான நிகழ்ச்சி 1857ஆம் ஆண்டில் தோன்றிய முதல் இந்திய சுதந்தரப் போர் ஆகும். போர் முடிந்ததும் மக்களை அமைதிப்படுத்தும் பணியில் கானிங் பிரபு ஈடுபட்டார். இந்தியாவின் பல பாகங்களுக்கு அவர் சுற்றுப்பயணம் செய்து பேரரசியார் விக்டோரியாவின் பேரறிக்கையைச் சுதேச மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் விளக்கினார். பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களிடம் கானிங் பிரபு இரக்கமுடன் நடந்து கொண்டதால் சில ஐரோப்பிய ஏடுகள் அவரைக் 'கருணைமிக்க கானிங்' என்று அழைக்கலாயின.



படம் 3. கானிங் பிரபு

*நிர்வாகச் சீர்திருத்தங்கள்*

முதல் இந்திய சுதந்தரப் போரின் விளைவாக நிதி நிலைமை மிகவும் சீர்குலைந்தது. அரசாங்கத்தின்

தேவையற்ற செலவினங்களைக் குறைக்க கானிங் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டது. வருமானம் பெருக்கப்பட்டது. படையில் பல பிரிவுகள் கலைக்கப்பட்டன. இராணுவ அமைப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. வாணிகம், தொழில் முதலியவற்றை நடத்துவதற்கான உரிமை வரியும், வருமான வரியும், புகையிலை மீது சுங்கவரியும் விதிக்கப்பட்டன. இறக்குமதிப் பொருள் கள் மீது 10 சதவீதம் வரி விதிக்கப்பட்டன. உப்பு வரி உயர்த்தப்பட்டது. இவ்வித முயற்சிகளால் வரவு செலவு சமநிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

1860ஆம் ஆண்டில் இந்தியக் குற்றவியல் விதி முறைத் தொகுப்பும், இந்திய சிவில் வழக்கு விதி முறைத் தொகுப்பும், இந்தியத் தண்டனைத் தொகுப்பும் நடைமுறைக்கு வந்தன.

கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த தலைமை நீதிமன்றங்களும் சாதர் நீதிமன்றங்களும் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகக் கல்கத்தா, சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களில் தனித்தனியே உயர்நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1859இல் கானிங் பிரபு உழவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் வங்காளக் குடிவாரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினார். இதனால் அவுரித் தோட்டத் தொழிலாளர்கள் ஐரோப்பிய வாணிகர்களின் கொடுமை களிலிருந்து விடுபட்டனர்.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. இவை இலண்டன் பல்கலைக் கழகத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டன.

### இந்தியக் கவுன்சில் சட்டம் 1861

1861ஆம் ஆண்டு 'இந்தியக் கவுன்சில் சட்டம்' இயற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி அரசப் பிரதி

நிதியின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தப் பட்டது. மேலும் சட்டங்கள் இயற்றுவதற்கு அரசப் பிரதிநிதியின் சட்டக் குழுவில் புதியவராக ஆறு உறுப்பினர்களுக்குக் குறையாமலும், பன்னிரண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் சேர்க்கப்பட்டனர்.

*பஞ்சம்*

இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சியின்போது பலமுறை பஞ்சங்களால் பாதிக்கப்பட்டது. பல கோடி மக்கள் அவற்றால் உயிரிழந்தனர். கானிங் பிரபு காலத்திலும் அத்தகையதோர் பஞ்சம் 1861இல் ஏற்பட்டது. வடமேற்குமா நிலங்களான ஆக்ரா, அயோத்தி, பஞ்சாப், இராஜபுதனம் ஆகிய பகுதிகளில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் தொகையில் 10 சதவீதத்தினர் மாண்டனர். கானிங் பிரபு 1862ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குத் திரும்பினார்.

## ரிப்பன் பிரபு (1880-84)

நம் நாட்டுக்கு வந்த அரசப் பிரதிநிதிகளுள் தலை சிறந்தவராகக் கருதப்படுபவர் ரிப்பன் பிரபுவேயாவார். அவர் மிகப் பரந்த நோக்கமும், தலசுய ஆட்சி முறையில் பற்றுதலும் கொண்டவர் ஆவார்.



படம் 4. ரிப்பன் பிரபு

*சீர்திருத்தங்கள்*

இவர்காலத்தில் 1881இல் முதன்முதலாக, முறையாக மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது. அவ்வாண்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் நலனில் ரிப்பன் மிக்க ஆர்வம் காட்டினார். 1881ஆம் ஆண்டில் முதலாம் தொழிற்சாலைச் சட்டத்தை நிறைவேற்றினார். இச்சட்டத்தின்படி 7 வயதுக்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அறிவிக்கப்பட்டது.

சுதேச மொழிச் செய்தித் தாள்களின் மீது லிட்டன் பிரபு விதித்திருந்த கட்டுப்பாடுகளை நீக்கி அவற்றின் உரிமைகளை ரிப்பன் பிரபு பெருக்கினார்.

இந்தியக் கல்வித்துறையிலும் ரிப்பனின் பெயர் மிகச் சிறப்பான இடத்திற்கு உரியதாகும். ஆரம்பக் கல்வி, மற்றும் உயர்நிலைக் கல்விப் பள்ளிகளை நிறுவுவதற்கு நகராண்மைக் கழகங்களுக்கும் மாவட்ட சுயாட்சி மன்றங்களுக்கும் அனுமதி வழங்கினார். தனியார் நிறுவனங்களாலும் தனிப்பட்டவர்களாலும் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அரசாங்க உதவிக் கொடைகள் வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

ரிப்பனின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களிலேயே மிக முக்கியமானது 1882இல் ஏற்பட்ட தல சுய ஆட்சிச் சட்டமாகும். இச்சட்டத்தின்படி, மாவட்டக் கழகங்கள், தாலுக்காக் கழகங்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற தல சுய ஆட்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்கழகங்களின் உறுப்பினர்களுள் ஒரு பங்கினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வரிவசூல் செய்யவும், சாலைகள் அமைக்கவும், வீதிகளில் விளக்குகள் போடவும், தொடக்கக்கல்விக் கூடங்கள் அமைக்கவும், குடிநீர் வழங்கவும், பொதுச் சுகாதாரத்தைக் கண்காணிக்கவும் இக்கழகங்கள் அனுமதிக்கப்பட்டன.

### இல்பர்ட் மசோதா

இந்திய நீதிபதிகள் ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரணை செய்யக்கூடாது என்ற நிலையிருந்தது. இதை நீக்கி தமது நிர்வாகக் குழு உறுப்பினரான இல்பர்ட் என்பவர் மூலம் ஒரு மசோதாவை ரிப்பன் பிரபு கொண்டு வந்தார். இதன்படி இந்திய நீதிபதிகள் ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கலாம் என்ற திருத்தம் கொண்டுவரப் பட்டது. ஐரோப்பிய சமூகத்தினர் இதைக் கடுமையாக எதிர்த்தினர். எனவே, இல்பர்ட் மசோதா திருத்தி அமைக்கப்பட வேண்டியதாயிற்று. ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரணை செய்யும் உரிமை இந்திய நீதிபதிகளுக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அப்படி விசாரணை செய்யும்போது தீர்ப்புச் சான்றாளர் குழுவில் (ஜூரி) பாதிப் பேர் ஐரோப்பியர்களாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

### சுதேச அரசுகளில் செய்த மாறுதல்கள்

பெண்டிங் பிரபு 1831இல் மைசூர் அரசரைப் பதவியிலிருந்து நீக்கி மைசூரை ஆங்கில ஆட்சியுடன் இணைத்துக்கொண்டார். ஆனால் பெரும் புரட்சியின் போது மைசூர் அரச குடும்பத்தினர் ஆங்கிலேயரிடம் விசுவாசமுள்ளவர்களாக நடந்து கொண்டனர். எனவே, ரிப்பன் பிரபு 1881இல் மைசூரைப் பழைய அரச மரபினரின் சந்ததியாரிடமே சில நிபந்தனைகளுக்குட் படுத்தி ஒப்படைத்தார்.

அதுபோலவே, கொல்ஹாபூரிலும் ஹைதராபாத் திலும் பழைய அரச வம்சத்தினரின் சந்ததியாரிடமே ஆட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டது.

1884இல் ரிப்பன் பிரபு அரசப் பிரதிநிதி பதவி யைத் துறந்து, தமது தாயகம் திரும்பினார்.

## கர்சன் பிரபு (1899-1905)

கர்சன் பிரபு ஆங்கில ஏகாதிபத்யவாதி ஆவார். அவர் "ஆங்கிலேயர் இந்தியாவை ஆளப் பிறந்தவர்கள். இந்தியர்கள் அவர்கள் சொற்படி நடத்தல் அவசியம்" என்ற மனப்பான்மை கொண்டவர். அதனால், இவர் இந்தியரின் வெறுப்புக்கு ஆளானார். இவர் இந்தியத் தேசிய உணர்ச்சியை உதாசீனம் செய்தார். அதனால் சுதந்தர உணர்ச்சி இவர் காலத்தில் கொழுந்து விட்டு எரியலாயிற்று.



படம் 5. கர்சன் பிரபு


### அயல் நாட்டுக் கொள்கை

**வடமேற்கு எல்லை :** இந்தியாவின் வடமேற்கு எல்லையிலிருந்த பகுதிகளை ஒன்றாக இணைத்து ஒரு தனி மாநிலமாக்கினார். அதற்கு "வடமேற்கு எல்லைப்புற மாநிலம்" என்று பெயர் வைக்கப்பட்டது. "பெஷாவர்" அப்புதிய மாநிலத்திற்கு தலைநகர மாக்கப்பட்டது.

**ஆப்கானிஸ்தானம் :** ஆப்கானிய அமீருடன் (மன்னர்) கர்சன் நட்புறவு ஏற்படுத்திக்கொண்டார்.

**பாரசீக வளைகுடாப் பிரதேசம் :** பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் பிரிட்டன் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும், அங்கு ருஷ்யா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகள் தங்களது செல்வாக்கினை ஏற்படுத்துவதைத் தடுக்கவும் முயற்சிகளை மேற்கொண்டது. கர்சன் பிரபு தாமே நேரில் அந்த நாடுகளுக்கு 1903இல் சென்றார். அந்நாடுகளுடன் பல ஒப்பந்தங்கள் செய்துக் கொண்டார்.

பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் பிரிட்டனுக்கு விசேட சலுகைகளை அளிக்க அந்தப் பகுதி ஆட்சியாளர்கள் சம்மதித்தனர். மேலும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு அவ்விதச் சலுகைகள் அளிப்பதில்லை என்றும் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.




படம் 6. கர்சன் காலத்திய இந்திய வடமேற்கு எல்லைப்புறப் பகுதிகள்

**திபெத் :** திபெத் நாட்டினையும், ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர கர்சன் எண்ணினார். அதற்கென, கர்னல்யங் ஹஸ்பெண்ட் என்ற அதிகாரியின் தலைமையில் ஒரு படையைத் திபெத்திற்கு அனுப்பினார். ஆனால், திபெத்திய அரசாங்கம், பிரிட்டிஷ் இராணுவம் திரும்ப அழைக்கப்பட்டாலொழிய சமாதான உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அறிவித்தது. பிரிட்டிஷ் இராணுவம் பல இடங்களைக் கைப்பற்றியபின், திபெத்தின் தலைநகரமாகிய லாஸாவையும் தன்வசமாக்கிக் கொண்டது. வேறு

வழியின்றி திபெத்திய அரசாங்கம் பிரிட்டனின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது. திபெத்தின் சில பகுதிகள் தற்காலிகமாக ஆங்கில ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டன. அந்த நாட்டின் வெளி உறவுக் கொள்கை பிரிட்டனால் வகுக்கப்பட்டது. மேலும், போர் இழப்பீடாக 75 லட்சம் ரூபாய் திபெத் பிரிட்டிஷாருக்குக் கொடுக்கவும் சம்மதித்தது.

***உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்***

*பஞ்ச நிவாரணப் பணிகள்:* கர்சன் காலத்தில் பெரியதொரு பஞ்சம் வட இந்தியாவின் பல பகுதிகளில் ஏற்பட்டது. அவர் பஞ்ச நிவாரண ஆலோசனைக்காக ஒரு குழுவை அமைத்தார். அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அவற்றைத் திறம்படச் செய்து முடித்தார். பஞ்ச நிவாரணச் சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டன.

***வேளாண்மைத் துறை:*** கர்சன் வேளாண்மை பெருகவும் வழி செய்தார். வங்காளத்தில் 'பூசா' என்னுமிடத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்றைத் தொடங்கினார். பஞ்சாப் மாநிலத்தில் நீர்ப்பாசன வசதிகளை பெருக்கத் திட்டங்களை வகுத்தார். குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் உதவிகள் அளிக்க விவசாய வங்கிகளும் கூட்டுறவுக் கடனுதவி வங்கிகளும் ஏற்படுத்தப்பட்டன.

***தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம்:*** இச்சட்டத்தினால் இந்தியாவின் பழங்கால வரலாற்றைக் குறிக்கும் சான்றுகளையும், கட்டடங்களையும், சிற்பங்களையும் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டது. இச்சின்னங்களைப் பாதுகாக்கத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை ஒன்றையும் ஏற்படுத்தினார். இத்துறை பழஞ்சின்னங்கள் கிடைக்கக்கூடிய இடங்களை ஆய்

வதிலும் பணிபுரிந்தது. எனவே, கர்சனின் இந்தச் சட்டம் பாராட்டுதலுக்குரியதாகும்.

***கல்வி :*** 1904 ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம் இயற்றப்பட்டது. இதனால் பல்கலைக் கழக நிர்வாகத்தின் மீது அரசின் கட்டுப்பாடுகள் வலுவடைந்தன. பல்கலைக்கழகம் வகுத்த முறைகளின்படி கல்லூரிகளில் பாடத் திட்டம், தேர்வுமுறை போன்றவை இருத்தல் வேண்டும் என்பது இச் சட்டத்தின் கூறுபாடுகள் ஆகும்.

***வங்கப் பிரிவினை (1905):*** வங்காளத்தில் தேசிய இயக்கம் வலுவடைந்து வந்தது. அதனைத் ஒடுக்க கர்சன் வங்காளத்தை இரு தனி மாநிலங்களாகப் பிரித்தார். இந்துக்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் பகுதிகள் மேற்கு வங்காளம் என்றும், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் பகுதிகள் கிழக்கு வங்காளம் எனவும் பிரிக்கப்பட்டன. வகுப்புவாத அடிப்படையில், செய்யப்பட்ட இப்பிரிவினையை வங்க மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். நாடெங்கிலும் வங்கப் பிரிவினைக்கு எதிர்ப்புகள் தோன்றின. ஆறு ஆண்டுகள் இந்த எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றது. இறுதியில், 1911 இல் கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை கைவிடப்பட்டு, வங்காளம் மீண்டும் ஒரே மாநிலமாக இணைக்கப்பட்டது. கர்சனின் வங்கப் பிரிவினை தேசிய விடுதலை இயக்கத்தை ஊக்குவித்தது.

***பதவி விலகல்:*** படை நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்களைக் கர்சன் செய்தார். இதனால், அவருக்கும் பிரிட்டிஷ் இந்தியப் படையின் தளகர்த்தருக்குமிடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம் தளகர்த்தரை ஆதரித்ததால், கர்சன் பிரபு தமது பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

## இர்வின் பிரபு (1926-31)

இந்திய தேசிய இயக்கம் மிகத் தீவிரமாக நடை பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இர்வின் பிரபு அரசப் பிரதிநிதி ஆனார். எனவே, பல அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டிய நிலையில் அவர் இருந்தார்.

1919ஆம் ஆண்டு மான்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் "இரட்டை ஆட்சி" முறை தேசிய காங்கிரசுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மேலும் பல அரசியல் உரிமை களை இந்தியர்கள் பெற விரும்பினர். எனவே, இர் வின் பிரபு அரசப் பிரதி நிதியாக இருந்தபோது 1927இல் சைமன் குழு இந்தியாவிற்கு அனுப்பப் பட்டது.சர் ஜான் சைமன் என்வரின் தலைமையில் வந்த அந்தத் தூதுக்குழு வில் ஒரு இந்தியர்கூட அங்கத்தினராக இல்லை. எனவே, அந்தத் தூதுக் குழுவினர் சென்ற இடங்களிலெல்லாம் எதிர்ப்பு இயக் கங்களும் கதவடைப்புகளும் நடைபெற்றன



படம் 7. இர்வின் பிரபு

பல இடங்களில் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடுகளும் நடந்தன. 1928இல் கல்கத்தாவில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாடு, இங்கிலாந்து ஓராண்டிற்குள் "டொமினியன் அந்தஸ்து" அளிக்க வேண்டுமென்ற தனது கோரிக்கையை வெளியிட்டது. காங்கிரசின் நியாயமான கோரிக்கையைப் பிரிட்டன் புறக்கணித்தது. எனவே, காங்கிரஸ் 1929இல் டிசம்பர் மாதம் லாகூரில்

நடைபெற்ற மாநாட்டில் "முழுச் சுதந்தரம்" அடைவதே தனது இலட்சியமென அறிவித்தது. 1930 ஜனவரி 26ஆம் நாள், இந்தியாவின் சுதந்தர நாளாக நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது. காந்திஜி சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். இர்வின் பிரபு காங்கிரஸ் தலைவர்களை சிறைப்படுத்தினார். அவர்களது உடைமைகள் அனைத்தும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்விதமான சூழ்நிலையில் சைமன் குழு தனது அறிக்கையை வெளியிட்டது. அதன்படி இலண்டனில் ஒரு வட்ட மேசை மாநாடு கூட்டப்பட்டது. அதில் கலந்து கொள்ளுமாறு அனைத்து இந்தியக் கட்சிகளும் அழைக்கப்பட்டன. முதல் மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. அதனைப் புறக்கணித்தது. ஆதனால் மார்ச்சு 1931இல் காந்தி-இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இந்தியர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. காந்திஜி உள்பட பல காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் விடுதலை செய்யப்பட்டனர். காந்திஜி சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைத்தார். 1931இல் நடைபெற்ற இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் அவர் கலந்துகொண்டார்.

இங்கிலாந்தில் கன்சர் வேடிவ் கட்சினர் இர்வின் பிரபுவைத் திறமையற்றவர் என்று கூறி அவரைப் பதவி நீக்கம் செய்யவேண்டுமென்றும் கோரினர். எனினும், அவர் தமது பதவிக் காலம் முடிந்த பின்னரே நாடு திரும்பினார்.


இர்வின் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டங்களில் குறிப்பிடத்தக்கவை இரண்டு ஆகும். அவை: சிறுவர் மணம் தடை செய்யும் "சாரதாச் சட்டம்", சமூகநலனைக் கருதிச் செய்யப்

பட்டதாகும். ஆக்ரா, ஆந்திரா, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்குத் தக்க சட்டங்கள் இயற்றப்பட்டன.

## மௌண்ட்பேட்டன் பிரபு (1947-48)

வேவல் பிரபுவிற்குப் பின் மௌண்ட்பேட்டன் பிரபு மார்ச்சு 1947இல் இந்தியாவின் அரசப் பிரதிநிதி ஆனார். ஆங்கில அரசு இந்தியாவிற்குச் சுதந்தரம் அளிப்பதும், இந்தியத் துணைக் கண்டத்தைப் பாகிஸ்தான், இந்தியா என்ற இரு தனி நாடுகளாகப் பிரிப்பதும் தவிர்க்க முடியாதவை என்று உணர்ந்தது. சிக்கல் மிகுந்த இந்த மாற்றங்களைத் தக்க முறையில் செயல்படுத்தக்கூடிய திறமை மௌண்ட்பேட்டனிடம் தான் உண்டு என்பதால், அவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். அவர் பல இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின் இலண்டன் சென்று அங்கும் பிரிட்டிஷ் அமைச்சர்களுடன் பேச்சுகள் நடத்தினார். அதன் பின்னர் ஜூன் 3, 1947இல் தமது திட்டத்தை வெளியிட்டார். அத்திட்டத்தின்படி இந்தியா, பாகிஸ்தான் என இந்தியா இரு தனி நாடுகளாகப் பிரிக்கப்படும். இரு நாடுகளும் டொமினியன் அந்தஸ்து பெற்ற சுதந்தர நாடுகளாகத் திகழும். வங்காளம், பஞ்சாப், ஒவ்வொன்றும் இரு மாநிலங்களாகப் பிரிக்கப்படும். கிழக்கு வங்காளமும் மேற்குப் பஞ்சாபும் பாகிஸ்தானுடன் இணைக்கப்படும். கிழக்குப் பஞ்சாபும் மேற்கு வங்காளமும் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்படும்.

இந்திய தேசிய காங்கிரசும் முஸ்லிம் லீகும் மௌண்ட்பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1947ஆம் ஆண்டு இந்திய சுதந்தரச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1947ஆம் ஆண்டு




படம் 8. மௌண்ட்பேட்டன் திட்டத்தின் கீழ் இந்தியா

ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் "அதிகார மாற்றத்" திற்கான நாள் குறிப்பிடப்பட்டது. அதன்படியே ஆகஸ்டு திங்கள் 14, 15ஆம் நாட்களில் பாகிஸ்தான், இந்தியா என்ற இரு புதிய சுதந்தர நாடுகள், முறையே ஏற்பட்டன.

இந்தியா சுதந்தர நாடானாலும் "பிரிட்டிஷ் காமன்வெல்த்"தில் தொடர்ந்து அங்கம் வகித்தது. இந்தியத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி அரசப் பிரதிநிதியான மௌண்ட்பேட்டன் பிரபு சுதந்தர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் ஆனார். அவர் அப்பதவியை ஜூன் 1948 வரை வகித்தார்.

பிரிட்டிஷ் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும் சுதந்தர இந்தியாவின் தலைமை ஆளுநராகவும் பொறுப்புகள் வகித்த மௌண்ட்பேட்டன் பிரபு சிக்கல்கள் மிகுந்த அரசியல் பிரச்சினைகளைந் நன்கு புரிந்து கொண்டு திறம்படச் செயலாற்றினார். "அதிகார மாற்றம்" என்ற சிக்கலான பிரச்சினைக்குத் தக்க முறையில் தீர்வுகண்டது அவரது திறமைக்குப் பெரும் எடுத்துக்காட்டாகும். அவரது நேர்மையான பண்புகள் இந்தியத் தலைவர்களிடையே அவர் மதிப்பை உயர்த்தியது. அவரது நட்பும், ஆலோசனைகளும், புதிதாகப் பொறுப்பு மிக்கப் பதவிகளை ஏற்றுக்கொண்ட இந்திய தலைவர்களுக்கு மிகவும் பயன்பட்டன. அவர் சுதேச மன்னர்களைச் சந்தித்துப் பேசி இந்திய ஒன்றியத்தில் அவர்களுடைய அரசுகள் இணையுமாறு செய்தார். சுதந்தர இந்தியா, யாதொரு மனக்கசப்பின்றி இங்கிலாந்து நாட்டுடன் தொடர்ந்து நல்லுறவு வைத்துக் கொண்டிருப்பதில் மவுன்ட்பேட்டனின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். புதிய இந்தியாவைப் பல இன்னல்கள் எதிர்நோக்கி இருந்த காலத்தில், நல்ல வழிகாட்டியாக இருந்து காத்தவர் மௌண்ட்பேட்டன் பிரபு ஆவார்.

## பயிற்சி

I. பின்வரும் விடைகளில் எது மிகவும் சரியானது ?

1. கானிங் பிரபு ஆட்சியில் நிகழ்ந்த சிறப்பான நிகழ்ச்சி :

(அ) 1861இல் நிறைவேற்றப்பட்ட இந்தியக் கவுன்சில் சட்டம்.

(ஆ) 1861இல் ஏற்பட்ட பஞ்சம்.

(இ) 1859இல் நிறைவேற்றப்பட்ட வங்காளக் குடிவாரச் சட்டம்.

(ஈ) 1857இல் நிகழ்ந்த முதல் இந்திய சுதந்தரப் போர்

2. ரிப்பன் பிரபு இந்தியர்களின் அன்பைப் பெறக் காரணம் :

(அ) அவர் பரந்த நோக்கமுடையவர்.

(ஆ) அவர் தலசுய ஆட்சி முறையை ஏற்படுத்திக் கொண்டவர்.

(இ) அவர் இந்தியர்மேல் அன்பும், இரக்கமும் கொண்டவர்.

(ஈ) சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்வ தற்குத் தடை விதித்தார்.

3. இந்திய மக்கள் கர்சன் பிரபுவை வெறுக்கக் காரணம் :

(அ) அவர் ஓர் ஏகாதிபத்தியவாதி ஆவார்.

(ஆ) அவர் திபெத்தை ஆங்கிலப் பேரரசுடன் இணைத் துக்கொண்டார்.

(இ) பல்கலைக் கழகங்களின் மீதான அரசாங்கக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தினார்.

(ஈ) அவருக்கும், பிரிட்டிஷ் இந்தியப் படைத் தளகர்த் தருக்கும் இடையே கருத்து மோதல்கள் ஏற் பட்டன.

4. சைமன் குழுவை இந்திய மக்கள் புறக்கணிக்கக் காரணம் :

(அ) அதில் இந்தியர் ஒருவர்கூட உறுப்பினராக இல்லை.

(ஆ) 1919ஆம் ஆண்டு மான்டேகு-செம்ஸ்போர்ட் சீர் திருத்தங்களினால் காங்கிரஸ் திருப்தி அடைய வில்லை.

(இ) பிரிட்டிஷ் அரசு இந்தியர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்தது.

(ஈ) இர்வின் பிரபு கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்.

5. மௌண்ட்பேட்டன் பிரபு இந்திய மக்களின் அன்பைப் பெற்றதற்கு காரணம்:

(அ) அவர் சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணை வதற்கு உதவினார்.

(ஆ) அவர் இந்தியாவிற்கு அதிகார மாற்றம் செய் வதில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவைத்தார்.

(இ) மிக நெருக்கடியான காலத்தில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றார்.

(ஈ) இந்தியாவை இரு தனி நாடுகளாகப் பிரித்தார்.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களிடம் கானிங் பிரபு இரக்கமுடன் நடந்து கொண்டதால் அவர் ______ என அழைக்கப்பட்டார்.

2. ரிப்பன் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சீர்திருத் தங்களில் மிக முக்கியமானதெனக் கருதப்படுவது ______ ஆகும்.

4. ______ இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு ''முழுச் சுதந்தரம்'' தனது இலட்சியமென அறிவித்தது.

5. ______ சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் ஆவார்.

III. குறுகிய விடை எழுதுக:

1. முதல் இந்திய சுதந்தரப் போர் முடிவடைந்ததும், நாட்டில் அமைதியும், ஒழுங்கும், ஏற்படுத்த கானிங் பிரபு எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

2. தலசுய ஆட்சி மன்றங்கள் ஆற்றிய பணிகள் யாவை?

3. கர்சன் பிரபு, வங்காளத்தை ஏன் பிரித்தார்? மக்கள் அந்தப் பிரிவினையை ஏன் எதிர்த்தனர்?
4. 1931ஆம் ஆண்டு ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் விளைவுகள் யாவை?
5. "மௌண்ட்பேட்டன் திட்டம்" என்பது யாது?

விரிவான விடை எழுதுக:

1. கானிங் பிரபு செய்த சீர்திருத்தங்களில் ஏதேனும் மூன்றினை விவரி.
2. "இல்பர்ட் மசோதா"வினைப் பற்றி விவரி.
3. கர்சனின் ஆட்சியில் ஏற்பட்ட உள்நாட்டுச் சீர்திருத்தங்களில் நான்கினை விவரி.
4. இர்வின் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.
5. மௌண்ட்பேட்டன் பிரபுவின் ஆட்சியில் இந்தியா எவ்வாறு சுதந்தரம் பெற்றது?

## செய்முறைப் பயிற்சி


1. இந்திய தேசப் படத்தில் மௌண்ட்பேட்டன் திட்டத்தின் கீழ் உருவான இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைக் குறிப்பிட்டு அவற்றின் தலைநகரங்களையும் குறிப்பிடுக.
2. இந்திய அரசப் பிரதிநிதிகளின் படங்களைச் சேகரிக்கவும்.
3. ரிப்பன் மற்றும் கர்சன் ஆகிய இரு அரசப் பிரதிநிதிகள், அவர்கள் இந்தியர்களிடம் கொண்டிருந்த மாற்றுக் கருத்துகளை விளக்கும் ஒரு கற்பனை உரையாடல் எழுதுக (ஆசிரியர் உதவியுடன்)
4. உங்கள்ஊர் பஞ்சாயாத்துஒன்றியம் அல்லது நகராண்மைக் கழகத்தின் பணிகளை நேரில் சென்று அறிதல்.
5. உங்கள் ஊரிலுள்ள பஞ்சாயத்து ஒன்றியம் அல்லது நகராண்மைக் கழகம் கூட்டத்திற்கு நேரில் சென்று கவனித்தல்.

# 3. பிரிட்டிஷ் இந்தியாவில் ஐரோப்பியர் செல்வாக்கு

## ஆசியாவில் ருஷ்ய ஆதிக்கத்தின் வளர்ச்சி

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து, கடல் கடந்த வாணிகம், கப்பல் போக்குவரத்து, தொழில் நுண்ணியல், அரசியல் அமைப்பு ஆகிய பல துறைகளில் ஐரோப்பிய நாடுகள் மிகுந்த முன்னேற்றம் அடைந்து இருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டன், பிரான்சு, ஹாலந்து ஆகிய நாடுகள் முன்னணியில் இருந்தன. இந்த நாடுகளில் வணிகர்கள், கப்பல் சொந்தக்காரர்கள், பொருள் உற்பத்தியாளர்கள் போன்ற நடுத்தர வகுப்பு மக்கள் அரசு மற்றும் பொருளாதாரத் துறைகளின் மீது மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இந்த முதலாளிகள் ஆசிய நாடுகளில் தங்கள் குடியேற்ற ஆதிக்கத்தை அமைக்கப் பல போர்களில் ஈடுபட்டனர்.

ருஷ்யா, மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வெகுகாலத்திற்குப் பின்னர்தான் வாணிகம் மற்றும் குடியேற்ற ஆதிக்கப் போட்டிகளில் இறங்கியது. ஆனால், ஆசியாவில் ஏற்கனவே மற்ற நாடுகள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டதைக் கண்டது. எனவே, அது தன் அண்டை நாடுகளான பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளின் மீது தன் ஆதிக்கத்தை நிலைநாட்டத் திட்டமிட்டது. ஆனால், மேலும் பல குடியேற்றங்களை அமைக்கவும் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளில் தன் ஆதிக்கத்தை விரிவுபடுத்தவும் பிரிட்டனும் விரும்பியது. எனவே, பிரிட்டனுக்கும், ருஷ்யாவுக்குமிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது.




படம் 9. ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கப்போட்டி.

1813இல் பாரசீகத்துடன் ருஷ்யா ஓர் உடன்பாடு செய்துகொண்டது. ஆனால், 1814இல் பிரிட்டன் பாரசீகத்தை ருஷ்யாவின் செல்வாக்கிலிருந்து பிரித்து ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அவ்வெற்றி யானது நீண்டநாள் நீடிக்கவில்லை. சில ஆண்டு களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த புதிய பாரசீக மன்னர் (1833) ருஷ்யாவின் நண்பராய் விளங்கினார். அவர், 1837-38இல் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஆப்கானிய நகரமான ஹீரட்டைத் தாக்கினார். ஆனால், பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரின் துணிவான முயற்சிகளின் ஆதரவுடன், ஆப்கானியர்கள் ஹீரட் நகரத்தைப் பாதுகாத்தனர்.

எனவே, பாரசீகர்களால் அந்நகரைக் கைப்பற்ற முடியவில்லை. தலைமை ஆளுநர் ஆக்லண்ட் பிரபு *ருஷ்ய பீதியை* அல்லது ருஷ்யர்களினால் ஏற்படக் கூடிய அபாயம் என்ற அச்சத்தைப் பெரிதுபடுத் தினார்.

இந்தியாவிற்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையே அமைந்துள்ள வடமேற்கு எல்லைப்புறப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசு விரும்பியது. எனவே, அந்நாட் டினைப் பணியவைக்க ஆக்லண்ட் பிரபு முதலாம் ஆப்கானியப் போரினைத் தொடங்கினார் (1839-41). ஆனால், அப்போரில் ஆங்கிலப்படை முழுவதும் அழிக்கப்பட்டது. ஆக்லண்டிற்குப்பின் ஆட்சிக்கு வந்தவர்கள் ருஷ்ய அபாயத்திலிருந்து மீட்பதாகக் கூறி, (1843) சிந்து, பஞ்சாப் (1849) ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினர். உண்மையெதுவெனில், ஏதேனும் காரணம் கூறி, மேலும் மேலும் நாடுகளைக் கைப்பற்றுவதே அவர்களின் முக்கிய நோக்கமாகும். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலேயர் இரண் டாம் ஆப்கானியப் போரினைத் தொடங்கினர். (1878-80) இப்போரின் தொடக்கத்தில் ஆங்கிலப்

படைகள் சில இடங்களில் வெற்றி பெற்றன. ஆப்கானிஸ்தானத்தின் பல பகுதிகள் ஆங்கிலேயர் வசமாயின. ஆப்கானிய அமீர் (மன்னர்) ருஷ்ய துருக்கிஸ்தானத்திற்குத் துரத்தப்பட்டார். ஆங்கிலேயர் தங்கள் கைப் பொம்மையான ஒருவரை ஆப்கானிய அமீராக நியமித்தனர். ஆப்கானிஸ்தானத்தைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்திவிட்டதாக ஆங்கிலேயர் மகிழ்ந்திருந்தனர். ஆனால் ஒரு சில மாதங்களுக்குள், ஆப்கானியர் ஒன்றாகத் திரண்டெழுந்து, ஆங்கிலேயர்களைத் தங்கள் நாட்டிலிருந்து விரட்டிவிட்டனர். இதன் விளைவாக லிட்டன் பிரபு அரசப்பிரதிநிதிப் பதவியைத் துறக்க நேரிட்டது.

1884இல் ருஷ்யாவிற்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையே எல்லைப் பிரச்சினை தலைதூக்கியது. அடுத்த ஆண்டில் பஞ்டே என்னும் எல்லைப்புற நகரிலிருந்த ஆப்கானியர்களை ருஷ்யர்கள் விரட்டிவிட்டனர். ஆப்கானியர்களின் உதவிக்குப் பிரிட்டன் ஒரு படையை அனுப்பியது. அதிருஷ்டவசமாக, ஓர் உடன்பாடு ஏற்பாடாயிற்று. அதன்படி ருஷ்யாவிற்கு பஞ்டே கிடைத்தது. அதற்கு ஈடாக ஆப்கானிஸ்தானத்திற்கு 'ஜுல்பீகர் கணவாய்' அளிக்கப்பட்டது. ருஷ்யா, ஆப்கானிஸ்தான நாடுகளுக்கிடையேயான எல்லை முறையாக வரையறுக்கப்பட்டது. பின்னர் 'பாமீர்' பிரதேசத்தின் எல்லைக் கோடும் முறையாக ஏற்பட்டது.

ஆப்கானியப் போர்களுக்கு இந்தியர்களையும், இந்தியப் பணத்தையும் இங்கிலாந்து உபயோகித்துக் கொண்டது. ருஷ்யாவின் ஆக்கிரமிப்பு அபாயத்திலிருந்து இந்தியாவை மீட்பதற்காகவே இப்போர்கள் என்று பிரிட்டன் கூறியது உண்மையல்ல. தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவேதான் பிரிட்டன் இப்போர்களில் ஈடுபட்டது என்பதுதான், ஆப்கானியப் போர்களுக்கான உண்மைக் காரணமாகும்.

## இந்தியாவில் தொழில் வளர்ச்சி

இந்தியாவில் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சியில், கைவினைத் தொழில்களும், மற்ற தொழில்களும் நலிவுற்றன. இங்கிலாந்தில் உற்பத்தியான பொருள்களின் இறக்குமதியை நம்பி இருக்கவேண்டிய சூழ்நிலை இந்தியாவிற்கு ஏற்பட்டது. மேலும், அந்நாட்டிற்குக் கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஒரு நூற்றாண்டு ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, இந்தியாவிலேயே சில தொழில்களைத் தொடங்குவது பயனளிக்கும் என்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். எனவே, தங்களது சுய இலாபத்தைக் கருதி அவர்கள் இந்நாட்டில் சில தொழில்களைத் தொடங்கினர். பிரிட்டிஷ் முதலீட்டைக் கொண்டு தொடங்கப்பட்ட சில தொழில்களின் வளர்ச்சி பற்றி இனித் தெரிந்துகொள்வோம்.

1855இல் வங்காளத்தில் முதல் சணல் தொழிற்சாலையை ஓர் ஆங்கிலேயர் அமைத்தார். தொழிற்சாலைக்குத் தேவையான தொழில் வல்லுநர்களையும், இயந்திரங்களையும், அவர் சணல் ஆலைத் தொழிலுக்குப் புகழ் பெற்றிருந்த ஸ்காட்லாந்தில் உள்ள டண்டியிலிருந்து கொண்டுவந்தார். பிரிட்டனிலும், அதன் குடியேற்ற நாடுகளிலும் சணல் பொருள்களுக்குத் தேவை அதிகமாக இருந்தது. 1869இல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட பிறகு சணல் ஆலைத் தொழில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சியானது தொன்மை வாய்ந்த சணல் கைத்தறித் தொழிலைச் சிதைத்தது.

முதல் உலகப் போரின்போது சணல் பொருள்களின் தேவை பெருகியது. சணல் தொழில் எப்போதுமே ஏற்றுமதியைச் சார்ந்திருந்தது. முதல் உலகப் போரின் முடிவுக்குப் பிறகுதான், இந்திய முதலாளிகள் சணல் ஆலைத் தொழிலில் ஈடுபட்டனர். இரண்டாம் உலகப்

போரின்போது சணல் பொருள்களுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகரித்தது. இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் சணல் தொழில் வேகமான முன்னேற்றம் அடைந்தது.

1870இல் கல்கத்தா அருகே பிரிட்டிஷ் நிர்வாகத்தின்கீழ்த் துவங்கப்பட்ட பல்லி காகித ஆலை தான் இந்தியாவின் முதல் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும். அடுத்து, 1882இல் டிடாகர் காகிதத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. இந்தியர்களாலேயே நிர்வகிக்கப்பட்ட ஆலை லக்னோவில் 1882இல் துவங்கப்பட்டது. 1891இல் வங்காளக் காகித ஆலை ராணிகஞ்சில் துவங்கப்பட்டது. 1930 வரை பிரிட்டிஷ் மூலதனம்தான் காகிதத் தொழிலில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதற்குப் பிறகு, இந்திய முதலீடு இந்தத் தொழிலில் வேகமாக நுழைந்தது. 1947இல் இந்தியாவில் 16 காகிதத் தொழிற்சாலைகள் இருந்தன.

தேயிலை, காப்பித் தோட்டங்கள் பிரிட்டிஷ் முதலீடு செய்யப்பட்ட மற்றொரு முக்கியமான பகுதியாகும். பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளுக்கு மலிவான விலையில் ஏராளமான மலைப் பகுதிகள் வழங்கப்பட்டன. 1839இல் அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் அமைக்கப்பட்டது. கச்சாரில் 1885இல் முதல் தேயிலைத் தோட்டம் தொடங்கப்பட்டது. தராயில் 1862-லும், துவார் மலைகளில் 1874-லும் தேயிலைத் தோட்டங்கள் துவங்கப்பட்டன. ஆரம்பத்திலிருந்தே பிரிட்டிஷ் முதலாளிகள் தேயிலைத் தொழிலில் அதிக நாட்டம் செலுத்தினர். இந்தியாவில் உற்பத்தியான தேயிலையில் 90% இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில், பன்னாட்டு அங்காடியில், இந்தியத் தேயிலை சீனத் தேயிலையைப் பதிலீடு செய்தது. காப்பித் தோட்டங்கள் 1830-லிருந்து ஐரோப்பியர்களால் துவக்கப்பட்டன. சென்னை

மாகாணம், திருவாங்கூர், மைசூர், கூர்க் ஆகியவை முக்கிய உற்பத்தி பிரதேசங்களாகும். உற்பத்தியான காப்பி, பெருமளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

வங்காளத்தில் 1820இல் ராணிகஞ்சில் முதன் முதலாக நிலக்கரிச் சுரங்கம் திறக்கப்பட்டது. 1893இல் ஜாரியா சுரங்கம் திறக்கப்பட்டது. இந்திய இரயில்வே நிறுவனங்கள் பெருமளவில் நிலக்கரியைவாங்கி வந்தன. அரசும் நேரடியாக நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் இறங்கியது. உதாரணமாக மத்திய இந்தியா (மத்தியப் பிரதேசம்), ஐக்கிய மாகாணங்கள் (உத்திரப்பிரதேசம்), பஞ்சாப் ஆகிய இடங்களைச் சொல்லலாம்.

இந்திய அரசின் போர்வீரர்களுக்கான காலணிகள், மற்றும் தோலினாலான பொருள்களைச் செய்வதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாகப் பதனிட்ட தோல் தொழில் இந்தியாவில் வளர்ந்தது எனலாம். 'க்ரோம்' பதனிடும் முறை கண்டுபிடிக்கப் பட்ட பிறகு உயர்ந்தரக தோல் உற்பத்தி பெருகியது. நவீன முறையில் தோல் உற்பத்தித் தொழில் சென்னை மாகாணத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் மற்ற மாகாணங்களில் இந்தத் தொழில் பரவியது.

பருத்தி நெசவாலைகள் இந்தியாவில் தான் முதலில் தோன்றியவைகளாகும். 1818இல் கல்கத்தாவில் முதல் பருத்தி நெசவாலை தொடங்கப்பட்டது. ஆனால் விரைவிலேயே பம்பாய் நகரத்தில்தான் இந்தத் தொழில் இடச் செறிவடைந்திருந்தது. கௌவாஸ்ஜி நானாபாய் தாவார் என்ற பார்ஸி தொழிலதிபர் பம்பாயில் 1851இல் ஒரு பருத்தி நெசவாலயைத் தொடங் கினார். இந்திய பருத்தி நெசவாலைகளின் வளர்ச்சி யைக் கண்டு, இங்கிலாந்தில் லங்காஷயர் ஆலை அதிபர்கள் அச்சம் கொண்டனர். இந்தியாவில் இறக்கு மதியாகும் ஆங்கில நாட்டுப் பருத்தித் துணிகளின்

வரியை நீக்கும்படி கோரினர். பிரிட்டிஷ் அரசு அவர்கள் கோரிக்கைக்கு இணங்கியது. எனினும், இத் தொழிலில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டது. 1900-க்குப் பிறகு அகமதாபாத், கான்பூர் ஆகிய இடங்களில் பருத்தி நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஷோலாப் பூர், பரோச், பரோடா, சூரத், ஹூப்ளி போன்ற பம்பாய் மாகாணத்தின் மற்ற பகுதிகளிலும் பருத்தி ஆலைத்தொழில் பரவியது. இந்த நூற்றாண்டின் முற் பகுதியில், கோயமுத்தூரில் பருத்தி ஆலைகள் தொடங் கப்பட்டன. இவ்வாறாகப் பருத்தி நெசவுத்தொழில் இந்தியாவில் ஒரு முக்கியமான தொழிலாக வளர்ச்சி அடைந்தது.

1874இல் ஐரோப்பியத் தொழில் அதிபர்களால் பராக்கார் இரும்பு உருக்கு ஆலை துவங்கப்பட்டது. இது வங்காள இரும்புத் தொழிற்சாலைக்கு முன்னோ டியாக விளங்கியது. ஜாம்ஷெட்ஜி டாட்டா 1880இல் மத்திய மாகாணத்தில் ஓர் இரும்பு தொழிற்சாலை நிறுவ முயன்றார். ஜாம்ஷெட்பூரில் டாட்டா இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைத்த பிறகு ஜாம்ஷெட்ஜி 1904இல் காலமானார். அமெரிக்க தொழில் வல்லுநர் களின் உதவியுடன், ஜெர்மானிய இயந்திரங்களைக் கொண்டு இந்த நிறுவனம் 1912இல் தேனிரும்பு உற்பத்தியைத் தொடங்கியது. சூயஸ்கால்வாய்க்குக் கிழக்கே பிரிட்டிஷ் பேரரசில் இருந்த இரும்பு உருக்குத் தொழிற்சாலை இஃது ஒன்றேயாகும். 1918இல் இந்திய இரும்பு உருக்கு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. பத்ரா வதியில் மைசூர் இரும்பு உருக்கு ஆலை 1918இல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், இந்தியாவில் ஆலைத் தொழில்களின் வளர்ச்சி பின்தங்கிய நிலை யிலேயே இருந்தது. நவீன முறையில் அமைக்கப்பட்ட ஆலைத் தொழில்கள் ஆரம்ப நிலையிலேயே இருந்தன.

சுதந்தரத்திற்குப் பிறகுதான் நிலையான, விரைவான முன்னேற்றம் ஏற்பட்டது.

*பிரிட்டனின் வாணிக வளர்ச்சி*

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிக நிறுவனத்தின் வாணிகமும், செல்வாக்கும் அமைதியாகவும் அதே நேரத்தில் படிப்படியாகவும் விரிவடைந்து வந்தது. சென்னை, மசூலிப்பட்டினம், சூரத், கல்கத்தா மற்றும் இதர இடங்களில் வாணிகக் குழு இந்தியப் பருத்தியை வாங்கி, அதை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்து வந்தது. வங்காளத்தில் 'திவானி' என்ற தனி உரிமையைப் பெற்றபின், அதன் வாணிகம் துரிதமாக விரிவடைந்தது. வாணிகம் என்ற பெயரில் அது கொள்ளையடித்து வந்தது என்றே கூறலாம். இந்தியக் குடியானவர்களும், கைவினைஞர்களும் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். மேலும், வெள்ளையர்கள் நிர்ணயித்த குறைந்த விலைக்கே விற்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. மற்றவர்கள் இந்தியப் பொருள்களை வாங்குவதும், விற்பதும் வாணிகக் குழுவினரால் தடுக்கப்பட்டுவிட்டது. மேலும், வாணிகக் குழுவின் ஊழியர்களும் தனிப்பட்ட முறையில் வாணிகம் செய்து வந்தனர். இவற்றாலெல்லாம், இந்திய வாணிகர்களின் வாணிபம் தடைப்பட்டுவிட்டது.

ஆங்கில வணிகர்கள் வரி ஏதும் செலுத்தாமலேயே வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இந்திய வணிகர்கள் மீது பலவிதத் தடைகள் விதிக்கப்பட்டன. அவர்கள் சுங்கவரி மற்றும் இதர வரிகள் செலுத்தவேண்டி வந்தது. கிழக்கிந்திய நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டிருந்த ஏகபோக உரிமைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1813இல் நீக்கப்பட்டன. 1833இல் மற்றொருமுறை பிரிட்டிஷ் அரசாங்கம் ஆங்கில

வாணிகக்குழு அனுபவித்து வந்த தனி உரிமை அனைத்தையும் நீக்கிவிட்டது. என்றாலும், 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில், வாணிகக் குழுவின் இந்தியாவுடனான வாணிகம் மேம்பட்ட நிலையிலேயே இருந்து வந்தது.

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இங்கிலாந்தின் இந்திய வாணிகத்தில் அக்கறை கொண்டது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரிகள் அனைத்தும் நீக்கப்பட்டன. ஆனால், அதே நேரத்தில், இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரிகள் உயர்த்தப்பட்டன. இந்திய வாணிகப் பொருள்களினால் ஏற்படக்கூடிய போட்டியைத் தடுக்கவும், பிரிட்டிஷ் தொழில்களைப் பாதுகாக்கவும் இத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாக, இந்தியா ஒரு குடியேற்ற ஆதிக்கத்திற்குட்பட்ட நாடாக மாற்றப்பட்டது. பிரிட்டிஷ் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு உரிய சந்தையாக மாறிவிட்டது. உணவு தானியங்களையும், கச்சாப் பொருள்களையும் உற்பத்தி செய்யும் நாடாக மாறியது. இந்தியக் கப்பல் தொழில் நசுக்கப்பட்டது. இந்தியக் கப்பல்களில் பொருள்கள் ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டது. புகழ்பெற்ற இந்தியக் கைத்தறித் தொழில் நலிவுற்றது. எல்லா வகைகளிலும், இந்தியர்களின் வாணிகப் போட்டியை இங்கிலாந்து நசுக்கிவிட்டது.

பிரிட்டன் இருப்புப் பாதைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கடலோர மற்றும் பன்னாட்டுக் கப்பல் போக்குவரத்து, செய்தி நிறுவனங்கள், வங்கிகள் போன்ற நவீன வசதிகள் அனைத்தையும் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தது. எனவே, அவை பிரிட்டிஷாரின்

தொழில், வாணிகம், ஆகியவைகளின் வளர்ச்சிக்கு நன்றாகப் பயன்படுத்தப்பட்டன. பிரிட்டிஷ் மூலதனம் பெருகவும், வளர்ச்சி அடையவும் இந்தியா ஆளப்பட்டு வந்தது.

வாணிகத் தடைகள், வரி விதிப்புகள் ஆகியன வற்றினால் மட்டுமன்றி பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தனது வாணிக நலன்களைப் பாதுகாக்கத் தேவையற்ற போர்களிலும் ஈடுபட்டது. ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு வடமேற்குப் பகுதியில் வளர விடாமல் தடுக்க, ஆப்கானியப் போர்களில் இறங்கியது. அதே போன்று, கிழக்குப் பகுதியில் பிரெஞ்சு ஆதிக் கத்தை ஒழிக்கப் பர்மியப் போர்கள் நடைபெற்றன. பர்மாவின் இயற்கைச் செல்வங்களான காட்டுச்செல்வம், கனிப் பொருள்கள் ஆகியவற்றைத் தனது உடைமை களாக்கிக் கொள்ளப் பிரிட்டிஷ் அரசாங்கம் பர்மாவின் மீது படையெடுத்து, அந்த நாட்டைத் தன் ஆதிக் கத்தின் கீழ்க் கொண்டு வந்தது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட காலம் தொட்டே, இந்த நாட்டின் வெளிநாட்டு வாணிகம் ஆங்கிலேயர் வசம் இருந்து வந்தது. 1869இல் சூயஸ் கால்வாய் திறந்துவிடப்பட்ட பிறகு, ஆங்கிலேயரின் வாணிகம் வேகமாக வளர்ச்சி அடைந்தது. என்றாலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஆங்கில வாணிகத்திற்குப் போட்டியாக ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகளும் தோன்றின. முதல் உலகப் போரின்போது வெளி நாட்டு வாணிகத்தில் பிரிட்டன் மற்ற நாடுகளைவிட முன்னணியில் இருந்தது. அந்தப் போரின் முடிவில் ஆங்கிலேயரின் வாணிகம் மீண்டும் சரியத் தொடங் கியது. எனினும், இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தில் இங்கிலாந்தின் பங்கு மிகுதியாகவே இருந்தது.

## பயிற்சி

I. பின் வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. பிரிட்டிஷ் இந்தியா ஆப்கானியப் போர்களில் ஈடுபட முக்கியக் காரணம்:

(அ) ருஷ்யாவின் ஆக்கிரமிப்பிலிருந்து இந்தியாவை பாதுகாத்தல்.

(ஆ) பாரசீக ஆதிக்கத்தைத் தடுத்தல்.

(இ) வடமேற்கு எல்லைப் பகுதியில் ஆப்கானியரின் செல்வாக்கைத் தடை செய்தல்.

(ஈ) வடமேற்கு எல்லைப் பகுதியைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருதல்.

2. பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியாவில் சில தொழிற்சாலைகளைத் தொடங்கினர். ஏனெனில்,

(அ) இந்தியாவில் கச்சாப் பொருள்கள், ஏராளமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

(ஆ) அவர்கள் நாட்டில் ஆலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவு.

(இ) இந்தியாவில் குறைந்த ஊதியத்திற்கு அதிகமான அளவில் தொழிலாளர்கள் கிடைத்தனர்.

(ஈ) பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் அவர்களுக்கு எல்லா வகைகளிலும் ஆதரவு அளித்தது.

3. இந்தியாவுடன் பிரிட்டிஷ் வாணிபம் அதிக அளவில் வளர்ச்சி அடைய முக்கியக் காரணம்.

(அ) வங்காளத்தில் ஆங்கிலேயர், திவானி உரிமை பெற்றனர்.

(ஆ) அவர்கள் வரி ஏதும் செலுத்தத் தேவையில்லை.

(இ) இந்திய வணிகர்கள் அதிகவரி செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) பிரிட்டிஷ் மூலதனம் பெருகவும், வளர்ச்சியடையவும் இந்தியா ஆளப்பட்டு வந்தது.

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. ஆசியாவில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட கடைசியாக வந்த ஐரேப்பிய நாடு ________ ஆகும்.
2. 'ருஷ்யபீதி' என்றஅச்சத்தைப் பெரிதுப்படுத்தியதலைமை ஆளுநர் ________ ஆவார்.
3. ________ ஆம் ஆண்டில் சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டது.
4. ________ என்ற புதிய பதனிடும் முறை கண்டுபிடிக்கப் பட்ட பிறகு நேர்த்தியான தோல்பொருள்களின் உற்பத்தி பெருகியது.
5. ________ என்பவர் முதன் முதலாகப் பருத்தி நெச வாலையைத் தொடங்கிய இந்தியர் ஆவார்.
6. இந்தியாவில் இரும்பு உருக்கு ஆலையை நிறுவிய இந்தியர் ________ ஆவார்.
7. கீழ்த்திசையில் பிரெஞ்சு ஆதிக்கத்தை ஒழிக்கவே, பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ________ போர்களில் இறங் கியது.

## III. குறுகிய விடை எழுதுக:

1. பாரசீகத்தில் ருஷ்ய ஆதிக்கம் ஏற்படுவதைப் பிரிட்டன் எவ்வாறு தடுத்து நிறுத்தியது?
2. முதல் ஆப்கானியப் போரை ஆக்லண்ட் பிரபு ஏன் தொடங்கினார்? அப்போரின் விளைவு யாது?
3. ஆப்கானியப் போர்களின் இறுதியில் ஏற்பட்ட உடன் பாடுகள் யாவை?
4. பிரிட்டிஷ் முதலீட்டுடன் தொடங்கப்பட்ட தொழில் துறைகள் யாவை?
5. இருபதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் வாணிகம் என் சரிவடைந்தது?

## IV. விரிவான விடை எழுதுக:

1. ஆப்கானியப் போர்களின் போக்கை விவரித்து எழுதுக.
2. இந்தியாவில் சணல் ஆலைத் தொழிலின் வளர்ச்சியைப் பற்றி எழுதுக.
3. இந்தியாவில் நிலக்கரி சுரங்கத் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியைப் புலப்படுத்துக.

4. **பருத்தி நெசவுத் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியைத் தெளிவு படுத்துக.**

5. **இந்தியாவுடன் பிரிட்டிஷ் வாணிகம் வளர்ச்சி அடைய அனுகூலமான காரணங்கள் யாவை?**

## செய்முறைப் பயிற்சி

1. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிடுக. வர்த்தகப் பொருட்காட்சிக்குச் சென்று பார்வையிடுக.

2. இந்தியாவில் பரவலாக இருக்கும் தொழில்கள், தொழில் நகரங்களை அட்லஸ் படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்க.

3. இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தின் புள்ளிவிவரங்களைத் திரட்டுக. (நாளேடுகள் வெளியிடும் சிறப்பு இதழ்கள், திங்கள் இதழ்கள், ஆண்டுச் சிறப்பு மலர்கள் ஆகியவற்றில் இவை வெளியிடப் படுகின்றன).

# 4. இந்தியப் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவு

## இந்தியத் தொழில்கள் அழிதல்

18ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் கைத்தொழில்கள் உயர்நிலையை அடைந்து இருந்தன. டாக்கா, மூர்ஷிதாபாத், லக்னோ, அகமதாபாத், நாகபுரி, மதுரை முதலிய இடங்கள் பருத்தித் தொழிலில் சிறப்படைந்து இருந்தன. டாக்கா நுண்துகில்களும் (மஸ்லின் ஆடைகள்) காஞ்சிபுரத்துப் பட்டாடைகளும், காஷ்மீரத்தின் சால்வைகளும் உலகப் புகழ் பெற்றவை. செம்பு, பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் காசி, நாசிக், பூனா, அகமதாபாத், விசாகப்பட்டினம், தஞ்சாவூர் போன்ற இடங்களில் செய்யப்பட்டன. மூர்ஷிதாபாத் சரிகை வேலைக்கும், இராஜபுதனம் முழுதும் வெள்ளி, தங்க, வைர நகை வேலைகளுக்கும் சிறப்புற்று இருந்தன.

இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் ஏற்பட்டதன் விளைவாக இந்தியக் கைத்தொழில்கள் படிப்படியாக நலிவுற்றன. 19ஆம் நூற்றாண்டு முழுவதும் கைத்தொழில்கள் சிதைந்தன எனலாம். சிதைவுக்குப் பல்வேறுக் காரணங்கள் இருந்தன.

1. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு விரிய, விரிய பல சுதேச மன்னர்கள் நாடாளும் உரிமை இழந்தனர். சுதேச மன்னர்களும், அவர்களின் மேலதிகாரிகளும் அளித்துவந்த ஆதரவு கைத்தொழில்களுக்குக் கிடைக்காமல் போயிற்று. அரசு ஆதரவை நம்பி இருந்த கைத்தொழில்கள் வேகமாக மறையத் தொடங்கின.

2. வெளிநாட்டு ஆடைகளை அணிவதும், வெளி நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவதும் அந்தஸ்தை உயர்த்துவதாகச் செல்வந்தர்கள் கருதினர்.

3. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி தோன்றியது. அதன் விளைவாக, தொழில்கள்யாவும் இயந்திரமய மாக்கப்பட்டன. குறைந்த விலையில் அதிகப் பொருள் கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவைகளுடன் இந்தியக் கைத்தொழில்கள் போட்டியிடமுடியாமல் தவித்தன.

4. ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியக் கைத் தொழில்களை அழித்து, இங்கிலாந்தின் உற்பத்தி யாளர்களை மேம்பாடு அடையச் செய்தார்கள். இந்தியா, கச்சாப் பொருள்களை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்து, அந்நாட்டு முற்றுப்பெற்ற பொருள் களை இறக்குமதி செய்யும் நாடாக மாற்றப்பட்டது.

*நெசவுத்தொழில் நலிவு*

ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட விசைத் தறிகள் இந்திய நெசவாளர்களின் பிழைப்பில் மண் தூவின. இந்தியப் பருத்தி, கம்பளி, பட்டுத் துணி வகைகள் உபயோகிப்பதை இங்கிலாந்து தடை செய்தது. கிழக்கிந்திய நிறுவனத்திற்காக நெசவு செய்ய வேண்டுமென்று இந்தியக் கைவினைஞர்கள் வற்புறுத் தப்பட்டனர். வரிவிதிப்பின் மூலம் இந்தியப் பொருள் கள் இங்கிலாந்துக்குச் செல்வதும் தடுக்கப்பட்டது. அதேசமயம், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் இயந்திர உற்பத்திப் பொருள்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசு, பொருள்களை ஏற்றுமதி செய்துவந்த இந்திய நாட்டை, அவற்றை விலை கொடுத்து வாங்கவேண்டிய இழி நிலைக்கு உருமாற்றிவிட்டது. கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்து, முற்றுப்பெற்ற பொருள்களை

இறக்குமதி செய்யும் ஒரு நாடாக உருமாற்றிவிட்டது. பிரிட்டிஷ் துணிவகைகள் இயந்திர வசதிகளோடு ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்ட பின்னர், அவைகளை விற்பதற்கான சந்தையாக இந்தியா மாற்றப்பட்டது. இந்தியச் சந்தையில் இங்கிலாந்தில் உற்பத்தியான துணிகள் வந்து குவிந்தன. எனவே, நம் நாட்டு நெசவுத் தொழில் அழிக்கப்பட்டது.

### *இந்தியாவின் செல்வம் வற்றுதல்*

இந்தியாவில் ஆங்கில ஆட்சி ஏற்பட்டதன் விளைவாக நம் நாட்டின் செல்வம் வற்றியது. பொருளாதாரச் சுரண்டல் நடத்தவே இந்தியா போன்ற நாடுகளைப் பிரிட்டிஷார் ஆண்டு வந்தனர். வணிகக் கழகத்தின் அலுவலர்கள் இந்திய நாட்டு நெசவாளர்களையும், கைவினைஞர்களையும் ஏகபோகமாகச் சுரண்டினர். இது இந்திய வாணிகர்களையும் மிகவும் பாதித்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் மூலவளங்கள் சுரண்டப்பட்டன. இலாபப் பங்குகள், கடன்களுக்கு வட்டி என்ற வகையிலும், அலுவலர்தம் படிகள், ஓய்வூதியங்கள், கட்டுப்பாட்டு மன்றம், வணிகக் கழகத்தின் இயக்குநர் மன்றம், இராணுவம் இவற்றின் செலவுகள் என்ற வகையிலும், இந்திய வருவாய்கள் பலவற்றையும் இங்கிலாந்து சுரண்டிக் கொண்டது. தம் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை விதித்தனர். 1857ஆம் ஆண்டு நடந்த முதல் சுதந்தரப் போராட்டத்தின் செலவுச்சுமை இந்தியாவின் மீது திணிக்கப்பட்டது. மேலும் ஆங்கிலேயர்கள், இந்தியாவுக்கு வெளியே நடத்திய ஆப்கானியப் போர், சீனப் போர்கள் ஆகியவற்றின் செலவுச்சுமையை இந்தியாவின் மீது திணித்தனர். பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகம்

ஏற்பட்டவுடனே வரிவிதிப்புத் திட்டங்கள் அனைத்தும் ஆங்கில ஆட்சிக்கும், ஆங்கில முதலாளிகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் செயல்பட்டன. தாதாபாய் நௌரோஜி போன்ற தேசபக்தர்கள் எப்படி இந்தியாவின் செல்வங்களை ஆங்கில அரசுத் தட்டிக்கொண்டு போகிறது என்பதைப் புள்ளிவிவரங்களுடன் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்கள்.

### போக்கு வரத்துச் சாதனங்களின் வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனம் தனது இராணுவப் போக்குவரத்தின் வசதிக்கென பழைய நெடுஞ்சாலைகளையும், தேசிய நெடுஞ்சாலைகளையும் புதுப்பித்தது. இத்துறையில் முதன் முதலில் கல்கத்தாவையும், டில்லியையும் இணைக்கும் பெரும் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதைச் செப்பனிட்டுச் செயல்படுத்திய பெருமை வில்லியம் பெண்டிங் பிரபுவையே சாரும்.

டல்ஹௌசி காலத்தில்தான் முதன்முதலாக இந்தியாவில் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. அவரது தீவிர முயற்சியால் 1853இல் பம்பாயிலிருந்து தானா என்ற நகருக்கு முதன் முதலாக இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. 1854-55ஆம் ஆண்டில் வங்காளத்தில் உள்ள ஹௌராவிலிருந்து இராணிகஞ்சுக்கும், 1856இல் சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன.

பொது அஞ்சல்துறை 1838இல் இந்தியாவில் ஏற்கெனவே நிறுவப்பட்டது. ஆனால் டல்ஹௌசி ஆட்சியில்தான் 1850ஆம் ஆண்டில் *அரையணா அஞ்சல் முறை* புகுத்தப்பட்டது. அஞ்சல் கட்டணத்திற்குப் பதிலாக அஞ்சல் தலையை ஒட்டும் முறையை அவர்தான் முதன் முதலில் கொண்டுவந்தார். அஞ்சல்

நிலையங்கள்யாவும் ஒரு தனியான அஞ்சல்துறையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அது ஒரு தலைமை இயக்குநரின்கீழ்ச் செயல்படுத்தப்பட்டது. மேலும் தந்திமூலம் செய்தி அனுப்பும் முறையினையும் அவர் புகுத்தினார். இதனால் செய்திகள் விரைவாக அனுப்ப முடிந்தது. இம்முறை முதன்முதலாக 1854ஆம் ஆண்டில் கல்கத்தாவிலிருந்து ஆக்ரா வரையில் அமைக்கப்பட்டது. 1857ஆம் ஆண்டில் இத்திட்டம் லாகூருக்கும், பெஷாவருக்கும் இடையே விரிவுபடுத்தப் பட்டது.

ஆங்கிலேயர் தங்களது நலனுக்காகவேதான் நவீனப் போக்குவரத்து மற்றும் செய்தி அனுப்பும் வசதிகளைப் புகுத்தினர் என்பது கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவில் ஆங்கில ஆட்சியினைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவர்களது வாணிகப் பெருக்கத்திற்காகவும், நிர்வாக வசதிக்காகவும் அவை அமைக்கப்பட்டன. முதல் இந்திய சுதந்தரப் போரினை ஒடுக்கி, ஆங்கிலேயரை வெற்றிகாணச் செய்ய இவை நன்குப் பயன்படுத்தப்பட்டன.

### இந்தியப்பொருளாதாரம்- விவசாயப்பொருளாதாரம்

18ஆம் நூற்றாண்டில் இந்தியா விவசாயத்திலும், தொழிலிலும் வளர்ச்சியுற்ற நாடாக இருந்தது. ஆனால், ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் ஏற்பட்டதன் விளைவாக இந்தியப் பொருளாதாரத்தில் நிலவியிருந்த சமநிலை பாதிக்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டில் அது ஒரு விவசாய நாடாக மாற்றப்பட்டது. அதன் கைத்தொழில்கள்யாவும் சிதைவுற்று மறைந்தன. பருத்தி நூல்நூற்பு எல்லா இடங்களிலும் பரவியிருந்த தொழில். அது முழுவதுமே அழிந்து விட்டது. அத்துடன் மற்ற குடிசைத் தொழில்களும் அழிந்துவிட்டன. இத்தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும், பிழைப்பதற்காக விவசாயத்

துக்கு வந்தனர். எனவே, நிலத்தின் மீது மக்கள் தொகையின் அழுத்தம் அதிகரித்தது.

விவசாயத்தில் வாணிகப் பயிர்களின் முக்கியத் துவம் அதிகரித்தது. பருத்தி, சணல், அவுரி, தேயிலை, காப்பி போன்ற பொருள்கள் வெளிநாட்டு ஏற்றுமதிக் கென்றே பயிரிடப்பட்டன. தன்னிறைவு பெற்றிருந்த கிராமங்கள் அந்த நிலைமையை இழந்தன. வாணிகப் பொருள்களின் விலை ஆங்கில வியாபாரிகளால் கட்டுப் படுத்தப்பட்டது. எனவே, அவற்றின் ஏற்றுமதியால் கிராமங்களுக்கு நன்மை கிட்டவில்லை. வாணிகப் பொருள்களை உற்பத்தி செய்யும் குடியானவர்களிட மிருந்து குறைந்த விலைக்கு வாங்கி, அவற்றை அதிக இலாபத்திற்கு விற்றுவந்த ஆங்கில வணிகர்கள் செல்வந்தர்கள் ஆனார்கள். ஆனால், நம்நாட்டு உழவர்களோ ஏழைகளாயினர்.

நிலவரி உயர்த்தப்பட்டது. விவசாயிகள் கடன் காரர்கள் ஆயினர். அடுத்தடுத்து ஏற்பட்ட பஞ்சங் களினாலும் மக்களின் துன்பம் மேலும் அதிகரித்தது. உழவர்களுக்குக் கடன் வசதி தரக்கூடிய நிறுவனங்கள் ஏதும் இல்லை. எனவே அவர்கள் வட்டிக் கடைக் காரர்களால் சூறையாடப்பட்டனர். இந்தியக் குடியான வர்கள் ஏழ்மையில் மூழ்கினர்.

இந்தியாவைப் பின்தங்கிய கிராமப் பொருளாதார நிலைக்கு மாற்றுவதே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி யாளரின் குறிக்கோளாகும். தங்கள் நாட்டிற்குத் தேவைப்படும் உணவு தானியங்கள், ஆலைத்தொழில் களுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருள்கள் ஆகிய வற்றை உற்பத்தி செய்யும் நாடாகவே இந்தியாவை அவர்கள் கருதினார்கள். அக்கால ஐரோப்பிய ஏகாதி பத்திய வல்லரசுகள் யாவும் பொதுவாக இம்முறையைத் தான் பின்பற்றி வந்தன.

## பயிற்சி

I. பின் வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் விளைவாக

(அ) இந்திய உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம் தடைப்பட்டது.

(ஆ) இங்கிலாந்தின் முற்றுபெற்ற பொருள்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இந்தியா இருந்தது.

(இ) இந்தியக் குடியானவர்கள் ஏழைகளாயினர்.

(ஈ) இந்தியப் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய கிராமப் பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டது.

II. கோடிட்ட இடங்களை நிரப்பு :

1. பிரிட்டிஷாரின் வாணிகக் கொள்கையின் விளைவாக அதிகமாகப் பாதிக்கப்பட்ட கைத்தொழில் ——— ஆகும்.
2. ———பிரபுவின் ஆட்சிக் காலத்தில் 'அரையணா' அஞ்சல்முறை புகுத்தப்பட்டது.
3. ———ஆண்டில் முதன் முறையாக இந்தியாவில் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன.

III. குறுகிய விடை எழுதுக :

1. இந்தியப் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் மூன்று விளைவுகளைக் கூறுக.
2. ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் ஏற்படுவதற்கு முன்பே எந்தெந்த இந்திய கைவினைப் பொருள்கள் உலகப்புகழ் பெற்றிருந்தன?
3. பருத்தி நெசவுத்தொழில் அழிவதற்கான காரணங்களைக் கூறுக.
4. டல்ஹௌசி பிரபுவின் ஆட்சி காலத்தில் புகுத்தப்பட்ட நவீன போக்குவரத்துச் செய்தி வசதிகள் பற்றி எழுதுக.

IV. விரிவான விடை எழுதுக :

1. 18ஆம்நூற்றாண்டில் இந்தியக் கைவினைத் தொழில்கள் அடைந்திருந்த முன்னேற்றத்தை விவரி.
2. இந்தியக் கைவினைத் தொழில்கள் நலிவுபெறக் காரணங்கள் யாவை?

3. இந்தியப் பொருளாதாரம் எவ்வாறு ஆங்கிலேயரால் சூறையாடப்பட்டது என்பதைத் தெளிவுப்படுத்துக.

4. ஆங்கில ஆட்சியின்கீழ்ப் பின்தங்கிய கிராமப் பொருளாதார நிலைக்கு இந்தியா எவ்வாறு மாற்றப்பட்டது என்பதைத் தெளிவுப்படுத்துக.

## செய்முறைப் பயிற்சி

1. குடிசைத்தொழில் நடைபெறும் ஓர் இடத்திற்குச் சென்று பார்வையிடுக. அந்தத் தொழில் அங்குத் தோன்றி, வளர்ச்சி அடைந்துவருவதற்குண்டான சூழ்நிலைகளையும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நிலையையும் அறிந்து கொள்க.

2. இந்தியாவில் அமைந்துள்ள இருப்புப்பாதைகளைக் குறிக்கும் படத்தைப் பார்த்து முக்கிய வழித்தடங்களைத் தெரிந்து கொள்க.

3. உங்கள் ஊரிலுள்ள அல்லது அருகிலுள்ள அஞ்சல் மற்றும் தந்தி நிலையத்திற்குச் சென்று பார்வையிடுக. அந்த நிலையம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்க.

# 5. இந்திய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் மேல்நாட்டுக் கல்விக் கருத்துகளின் செல்வாக்கு

இந்தியா 19ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு மாறியது. அரசியல் குழப்பங்களும், பொருளாதாரத் தடைகளும் நாட்டில் இருந்தன. எனினும், ஆங்கில ஆட்சியின் போது சமய, சமூக, கல்வித்துறைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலக் கல்வி இந்நாட்டில் பரவியது. மேலைநாடுகளுடன் தொடர்பு வளர்ந்தது. அத்தொடர்பு பல மாற்றங்களை ஏற்படுத்தியது. மூடப் பழக்க வழக்கங்களைக் கைவிடவும், விஞ்ஞான முறையிலான சிந்தனைகள் தோன்றவும், சீர்திருத்தங்களில் ஆர்வம் கொள்ளவும் வழிவகுத்தது. மேலும் தேசிய உணர்விற்கு வித்திட்டது. மேனாட்டவர்களின் முற்போக்குக் கொள்கைகள் இந்தியாவில் பரவின. இவை படித்த இந்தியர்களிடையே தேசிய உணர்வைத்தூண்ட உறுதுணை செய்தன. இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இராஜா ராம்மோகன்ராய் ஆவார்.

## பிரம்ம சமாஜம்

*இராஜா ராம்மோகன்ராய் (1774-1833)*

இராம்மோகன்ராய் வங்காளத்தில் தோன்றியவர் ஆவார். சிறு வயதிலேயே பல பண்டைய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். இந்து சமயத்தில் இருந்த பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களைப் பற்றி ஆராயத் தலைப்பட்டார். ஆங்கில மொழியைக் கிழக்கிந்திய வாணிகக் குழுவில் பணியாற்றிய காலத்தில் பயின்றார். சில ஆண்டுகள் பணிபுரிந்த பின், ஓய்வு பெற்றுக்

கல்கத்தாவில் தங்கி வாழலானார். அதுமுதல் சீர் திருத்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

தமது சமூக சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புவதற்காக 1828இல் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினார். அதுவே பின்னர், **பிரம்ம சமாஜம்** என்று அழைக்கப்பட்டது. 'ஆண்டவன் ஒருவனே' என்ற அடிப்படையில் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. எளியவர்களிடம் அன்பு பூண்டு ஒழுக வேண்டும்; எல்லாச் சமயத்தவர்களிடமும் ஒருமைப்பாடும், சமத்துவமும் நிலவ வேண்டும் என்பவை இவ்வியக்கத்தின் கருப்பொருள்களாக அமைந்திருந்தன.


படம் 10.
இராஜா ராம்மோகன்ராய்

பிரம்ம சமாஜம், கடவுளர்கள் உருவ வழிபாடு, சாதிப் பிரிவுகள் முதலியவற்றை மறுக்கிறது.

சாதி, சமய வேற்றுமையற்ற சமுதாயத்தைப் படைப்பதே, இச்சங்கத்தின் தலையாய நோக்கமாகும். இதற்கென இராம்மோகன்ராய் ஓர் ஆலயத்தை நிறுவினார். அனைவரும் ஒன்றுகூடித் தொழுவதற்கு அக்கோயில் பயன்பட்டது. அதில் உருவங்கள் வைப்பதும், சடங்குகள் செய்வதும் அனுமதிக்கப்படவில்லை. இராம்மோகன்ராயின் மறைவுக்குப்பின் பிரம்மசமாஜ இயக்கத்திற்குத் தேவேந்திர நாத் தாகூர், கேசவ சந்திர சென் போன்ற அறிஞர்கள் புத்துயிர் அளித்தனர்.

ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்காக இராம்மோகன்ராய், வங்காளத்தில் பல நிறுவனங்களை ஏற்

படுத்தினார். இந்து சமயத்திலுள்ள சாதிக்கொடுமைகள், ***சதி* அல்லது *உடன்கட்டை ஏறுதல்***, பலதார மணம் போன்ற கொடிய பழக்கங்களை நீக்க அரும்பாடு பட்டார். இவரது ஆதரவினால், வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டை ஏறுதலைத் தடைசெய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தார். மேலும், இராம் மோகன்ராய் கைம்பெண்களின் மறுமணம், பெண்கல்வி, பெண்களுக்குச் சொத்துரிமை போன்ற முற்போக்குச் சீர்திருத்தங்களைஆதரித்தார். செய்தித்தாள் சுதந்தரம், குடியானவர்களின் உரிமை, பிரிட்டிஷ் இந்தியப் படையை இந்தியமயமாகச் செய்தல் போன்றவற்றுக் காக அரசிடம் வாதிட்டு, அரிய தொண்டு செய்து வந்தார். வங்காளத்தில் பொதுமக்களிடம் நாட்டுப் பற்றை உருவாக்கினார்.

சமய, சமூகக் கொடுமைகளில் சில நீக்கப்பட்டதால் இந்தியாவில் தேசிய விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகுத் தார். எனவே அவர், ***இந்திய தேசிய உணர்வின் தந்தை*** எனப்போற்றப்படுகிறார். இரவீந்திர நாத் தாகூர் அவரை ***நவீன இந்தியாவின் முன்னோடி*** என்று புகழ்ந்துள்ளார்.

## ஆரிய சமாஜம்

### *சுவாமி தயானந்த சரஸ்வதி (1824-1883)*

***ஆரிய சமாஜம்*** சுவாமி தயானந்த சரஸ்வதி என்ற துறவியரால் 1875ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. இவர் குஜராத் மாநிலத்தவர். அவருடைய அறிவுரை 'வேதங்களின்படி மீண்டும் நடத்தல்' ஆகும். இவர் தம் வாழ்நாட்களை வேத சமயத்தைப் பரப்புவதிலும், இந்து சமூகத்தைச் சீர்திருத்துவதிலும் செலவிட்டார். வேதங்களைத் தவிர,ஏனைய புராணங் களை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். உருவ வழிபாடு, சமூகக் கட்டுப்பாடுகள், இளம் பருவத்

திருமணம் போன்றவைகளை இவர் எதிர்த்தார். பெண் கல்வி, இளங்கைம்பெண்களின் மறுமணம் ஆகியவை களை ஆதரித்தார். இந்துக்கள் அல்லாதவர்களை இந்து மதத்தில் சேர்க்கும் **சுத்தி இயக்கம்** என்பதனை இவர் தொடங்கினார். இந்துச் சீர்திருத்த இயக்கத்திற்கு அது ஒரு முக்கியக் கூறாய் விளங்கியது.

சுவாமி தயானந்தரும், அவரது அடியார்களும் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் பிற்காலத்தில் நாட்டுப்பற்றைப் புகட்டும் நிலையங்களாகப் பணியாற்றி வந்தன.



படம் 11.
சுவாமி தயானந்த சரஸ்வதி

சுவாமி தயானந்தரின் அரிய தொண்டுகள் நம் நாட்டு மக்களை நமது பண்பாட்டி லும், இந்து சமயத்திலும் பற்றுக்கொள்ளும்படி தூண் டின. விடுதலை இயக்கக் காலத்தில் தோன்றிய 'சுதேசி'க் கொள்கைக்கு வித்திட்டவரும் இவரே. 'சத்யமேவ ஜயதே' (வாய்மையே வெல்லும்) என்ற தாரக மந்திரத்தை இந்தியருக்கு வழங்கியவரும் இவரேயாவார். 'சத்யார்த்த பிரகாஷ்' என்ற இவரது நூல் ஆரிய சாமாஜக் கொள்கைகளை விளக்குவதாக உள்ளது.

## சமூக சீர்திருத்தங்கள்

மேற்கத்தியக் கல்வி, கலாச்சார முறைகளால், இந்தியர்களின் சமூக, சமய வாழ்க்கை பல வழிகளில் மாறுதல் அடைந்தது. இந்தியாவில் தோன்றிய எல்லாச் சீர்திருத்த இயக்கங்களும் பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றி வலியுறுத்தி வந்துள்ளன.

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கியமான சமூகச் சீர்திருத்தம் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலை ஒழித்ததாகும். இராஜா ராம்மோகன்ராயின் ஒத்துழைப்பின் மூலம், தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபு 1829இல் உடன்கட்டை ஏறுதலை சட்டத்தின் மூலம் தடை செய்தார்.

*பண்டித ஈஸ்வரசந்திர வித்யாசாகர்* என்ற வடமொழி அறிஞர் தமது எழுத்தாலும், பேச்சாலும் இளங்கைம்பெண்களின் மறுமணத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார். இதன் பயனாக 1856இல் இளங் கைம்பெண்கள் மறுமணச்சட்டம் ஒன்று வகுக்கப் பட்டது. பிரம்ம சமாஜமும், ஆரிய சமாஜமும் பெண் குல நலனுக்கு மிகவும் உழைத்தன. மகாராட்டிரத்தில் மகாதேவ கோவிந்த ரானடே, டி.கே.கார்வே போன் றோர்களின் அரும்பணிகளால் அம்மாநிலத்தில் கைம் பெண்களின் வாழ்வு மலர்ந்தது.

***கேசவ சந்திர சென்*** என்பாரின் முயற்சிகளால் 1872இல் பலதார மணம், சிறுவர் மணம் ஆகியவை சட்டவிரோதமாக்கப்பட்டன. எம்.பி. மலபாரி என்ற பார்சியினத்தலைவரும், சிறுவர் திருமணங்களை அகற்ற அரும்பாடு பட்டார். அவரது முயற்சியால் 1891இல் 'திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கும் வயதுச் சட்டம்' ஏற்பட்டது. இதனால் சிறுவர் திருமணங்கள் பெருமளவு குறைந்தன. ராவ் சாகிப் ஹரிபிலாஸ் சாரதா என்பவர் முயன்று, 1929இல் சிறுவர்களின் திருமணச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினார். இதுவே புகழ் பெற்ற 'சாரதா சட்டம்' என்பதாகும். இதன் விளைவாகத் திருமணமாகும் வயது ஆண்களுக்கு 18 ஆகவும் பெண்களுக்கு 12 ஆகவும் இருக்க வேண்டும்; இதற்குக் குறைந்தால் சட்டப்படி குற்ற மாகும், என அறிவிக்கப்பட்டது. தற்காலக் கல்வியும், பொருளாதார நிலையும், திருமண வயதைத் தள்ளிப் போடப் பேருதவி செய்துள்ளன.

பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்கம் வடஇந்தியாவின் பல பகுதிகளில் இருந்து வந்தது. மத வேண்டுதல்கள் என்ற பெயரால் இவை நிகழ்ந்தன. இராஜா ராம்மோகன்ராய் போன்றவர்களின் ஒத்துழைப்பால் வில்லியம் பெண்டிங் பிரபு இக்கொடிய பழக்கத்தைச் சட்டத்தின் மூலம் அகற்றினார்.

ஆங்கில அரசு இந்திய சமூகத்திற்குச் செய்த தொண்டுகளில் 'தக்கர்கள்' என்ற சமூக விரோதிகளை அடக்கியதும் குறிப்பிடத் தக்கதாகும். மேலும், அடிமைத்தனம், நரபலி இடுதல், சூதாட்டங்கள் போன்ற சமூகக் கொடுமைகளும் அகற்றப்பட்டன.

1906இல் இந்தியத் தாழ்த்தப்பட்டோர் கழகம் உருவாயிற்று. காந்தியடிகள், அம்பேத்கார் பேன்றவர்கள் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர்களாவர். இந்திய அரசியல் சட்டத்தின்படி, தீண்டாமை சட்ட விரோதமான செயல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு விடுதலைக்குப்பின் மேலும் பல சமூகச் சீர்திருத்தங்களை அரசு செய்துள்ளது. எனினும், இத்துறையில் ஆற்றவேண்டிய பணிகள் இன்னும் பல உள. பெண் கல்வி, பெண்களுக்கு வேலை வாய்ப்பில் ஆண்களுடன்சமத்துவம், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்விச் சலுகைகள், வேலை வாய்ப்புகள் ஆகியவை பெருகி வருகின்றன. 20ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து பல பெரியார்கள் சமூகச் சீர்திருத்தப் பணிகளைச் செய்து வந்துள்ளனர். அவர்களது பணிகளைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

*பண்டித ரமாபாய்*

இந்தியப் பெண்மணிகளின் நல்வாழ்விற்காக அயராது உழைத்தவர்களில் பண்டித ரமாபாய்அம்மை

யார் முதன்மையானவர் ஆவார். அவர் கர்நாடக மாநிலத்தவர். நம் நாட்டில் பெண்களின் அவல நிலையைக் கண்டு மனம்வருந்தி சமூகத்தில் அவர்களது நிலையை உயர்த்துவதற்குத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டவர். சிறந்த நாட்டுப் பற்றுடையவரும், சமூகச் சீர்திருத்தவாதியுமான நீதிபதி *மகாதேவ கோவிந்த ரானடே* அவர்கள் இவ்வம்மையாரின் சீர்திருத்தப்பணிகளுக்கு வழிகாட்டியாவார்.

ரமாபாய் அம்மையார் இளம் வயதில் திருமணம் செய்வதைத் தடுத்தல், கைம்பெண்களின் மறுமணம் போன்ற முற்போக்கு எண்ணங்கள் உடையவர். அவர் தமது கருத்துகளை நாடெங்கிலும் சென்று பரப்பினார். தமது சீர்திருத்தக் கருத்துகளின் அடிப்படையில் பூனாவில் 'ஆரிய மகிளா சமாஜம்' எனும் ஒரு கழகத்தை நிறுவினார்.

பின்னர் அம்மையார் பம்பாயில் *சாரதா சதன்* என்னும் ஓர் இல்லத்தை ஏற்படுத்தினார். அதில் எல்லாச் சமயங்களையும் சார்ந்த கைம்பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அங்கு அவர்களுக்குக் கல்வி, கைத்தொழில் முதலியன கற்றுக் கொடுக்கபட்டன. அதன் பின் பூனாவில் *கிருபா சதன்* என்னும் மற்றோர் இல்லம் நிறுவினார். அங்குக் கைம்பெண்கள், அனாதைப் பெண்கள் ஆகியோருக்குப் பல கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. அதனால் இருண்டு கிடந்த பல பெண்களின் வாழ்க்கை ஒளிமயமாயிற்று.

### கோபாலகிருஷ்ண கோகலே (1866-1915)

மகாராட்டிர மாநிலத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் கோபாலகிருஷ்ண கோகலே பிறந்தார். இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியோர்களில் இவரும் ஒருவர். ஆங்கிலப் பள்ளியொன்றில் பகுதி நேர ஆசிரிய

ராகப் பணிப்புரிந்து, அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். இச்சமயத்தில் இந்தியாவில் புதிய கல்வி இயக்கம் ஒன்று தோன்றியது. அவ்வியக்கம், நீதிபதியும், சிறந்த நாட்டுப் பற்றுடையவருமான மகாதேவ கோவிந்த ரானடேயின் பெயருடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தது. அவரது ஊக்கத்தினால்தான் 'தக்காணக் கல்விச் சங்கம்' தொடங்கப்பட்டது. பாலகங்காதார திலகர், கோபாலகிருஷ்ண கோகலே ஆகியோர் அதன் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டனர். அச்சங்கம் நிறுவிய, புகழ்பெற்ற பெர்குசன் கல்லூரியில் கோகலே குறைந்த ஊதியத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், அக்கல்லூரியின் முதல்வராகவும் பதவி உயர்வு பெற்றார். மாணவர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றை வித்திட்டார்.

திலகர் நடத்திய கேசரி, மராத்தா ஆகிய இதழ்களின் மூலமாகக் கோகலே தமது சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார். பழைமைப் பற்று மிக்க திலகருடன் கோகலேவிற்குக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சீர்திருத்த நோக்கமுடைய ரானடேயின் கருத்து இவரைக் கவர்ந்தது. ரானடேயைக் கோகலே தமது அரசியல் ஆசானாக ஏற்றுக் கொண்டார். இந்திய விடுதலை இயக்கத்திற்கும், சமுதாய நலப் பணிகளுக்கும் கோகலே சிறந்த தொண்டாற்றினார்.



படம் 12.
கோபாலகிருஷ்ண கோகலே

1897 இல் மகாராட்டிர மாநிலத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. கோகலே, பஞ்சத்தை நீக்கப் பலவிதங் களிலும் உதவி புரிந்தார். உப்பு வரி உயர்வை எதிர்த்த இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். இங்கிலாந்து சென்று, இந்திய வரிப்பணம் முறைகேடாகச் செலவழிக் கப்படுகின்றதென்று ஆங்கில அரசுக்கு எடுத்துரைத் தார். மேலும், இந்தியருக்கு அரசாங்கத்தில் உயர்பதவி கொடுக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அவர் பம்பாய் மாநிலச் சட்டசபை உறுப்பின ரானார். இந்தியர் நலனைப் பாதிக்கும் நிலவருமானச் சட்டச் சீர்திருத்த மசோதாவை எதிர்த்தார். பின்னர், மத்திய சட்டசபை உறுப்பினரானார். அங்குக் கட்டாய இலவசக் கல்வி முறையைக் கொண்டு வரவேண்டுமென வலியுறுத்தினார்.

கோகலே 1905இல் காசியில் கூடிய இந்திய தேசிய காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்வு பெற்றார். வங்கப் பிரிவினையை எதிர்த்துப் போராடினார். 1905 இல் கோகலே 'இந்தியர் ஊழியர் சங்கம்' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். அதன் குறிக்கோள் யாதெனில் பொதுநலத் தொண்டில் மக்களுக்கு நல்ல பயிற்சி அளித்தலேயாகும்.

கோகலே மிக எளிய வாழ்வு நடத்தினார். சிறந்த ஒழுக்கத்துடன் விளங்கினார். சிறந்த எழுத்தாள ராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தார். சீர்திருத்தக் கொள்கையுடையவராக இருந்தார். தீண்டாமை யொழிப்பை ஆதரித்தார். கைம்பெண்களின் மறு மணத்தை வலியுறுத்தினார். 'பாரதத்தின் மாணிக்கம், மராத்தியத்தின் அணிகலன், மக்கள் தொண்டர்களுள் தலைசிறந்த தொண்டர்' என்று திலகரால் போற்றப் பட்டவர் கோகலேயாவார். இவர் 'இந்தியாவின் தேசத் தந்தை' எனப் புகழ்ப்பெற்ற காந்தியடிகளுக்கே அரசியல் ஆசானாக விளங்கியவர்.

***காந்தியடிகள் (1869-1948)***

காந்தியடிகளின் முழுப்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. இவர் குஜராத் மாநிலத்தில் போர் பந்தர் என்ற ஊரில் 1869ஆம் ஆண்டு, அக்டோபர் 2ஆம் நாள் பிறந்தார். இங்கிலாந்தில் படித்து 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார். வழக்குரைஞராகத் தொழில் புரியத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கு இனவெறிகொண்ட வெள்ளை அரசாங்கம் இந்தியர்களை இழிவாக நடத்துவதைக் கண்டார். அரசாங்கத்தை எதிர்த்துச் ***சத்தியாகிரகம்*** என்ற புதிய முறை இயக்கத்தைக் காந்தியடிகள் அங்குதான் முதன் முறையாகக் கையாண்டார். அன்பை அடிப்படையாகக் கொண்டு கொடுமைகளை அகற்ற உழைப்பதே சத்தியாகிரகத்தின் அடிப்படையாகும். அதில் வன்முறைகளுக்கு இடமில்லை.



படம் 13. மகாத்மா காந்தி

1914ஆம் ஆண்டில் காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பினார். கோகலே போன்ற தலைவர்களின் வேண்டுகோளின்படி காங்கிரசில் சேர்ந்து விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டார். நாட்டு மக்களை எழுச்சியுறச் செய்து, ஆங்கில ஆட்சியிலிருந்து நமது நாட்டை விடுதலை அடையச் செய்தார். எனவே நாம் அவரை 'நமது தேசியத் தந்தை' எனப் போற்றுகிறோம்.

காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் இந்து முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை நிலவப் பாடுபட்டார். அம் முயற்சியில் அவர் தம் உயிரையே தியாகம் செய்தார்.

காந்தியடிகள் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாவார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் அரும்பாடுபட்டார். தீண்டாமை ஒழிய அவர் பெரும் முயற்சிகள் மேற்கொண்டார். தாழ்த்தப்பட்டவர்களை, அவர் ஹரிஜனங்கள் அல்லது 'கடவுளின் மக்கள்' என்றே அழைத்தார். அவரது உழைப்பினால் ஹரிஜனங்கள் வழிபடுவதற்கு இந்துக் கோயில்கள் திறந்துவிடப்பட்டன. குடிப்பழக்கத்தைச் சட்டப்படி ஒழிக்கச் செய்தார். பெண்களின் நலனிலும், அவர்களின் முன்னேற்றத்திலும் அவர் நாட்டம் செலுத்தினார்.

கல்வித்துறையில் முற்போக்கான எண்ணங்களைக் காந்தியடிகள் கொண்டிருந்தார். ஏழ்மை நிலையிலுள்ள நம் நாட்டினருக்கு, வாழ்க்கைக்குப் பயனளிக்கத்தக்க வகையில் கல்வி முறை அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். அவர் குறிக்கோளின்படி 'வார்தா கல்வித் திட்டம்' வகுக்கப்பட்டது.

சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்குக் குடிசைத் தொழில்களின் வளர்ச்சியை அவர் ஆதரித்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மேனாட்டுப் பாணியில் இயந்திரமயமாக்குவதை அவர் விரும்பவில்லை. கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்குக் குடிசைத் தொழில்கள் அமைப்பதின் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்கென கதர் இயக்கம் என்பதனை அவர் தொடங்கினார். இவ்வாறு நாட்டு நலனுக்காக அவர் ஆற்றிய தொண்டுகள், தியாக

உணர்ச்சி முதலிய அரிய பண்புகளைக் கண்ட மக்கள் அவரை 'மகாத்மா' என்று போற்றினர்.

### *இராசகோபாலாச்சாரியார் (1878-1972)*

'இராஜாஜி' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற இராசகோபாலாச்சாரியார், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட முன்னணித் தலைவர்களுள் ஒருவராவார்.

இவர் திருச்செங்கோட்டுக்கு அருகில் புதுப் பாளையம் என்ற இடத்தில் புகழ்பெற்ற காந்தி ஆசிரமத்தை நிறுவினார். அங்குச் சமுதாயநலப் பணிகளுக்கும், கதர் அபிவிருத்திக்கும் அரிய தொண்டாற்றினார். சில ஆண்டுகள் சேலம் நகராட்சி மன்றத்தின் தலைவராகவும் பணிபுரிந்தார்.



படம் 14. இராஜாஜி

இராஜாஜி ஒரு சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் சாதி வேற்றுமைகளை வெறுத்தார்; கலப்பு மணங்களை ஆதரித்தார். இவர் 1937-இல் சென்னை மாநிலத் தலைமை அமைச்சராக இருந்த போது, சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கைப் புகுத்தினார்; தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார்.

அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துவதற்கும் இராஜாஜி அயராது பாடுபட்டார். 'காந்தி அமைதி நிறுவனத்தின்' சார்பில் இராஜாஜி இலண்டன், வாஷிங்டன், நியூயார்க் முதலிய நகரங்களுக்குச் சென்றார். இலண்டனில் பிரிட்டிஷ் பிரதமரையும், வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி

யையும், நியூயார்க்கில் ஐக்கிய நாட்டு சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து, அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்தும்படி வற்புறுத்தினார். இவருடைய இந்த முயற்சியால், 1963ஆம் ஆண்டில் உலக நாடுகளின் இடையே அணு ஆயுதச் சோதனைத் தடை உடன்படிக்கை ஏற்பட்டது.

இராஜாஜி ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த எழுத்தாளர். வாழ்நாள் முழுவதும் அரசியல் பிரச்சினை கள் குறித்து இவர் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டே இருந்தார். இராஜாஜி நாட்டிற்குச் செய்த தொண்டு களைப் பாராட்டி இந்திய அரசின் மிக உயர்ந்த 'பாரத ரத்னா' விருது இவருக்கு வழங்கப்பட்டது. 1959இல் இவர் 'சுதந்தராக் கட்சி'யைத் தோற்று வித்தார். 1972இல் இராஜாஜி இயற்கை எய்தினார்.

### பெரியார் ஈ. வே. இராமசாமி (1879-1973)

தமிழ்நாட்டில் பெருஞ் சீர்திருத்தவாதியாக விளங் கியவர் ஈ. வே. இராமசாமி. இவர் ஈரோடு நகரில் 1879ஆம் ஆண்டில் பிறந்தார். தமது 19ஆம் வயதில் நாகம்மை என்பவரை மணந்தார். இவர் இந்திய தேசியக் காங்கிரசு நடத்திவந்த விடுதலைப் போராட் டத்தில் பெரும் பங்கேற்றார். ஒத்துழையாமை இயக் கத்தில் தீவிரப் பங்கேற்றார். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் இயக்கம் போன்ற சமூக சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார். சில ஆண்டுகள் இவர் தமிழ்நாடு காங்கிரசு நிறுவனத்தின் தலைவ ராகவும் இருந்தார்.

1924இல் இவர் கேரளத்திலுள்ள 'வைக்கம்' என்ற இடத்தில் நடந்த தீண்டாமை ஒழிப்புப் போராட் டத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். தாழ்த்தப்பட்ட வர்களாகக் கருதப்பட்ட ஈழவர், தீயர், புலையர்

முதலியோர் கோயில் தெருவில் நடந்து செல்லும் உரிமை கோரி நடத்திய போராட்டம் இது. அதனால் ***அவர் வைக்கம் வீரர்*** என அழைக்கப்பட்டார்.

1925ஆம் ஆண்டில் இவர் கருத்து வேறுபாட்டின் காரணமாகக் காங்கிரசிலிருந்து வெளியேறினார். 'சுய மரியாதை' என்ற புதிய இயக்கத்தைத் தொடங்கினார். பின்னர் இவர் நீதிக் கட்சியில் சேர்ந்து, 1938இல் அக்கட்சியின் தலைவராகவும் பணியாற்றினார். அதற்குப் பிறகு இவர், திராவிடக் கழகத்தைத் தோற்றுவித்து, அதன் தலைவராகத் தமது இறுதிக்காலம் வரை பணியாற்றி வந்தார். இவர் அரசியலிலிருந்து ஒதுங்கி, சமூக சீர்திருத்தப் பணிகளில் தம் வாழ்நாளைக் கழித்தார்; சாதி ஒழிப்புப் போராட்டங்களை நடத்தினார். மக்களிடையே தன்மான உணர்ச்சியை ஊக்குவித்தார். மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தார். பெண்களின் முன்னேற்றத்திற்கும் இவர் அரும்பாடு பட்டார். இவர் ஒரு பகுத்தறிவுவாதியாவார். இவரை மக்கள் அன்போடு ***தந்தை*** எனவும் ***பெரியார்*** எனவும் அழைக்கின்றனர்.



படம் 15.
பெரியார் ஈ. வே. இராமசாமி

பெரியார் அவர்கள் பல கல்வி நிறுவனங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் ஏராளமாக நன்கொடைகள் வழங்கியுள்ளார். இவர் டிசம்பர் 1973இல் இயற்கை எய்தினார். இவர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா 1979இல் மிகச் சிறந்த முறையில் கொண்டாடப் பட்டது. ஈரோட்டைத் தலைநகராகக் கொண்ட ஒரு புதிய மாவட்டம் பெரியார் மாவட்டம் என்ற பெயரில் துவங்கப்பட்டது.

## டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் (1891-1956)

அம்பேத்கார் மகாராட்டிர மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தவராவார். அவரது இயற்பெயர் பீமாராவ் இராம்ஜி என்பதாகும். அவர் கல்வி பயின்ற பள்ளியில் அம்பேத்கார் என்ற பெயருடைய ஆசிரியர் பணியாற்றி வந்தார். அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த பீமாராவ் இராம்ஜியிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். தம் ஆசிரியர்மீது தமக்குள்ள நன்றியைத் தெரிவிக்கும் வகையில் அவர், தம் பெயருடன் ஆசிரியரின் பெயரையும் இணைத்துக்கொண்டார். நாளடைவில் அவர் அம்பேத்கார் என்றே அழைக்கப்படலானார்.

பரோடா மன்னர் அம்பேத்கார்பால் அன்பு கொண்டு அவருடைய உயர் கல்விக்குப் பண உதவி செய்தார். அந்த உதவியைப் பெற்ற அம்பேத்கார் பம்பாயிலும் அமெரிக்காவிலும் உயர் கல்விப் பயின்று பொருளியலில் டாக்டர் பட்டம் பெற்றார் 1916இல் அவர் இந்தியாவுக்குத் திரும்பினார்.



படம் 16.
டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

சில ஆண்டுகளுக்குப்பின்னர், அம்பேத்கார் இங்கிலாந்தில் படித்துப் பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியாவிற்கு வந்து வழக்கறிஞராய் பணிபுரியத் தொடங்கினார்; இந்து சமூகத்திலுள்ள சாதிக் கொடுமைகளை எதிர்த்தார்; தாம் நடத்திய செய்தித்தாளின் மூலம் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்துவந்தார்.

இலண்டனில் நடைபெற்ற இரு வட்டமேசை மாநாடுகளில் அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1932இல் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அமைக்கும் திட்டத்தை ஆங்கில அரசு வெளியிட்டது. வகுப்புவாரித் தனித் தொகுதி முறை அமைக்கப்படுமேயானால், அது இந்தியர்களின் ஒற்று மையைக் குலைக்கும் எனக் காந்தியடிகள் கருதினார். எனவே, இத்திட்டத்தை மாற்றவேண்டுமெனக் கோரி காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற் கொண்டார். டாக்டர் அம்பேத்கார் காந்தியடிகளைச் சந்தித்துப் பேசி, ஓர் உடன்பாட்டிற்கு வந்தார். அதுவே பூனா உடன்படிக்கை எனப்பட்டது. அதன்படி தாழ்த் தப்பட்டோருக்கான தனித் தொகுதி முறை கைவிடப் பட்டது. டாக்டர் அம்பேத்கார் பம்பாய் மாநில சட்ட சபை உறுப்பினராகவும், அரசுப் பிரதிநிதியின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பணிபுரிந்தார். நாட்டு விடுதலைக்குப் பின் அவர் அரசியல் அமைப்புச் சட்ட சபைக்கு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் சட்டம் தயாரிக்கும் பொருட்டு அமைக்கப் பட்ட குழுவிற்கு அவர் தலைவராகவும் நியமிக்கப் பட்டார். ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் அவர் 1947இல் சட்ட அமைச்சராகவும் பணிபுரிந்தார். பிற்காலத்தில் அவர் பௌத்த சமயத்தைத் தழுவினார். அவரைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான தாழ்த்தப் பட்ட மக்களும் பௌத்த சமயத்தில் சேர்ந்தனர். 1956இல் அவர் காலமானார். தமிழக அரசு, சென்னையில் கல்லூரி ஒன்றிற்கு அவரது பெயரை வைத்துள்ளது.

### *டாக்டர் முத்துலட்சுமி (1886-1968)*

முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் தமிழ்நாட்டவர். இம்மாநிலத்தில் மருத்துவப் பட்டம்பெற்ற முதல் பெண்மணி இவரே. இவர் புதுக்கோட்டை கல்லூரி யிலும், சென்னை மருத்துவக் கல்லூரியிலும் பயின்றவர். இவரது ஆற்றலைக் கண்ட இந்திய அரசு, இவரைக் குழந்தைகள்-மகளிர் நோய்களுக்கான

ஆராய்ச்சிப் படிப்பின் பொருட்டு இலண்டன் மாநகரத்திற்கு அனுப்பியது.

மாநில அரசு இவரைச் சட்ட மேலவையில் 'மகளிரின் பிரதிநிதி'யாக நியமித்தது. பின்னர், இவர் அம்மேலவையின் உதவித் தலைவராகவும் பணியாற்றினார். இவரது முயற்சியால் 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்' இயற்றப்பட்டது. மருத்துவமனைகளில், பெண் மருத்துவர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்தார். பள்ளிப் பிள்ளைகளுக்கு மருத்துவச் சோதனை முறையைச் செயல்படுத்தினார்.

படிக்கும் பெண்களின் வசதிக்காக 'ஔவை இல்லம்' என்ற விடுதி ஒன்றினைச் சென்னையில் நிறுவினார். வறுமையில் அல்லல்படும் குழந்தைகளையும், பெண்களையும் போற்றிக் காப்பதில் இவ்வில்லம் சீரிய பணியாற்றிவருகிறது. இவ்வம்மையாரின் பெருமுயற்சியின் விளைவாகச் சென்னையிலுள்ள அடையாற்றில் 'புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம்' ஒன்று நிறுவப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் மிகுந்த நாட்டுப்பற்று உடையவர். சென்னை மாநிலத்தின் சிறந்த பெண்மணிகளில் ஒருவராகத் திகழ்ந்த இவர், தமது வாழ்நாளை அனாதைக் குழந்தைகள், பெண்கள், ஏழை எளியோர்களின் நலனுக்காக அர்ப்பணித்தார்.

*சகோதரி சுப்புலட்சுமி*

நமது நாட்டில் மாதர் முன்னேற்றத்திற்குப் பெருந்தொண்டாற்றிய பெண்மணிகளுள் சகோதரி சுப்புலட்சுமியும் ஒருவர் ஆவார். இவர் சிறந்த சீர்திருத்தவாதி. இவர் சென்னையைச் சார்ந்தவர். இளம் வயதிலேயே கணவரையிழந்த இவர், மற்ற கைம்பெண்களைப்போல் மனம் தளர்ந்துவிடாமல், கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றார்.

பின்னர் மாதர்நல முன்னேற்றங்களுக்காக அயராது உழைத்தார். இளங்கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்க இவர் சென்னையில் *சேவாசதன்* என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். அதில் பெண்களுக்குப் பொதுக்கல்வியும், தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டன. இதனால் கைம்பெண்கள் பலருக்கு வேலைகள் கிடைத்தன. 'சேவைக்கு ஒரு சுப்புலட்சுமி' என்று பலராலும் இவ்வம்மையார் பாராட்டப்பட்டவர்.

### *பல்கலைக் கழகங்கள் நிறுவப்படல்*

ஆங்கிலக் கல்விமுறை வில்லியம் பெண்டிங் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் தொடங்கப்பட்டது. ஆங்கிலமொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்ற மெக்காலேப் பிரபுவின் திட்டங்களை இவர் 1835இல் செயற்படுத்தினார். இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் 1854ஆம் ஆண்டை ஒரு முக்கிய மைல் கல் என்று சொல்லவேண்டும். இவ்வாண்டில் 'கட்டுப்பாட்டு மன்றத்தின்' தலைவரான சர். சார்லஸ் உட் என்பவர் இந்தியக் கல்வித் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பினார். அதில், இந்தியாவில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்றும், அவை இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்மாதிரியாகக்கொண்டு அமைக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது. இந்தியாவில்தொடக்கக்கல்வி முன்னேற்றத்திற்கான திட்டங்களும் அதில் அடங்கியிருந்தன. அவைகளைத் தலைமை ஆளுநரான டல்ஹௌசி பிரபு ஏற்றுச் செயல்படலானார். அவற்றின்படி 1857இல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கல்வித்துறை ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களில் கல்வித்துறை நிருவாகப் பொறுப்பினை ஏற்க இயக்குநரும், அவருக்கு உதவியாக ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர். அதற்கு முன்பே,

கிறித்துவப் பாதிரிமார்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை, ஆக்ரா ஆகிய இடங்களில் கல்லூரிகளை ஏற்படுத்தி நடத்திவந்தனர் என்பதை, நினைவில் கொள்ளவேண்டும்.

1882இல் அரசப் பிரதிநிதியாக இருந்த ரிப்பன் பிரபு ஒரு கல்விக் குழுவை நியமித்தார். அதற்கு 'ஹண்டர் குழு' என்று பெயர். இக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டது. தலசுயாட்சி மன்றங்கள் தொடக்கப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் நிறுவு வதற்கு அனுமதிக்கப்பட்டன. தனியார் துறைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், அரசாங்க உதவிக் கொடைகளும் அளிக்கப்பட்டன.

கர்சன் பிரபுவின் காலத்தில் சர். தாமஸ் ராலே என்பவரின் தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகளின்படி 1904ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களின் சட்டம் உருவாயிற்று. அதன்படி, பல்கலைக் கழகங்களின் சட்ட அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்களின்மீது அரசு கட்டுப்பாடு, பலவகைகளிலும் கடுமையாகியது. எனவே, அச்சட்டத்தைத் தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். நாளடைவில் நாட்டில் பனாரஸ் (காசி), டாக்கா, பாட்னா, லக்னோ, அலகாபாத், டில்லி, மைசூர், ஹைதராபாத், சிதம்பரம் மற்றும் பல இடங் களில் பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன. அவற்றில் சில, அரசாங்கத்தாலும் மற்றவை தனியார் களாலும் நிறுவப்பட்டன. சில சிறப்புத் தன்மைவாய்ந்த பல்கலைக் கழகங்களும் ஏற்பட்டன. அவற்றுள், டி. கே. கார்வே பூனாவில் தோற்றுவித்த இந்திய பெண்களின் பல்கலைக் கழகமும், சாந்தி நிகேதனில் இரவீந்திரநாத் தாகூர் தோற்றுவித்த விஸ்வபாரதியும் புகழ் பெற்றவைகளாகும்.

**கல்வி, சமுதாய வளர்ச்சியில் கிறித்துவ சமயப் பரப்புக் குழுக்களின் பங்கு**

ஐரோப்பியரின் வருகைக்கு முன்பாக இந்தியாவில் பழங்காலக் கல்வி முறையே நடைமுறையிலிருந்தது. அப்போது கல்வியை மத நிறுவனங்களே போதித்து வந்தன. எனவே, கல்விமுறை சமய சார்புடையதாகவும், வெளியுலகத் தொடர்பற்றும் இருந்தது. ஆங்கில அரசாங்கம், முதலில் நமது பழங்கால கல்வி முறையில் தலையிடாமல் இருந்தது.

ஆங்கிலக் கல்வியை முதலில் இந்தியாவில் அறிமுகம் செய்தவர்கள் கிறித்துவ சமயப்பரப்புச் சபையினரேயாவர். சென்னையிலும், கல்கத்தாவிலும் டேனிஷ் திருச்சபையினர் இரு பள்ளிகளை ஏற்படுத்தினர். அவற்றை தொடர்ந்து பிற திருச்சபையினரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பள்ளிகளை ஏற்படுத்தத் தொடங்கினர். கல்வியின் மூலம் கிறித்துவ சமயமும் போதிக்கப்பட்டது.

பேப்டிஸ்ட் குழுவைச் சார்ந்த வில்லியம் கேரி என்ற பாதிரியாரும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து, வங்காளத்தில் செராம்பூர் என்னுமிடத்தில் முதலில் ஒரு பள்ளியையும், பின்னர் சென்னையில் கிறித்துவக் கல்லூரியையும், பம்பாயில் வில்சன் கல்லூரியையும் ஆரம்பித்தனர். இக்கல்லூரிகளில் கிறித்துவ சமய நூல்கள் கட்டாயப் பாடமாக்கப்பட்டன.

கேரி அவர்களது செயலை மற்ற பாதிரியார்களும், பரந்த மனப்பான்மையுள்ள இந்தியர்களும் பின்பற்றினார்கள். அவர்களுள் டேவிட் ஹேர் என்பாரும், இராஜா ராம்மோகன் ராய் அவர்களும் மிகச் சிறந்தவர்கள். அலெக்சாண்டர் டஃப் என்பவர், இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

ஆங்கில மொழிவழி விஞ்ஞானம், மருத்துவக் கல்வி கற்பிப்பதற்கு அவர் ஊக்கமளித்தார்.

கல்விப் பணியில் தீவிரமாக ஈடுபட்டபின், சமூக, சமயச் சீர்திருத்தங்களிலும், கிறித்துவர்கள் ஈடுபட்டனர். சமயக் குழுவினர் அச்சகங்களை நிறுவினர். வட்டார மொழிகளில் விவிலியம் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது. பின்னர், பல அறிவு நூல்களும் வெளியிடப்பட்டன. இவை மலிவான விலையில் விற்கப்பட்டன. எனவே, கற்றோர்களின் எண்ணிக்கை பெருகியது. அவர்களுடைய உலகப் பொது அறிவிலும் மலர்ச்சி ஏற்பட்டது. சமய, சமூகத்துறையில் மாபெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, பல சீர்திருத்த இயக்கங்கள் தோன்றலாயின. மேலும், கிறித்துவ சமயப் பரப்பு குழுவினர் சமுதாயநலப் பணிகளிலும் கவனம் செலுத்தினர். அனாதை இல்லங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்ற நிறுவனங்களை ஏற்படுத்திப் போற்றத்தக்க தொண்டு புரிந்தனர்.

## இந்திய தேசிய உணர்ச்சியின் எழுச்சி - காரணங்கள்

வணிகர்களாக வந்த ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை அடிமைப்படுத்தினர். இந்தியர்கள் தமது சுதந்தரத்தை இழந்தனர். ஆனால், வெகு விரைவிலேயே தங்களது பெரும் இழப்பினை உணரலாயினர். தாய் நாட்டின் பழம் பெருமையை உணர்ந்து, அதில் பெருமையும் கொண்டனர். அடிமைத்தனத்தில் வீழ்ந்து கிடப்பதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இரண்டாவதாக, அன்னிய ஆட்சியாளர்கள் பல வகைகளிலும் இந்தியரின் தன்மான உணர்ச்சியைப் புண்படுத்தினர்.

மூன்றாவதாக, ஆங்கிலேயர்கள் கடைப்பிடித்து வந்த தொழில் மற்றும் வாணிகக் கொள்கைகளின் விளைவாக இந்தியப் பொருளாதார நிலை தாழ்வுற்றது. இந்நாட்டின் பெருமைக்குரிய பல அரிய கைவினைத் தொழில்கள் அழிவுற்றன. வேளாண்மைத் தொழிலும் நலிவுற்றது. இவற்றால் பல கைவினைஞர்கள் பிழைப்பு ஊதியத்தை இழந்தனர். தவிர, அவ்வப்போது ஏற்பட்ட கடும் பஞ்சங்களினாலும் மக்கள் அல்லலுற்றனர். அந்நிய ஆதிக்கம் இந்தியாவைச் சுரண்டுதலுக்குள்ளாக்கியது. இவற்றின் விளைவுகளே தங்களின் பல துன்பங்களுக்குக் காரணமென்றும் மக்கள் உணரலாயினர்.

நான்காவதாக, ஆங்கில ஆட்சியின் விளைவாக இந்தியாவிற்கு வெளியுலகுடன் குறிப்பாக மேலை நாடுகளுடன், நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆங்கிலக்கல்வி வளர்ச்சியடையவும், இந்தியர்களுக்குப் புதிய கருத்துகள் புலப்படலாயிற்று. மேனாட்டு அரசியல் தத்துவங்களின் அடிப்படைக் கொள்கைகளான சுதந்தரம், சமத்துவம் ஆகியவைகளைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர். பிரெஞ்சுப் புரட்சி, ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்த்து இத்தாலியில் எழுந்த இயக்கம், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற விடுதலைப்போர்கள் போன்ற தேசிய இயக்கங்கள், இந்தியர் உள்ளங்களில் தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. தமது நாடும் விடுதலை பெற வேண்டுமென்ற விருப்பம் அவர்களிடையே தோன்றி வளரலாயிற்று.

ஐந்தாவதாக, பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் அச்சுத்தொழில் தொடங்கப்பட்டது. இந்தியர்களின் தேசிய உணர்ச்சி வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவியது ஆங்கிலத்திலும், இந்திய மொழிகளிலும்

வெளிவந்த செய்தித் தாள்களும் அரசியல் விழிப்பையும், தேசிய உணர்வையும் போற்றி வளர்த்தன. உதாரண மாக 'இந்தியன் மிர்ரர்', 'பேட்ரியட்', 'அமிர்த் பஜார் பத்திரிகா', 'கேசரி', 'இந்து', 'சுதேச மித்திரன்' போன்ற பத்திரிகைகளைக் குறிப்பிடலாம்.

ஆறாவதாக, பல சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் தோன்றி மக்களை எழுச்சியுறச் செய்தனர். அவர்களில் இராம்மோகன் ராய், ரானடே, தேவேந்திர நாத் தாகூர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலானோர் குறிப் பிடத்தக்கவர்களாவர். அவர்கள் நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சியினையும், தேசிய உணர்ச்சி யினையும் ஏற்படச் செய்தனர். சமூகக் கொடுமைகளைக் களைந்தெறியவும் மக்களை ஊக்குவித்தனர்.

ஏழாவதாக, 1904-05இல் ஏற்பட்ட ருஷ்ய, ஜப்பா னியப் போரில் ருஷ்யா தோல்வியடைந்து, ஜப்பான் ஆசியாவில் வல்லரசு நிலைக்கு உயர்ந்தது. இதனைக் கண்ட இந்தியர்களின் உள்ளங்களிலும் புதிய நம்பிக்கை எழுந்தது. ஆசிய மக்கள் போர்த் திறமையிலும் மற்றும் எந்தத் துறையிலும் ஐரோப்பியர்களைவிடத் தாழ்ந் தவர் அல்லர் என்ற மனப்பான்மை வளர்ந்தது. அந்தச் சமயத்தில்தான் கர்சன் பிரபு வங்காளத்தை இரு தனி மாகாணங்களாகப் பிரித்தார். இது வங்க மக்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தியா முழுவதிலும் தேசியக்கனல் கொழுந்துவிட்டு எரியலாயிற்று. 'அந்நியப் பொருள்களை விலக்குதல்', 'சுதேசி' முதலிய இயக்கங்கள் இந்தியாவில் எல்லா இடங்களுக்கும் பரவியது. 1905ஆம் ஆண்டு முதல் ஜப்பானின் வெற்றியானது இந்திய தேசியவாதிகளுக்கு மேலும் ஊக்கமளித்தது. எனவே, 1905ஆம் ஆண் டானது இந்திய தேசிய உணர்ச்சி எழுச்சியடைந்த காலமாகக் கருதப்படுகிறது.

# இராமகிருஷ்ணரின் இயக்கம்

## இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886)

இவர் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள தட்சிணேஸ்வரம் என்னும் ஊரில் காளிகோயிலில் ஏழைப் பூசாரியாகப் பணியாற்றி வந்தார். அவர் முறைப்படி கல்வி கற்றவர் அல்லர். எனினும், அவர் மிக உயர்ந்த ஆன்மீகஞானியாக வாழ்ந்தார். எம்மதமும் சம்மதமே என்ற கொள்கையுடையவர். ஆண்டவன் ஒருவனே. அவனுடைய திருநாமங்களே, இராமன், கிருஷ்ணன், கிறிஸ்து, அல்லா என்பனவெல்லாம் என்று வலியுறுத்தினார். தாம் கண்ட உண்மைகளை நீதிக் கதைகள் மூலம் யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிதில் விளக்கினார். அவருடைய உபதேசங்களால் கவரப்பட்டுப் பலர் அவருக்குச் சீடரானார்கள். அவர்களுள் ஒருவரே நரேந்திரநாத் தத்தா என்ற இயற்பெயர்கொண்ட சுவாமி விவேகானந்தர் ஆவார்.



படம் 17.
இராமகிருஷ்ண பரமஹம்சர்

## விவேகானந்தர் (1863-1902)

விவேகானந்தர் ஆன்மீக எழுச்சி மிக்கவர். அவர் இந்தியா முழுவதிலும் பயணம் செய்து நம் நாட்டின் பண்டைய, ஆன்மீகத் துறையின் சிறப்பு மிக்க பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். இந்தியாவின் பழம்பெருமையில் நாட்டமும், தேசிய உணர்ச்சியினையும் மக்களிடையே உண்டு பண்ணினார். துறவிக்கோலத்தைப் பூண்ட அவர் ஒரு சிறப்புமிக்க

தேசியவாதியுமாவார். அவரிடம் பக்தி கொண்டு இந்தியர்களும், வெளிநாட்டவரும் பலர் அவருக்குச் சீடரானார்கள்.

அமெரிக்காவில் சிகாகோ நகரில் 1893இல் 'உலக சமயங்களின் மாநாட்டில்' அவர் பங்கு கொண்டார். அம்மாநாட்டில் இந்து சமயத்தின் பெருமையை விளக்கி அரியதொரு சொற்பொழிவாற்றினார். அமெரிக்காவில் பல இடங்களில் அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பிறகு இங்கிலாந்திலும், பிரான்சிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தாயகம் திரும்பினார். இந்திய தத்துவத்தை விளக்குவதற்காக அந்த நாடுகளில் பல நிறுவனங்களை அமைத்தார். விவேகானந்தர் இராமகிருஷ்ண இயக்கத்தை 1897இல் தோற்றுவித்தார். இந்து சமயத்தவர் மேம்பாடு அடையவும், மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவும் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளைநோய் முதலியவற்றால் துன்புறும் மக்களுக்கு இவ்வியக்கம் உதவிசெய்து வருகிறது. மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளையும் அமைத்துள்ளது.



படம் 18.
சுவாமி விவேகானந்தர்

ஏழை எளியவருக்கு மனிதாபிமானத்துடன் செய்யும் சேவையே கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டிற்குச்சமம் என்று விவேகானந்தர் உரைத்தார். தீண்டாமையை ஒழித்துக்கட்டவும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபடவேண்டும் என்று அவர்

இந்துக்களை வேண்டினார். 'நிமிர்ந்து நில்,' 'துணிந்து செல்' என்பதே அவர் இந்த நாட்டின் இளைஞர்களுக்கு விடுத்த அறிவுரைகளாகும்.

### *சர். சையது அகமதுகான் (1817-1898)*

சர். சையது அகமதுகான் 1817இல் டில்லியில் பிறந்தார். 1857ஆம் ஆண்டின் பெரும் புரட்சியைக் கண்டவர். பெரும்பாலான முஸ்லிம்களின் எண்ணத்திற்கு மாறாக அவர்களின் முன்னேற்றத்திற்கு மேல் நாட்டுக்கல்வியும், விஞ்ஞான அறிவும் தேவையென அவர் கருதினார். முஸ்லிம்களைச் சமுதாயத்தில் முன்னேறச் செய்யவேண்டும் என்று அகமதுகான் பாடுபட்டார். அவர்கள் ஆங்கிலக் கல்வி பெறவேண்டும் என்பதற்காக அலிகாரில் முகம்மதிய - ஆங்கிலக் கீழ்த்திசைக்கல்லூரியை 1875இல் ஏற்படுத்தினார். இதுவே, பின்னர் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகமாக 1920இல் மாறியது. மேனாட்டு விஞ்ஞானமும், ஆங்கில இலக்கியமும் இங்குக் கற்பிக்கப்பட்டன. சிறந்த தேசியவாதியாகவும் அகமதுகான் விளங்கினார்.



படம் 19.
சர். சையது அகமதுகான்

பெண் கல்வி, 'பர்தா' முறையை அகற்றுதல் போன்ற சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக அகமதுகான் தமது செய்தித்தாளின்மூலம் பிரச்சாரம் செய்து வந்தார். அவரது மகத்தான சேவைகளின் விளைவாக இந்திய முஸ்லிம் சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன.

### மெய்ஞ்ஞான சபை

மெய்ஞ்ஞான சபை என்பது பிளாவாட்ஸ்கி என்ற அம்மையாராலும், ஆல்காட் என்பவராலும் அமெரிக்காவில் 1875இல் முதன் முதலில் நிறுவப்பட்டது. அவர்கள் 1879இல் இந்தியா வந்தனர். சென்னைக்கருகில் உள்ள அடையாறுக்கு 1886இல் மெய்ஞ்ஞான சபையின் தலைமை இடத்தை மாற்றியமைத்தனர். இனம், நிறம், மதம் இவ்வேறுபாடுகள் இல்லாத உலக சமுதாயத்தை வளர்ப்பதே இந்தச் சபையின் தலைச்சிறந்த குறிக்கோளாகும்.



படம் 20.
அன்னிபெசன்ட் அம்மையார்

மெய்ஞ்ஞான சபையின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தவர் டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார் ஆவார். பெசன்ட் அம்மையார் அயர்லாந்தில் பிறந்து இந்தியாவைத் தமது தாயகமாகக் கொண்டவர். ஆன்மீகப் பணியோடு, இந்தியநாட்டுப் பணியிலும் அவர் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் இந்துப் பெண்களைப் போன்று உடையணிந்து, இந்துக்களின் வாழ்க்கை முறையை மேற்கொண்டார். இந்தியாவிலுள்ள பல புனிதத் தலங்களுக்குச் சென்றார். இவர் காசியில் 'மத்திய இந்துக் கல்லூரி'யைத் தோற்றுவித்தார். இதுவே பிற்காலத்தில் 'பனாரஸ் இந்துப் பல்கலைக் கழக'மாகப் புகழ்பெற்றது.

பெசன்ட் அம்மையார் நாட்டின் சேவையிலும் சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டார். சாதி ஒழிப்பு,

பெண் கல்வி, நாட்டு விடுதலை முதலியவற்றிற்காக அயராது பாடுபட்டார்.

### *இந்தியாவின் இலக்கிய மறுமலர்ச்சி-மாநில மொழி களின் இலக்கிய வளர்ச்சி*

இந்திய மொழிகளும், இலக்கியங்களும் வளர்வதற்கு மேலைநாட்டவரின் தொடர்பு உதவியது. பாமர மக்களையும் கவரும்வகையில் கிறித்துவப் பாதிரிமார்கள் இந்திய மொழிகளைக் கற்றனர். விவிலிய நூலைப் பல இந்திய மொழிகளில் மொழி பெயர்த்தனர். கவிதை களாலேயே கருத்துகளை வெளியிடும் தன்மை மாறியது. உரை நடையிலும் கருத்துக்களைத் தெளிவாக்கலாம் என்ற எண்ணம் வளர்ந்தது. இம்முறையைப் பின்பற்றி 19, 20ஆம் நூற்றாண்டுகளில் இந்திய மொழிகளில் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் உருவாக்கப்பட்டன.

### *வங்காள இலக்கியம்-இரவீந்திரநாத் தாகூர்*

மாநிலமொழி இலக்கிய வளர்ச்சியில் இந்தியா விலேயே வங்காளம் முன்னணியில் நிற்கின்றது. வங்க எழுத்தாளர்களில் இரவீந்திர நாத் தாகூர் தனிச் சிறப்பு பெற்று விளங்குகிறார். அவர் எழுதிய *கீதாஞ்சலி* என்னும் கவிதை தொகுப்பு நூல் 'நோபல் பரிசை'ப் பெற்றது. கோரா, புயல் என்பவை அவர் எழுதிய நாவல்களில் மிகவும் சிறப்புவாய்ந்தவை. ***ஜன கண மன*** எனத்தொடங்கும் நமது தேசியக் கீதத்தை இயற்றிய வரும் இவரேயாவார்.



படம் 21.
இரவீந்திரநாத் தாகூர்

பங்கிம்சந்திர சட்டர்ஜி, ஈஸ்வரசந்திர வித்யாசாகர், சரத்சந்திர சட்டர்ஜி, மதுசூதன் தத்தா ஆகியோர்கள் உயர்புகழ் பெற்ற வங்க எழுத்தாளர்களாவார்கள்.

### *மராத்திய இலக்கியம்*

'நவீன மராத்திய இலக்கியத்தின் தந்தை' யெனப் போற்றப்படும் கேசவசுதர் என்பாரும் பாலகங்காதர திலகரும் புகழ் பெற்ற மராத்தி எழுத்தாளர்களாவர்.

### *தெலுங்கு மொழி இலக்கியம்*

நவீன தெலுங்கு மொழி இலக்கியத்தைத் தோற்று வித்தவர் வீரேசலிங்கம் பந்துலு என்பவராவார். இவர் இயற்றிய 'இராஜ சேகர சரிதம்' என்ற நூல் தற்கால தெலுங்கு இலக்கியத்தின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். இவர் வடமொழி இலக்கிய நூல்களில் சிலவற்றைத் தெலுங்கில் மொழிபெயர்த்தார். தேசோத்தாரக நாகேஸ்வரராவ் தெலுங்கில் செய்தித் தாள்களை முதன் முதலில் வெளியிட்டவராவார்.

### *தமிழ் மொழி இலக்கியம்*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் இலக்கியங் கள் ஏராளமாகத் தோன்றின. இலக்கிய உலகில் புதுமை ஏற்பட்டது. தஞ்சாவூரில் மராட்டிய சரபோஜி மன்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவளித்தார். 'பஞ்ச தந்திரக் கதை'களைத் தாண்டவராய முதலியார் என்பவர் தமிழில் எழுதினார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் எளிய நடையில் நூல்கள் இயற்றி தமிழ்மொழி மறுமலர்ச்சியில் பெரும் பங்கேற்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' மிகவும் சிறந்த இலக்கியமாகும். கிருஷ்ணபிள்ளை எழுதிய 'இரட்சனிய யாத்திரிகம்', உமறுப் புலவர் எழுதிய 'சீறாப்

புராணம்', வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நவீனம், டாக்டர் கால்டுவெல் என்னும் கிறித்துவப் பாதிரியார் எழுதிய 'ஒப்பிலக்கணம்' ஆகியவை இக்காலப் புகழ்மிக்க நூல்களாகும்.

## *இராமலிங்க அடிகள் (1823-1874)*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்ப் புலவர்களுள் தலைச்சிறந்தவர் இராமலிங்க அடிகளாராவார். அவர் இயற்றிய பக்திப் பாடல்களின் தொகுப்பே 'திருவருட்பா' ஆகும். *சீவகாருண்ய* ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் ஆகியவை அவரது மற்ற இலக்கியப் படைப்புகளாகும்.



படம் 22.
இராமலிங்க அடிகள்

இருபதாம் நூற்றாண்டில் டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் பழந்தமிழ்க் காப்பிய ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை அச்சிட்டு வெளியிட்டார். மறைமலை அடிகளார், திரு. வி. கலியாணசுந்தரம், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அறிஞர் அண்ணா போன்றோர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பாகத் தொண்டு புரிந்திருக்கிறார்கள்.

### மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921)



படம் 23.
சுப்பிரமணிய பாரதியார்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வராகத் தோன்றியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாராவார். அவர் தேசப்பற்றூட்டும் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவரது 'பாஞ்சாலி சபதம்', 'கண்ணன் பாட்டு', 'குயில் பாட்டு' முதலியவை மிகவும் புகழ்பெற்றவையாகும்.

### பாரதிதாசன்

பாரதிதாசன் சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்த பாடல்கள் பல இயற்றியுள்ளார். இவரது கவிதைக் காவியங்களான 'பாண்டியன் பரிசு', 'குடும்ப விளக்கு' போன்றவை தமிழ் மக்களால் பெரிதுப் பாராட்டப்படுகின்றன.

### கண்ணதாசன்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்குப் பிறகு தமிழக அரசவைக் கவிஞராக விளங்கிய பெருமை கண்ணதாசனைச் சாரும். இவர் உரைநடையிலும் கவிதையிலும் பல நூல்களைப் படைத்துள்ளார். இவருடைய நூல்களுள் மாங்கனி, இயேசு காவியம் போன்றவை மிகவும் சிறப்புக்குரியனவாகும்.

## பயிற்சி

**I. பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந் தெடுத்து எழுதுக :**

1. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்பட்ட ஒரு நல்ல விளைவு யாதெனில் :

(அ) மேல் நாட்டுக் கல்வி பரவியது.

(ஆ) சமூகத் தீமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டன.

(இ) நவீனப் போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்புகள் வளர்ச்சியடைந்தன.

(ஈ) தலசுய ஆட்சி மன்றங்கள் புதுப்பிக்கப்பட்டன.

2. நவீன இந்தியா உருவாக்கப்படுவதற்காகப் பெருந் தொண் டாற்றியவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் :

(அ) இரவீந்திர நாத் தாகூர்.

(ஆ) இராஜா ராம்மோகன்ராய்.

(இ) மகரிஷி தேவேந்திர நாத் தாகூர்.

(ஈ) ஈஸ்வரசந்திர வித்யாசாகர்.

3. சுவாமி தயானந்த சரஸ்வதியால் ஊக்குவிக்கப்பட்ட இந்து சமயச் சீர்திருத்தங்களில் மிகவும் முக்கியமானது :

(அ) சுதேசி இயக்கம் .

(ஆ) சிலைவழிபாடு, சடங்குகள் ஆகியவைகளுக்கு எதிர்ப்பு.

(இ) சமயம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் இணைப்பது அல்லது சுத்தி இயக்கம்.

(ஈ) சாதி வேற்றுமைகளற்றச் சமூகத்தை உருவாக்குதல்

4. கடந்த காலத்திலும், தற்போதும் எல்லாச் சீர்திருத்தவாதி களும் கடுமையாக எதிர்த்துவரும் இந்து சமுதாயத்தின் மிகக கொடிய பழக்கம் எதுவென்றால் :

(அ) சிறுவர் திருமணம்.

(ஆ) 'சதி' அல்லது 'உடன் கட்டை ஏறுதல்'

(இ) பெண்குழந்தைகளைக் கொல்லுதல்.

(ஈ) தீண்டாமை.

5. 'இந்தியர் ஊழியர் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கியவர் :

(அ) கோபாலகிருஷ்ண கோகலே.

(ஆ) மகாதேவ கோவிந்த ரானடே.

(இ) பால கங்காதார திலகர்.

(ஈ) சர் சையது அகமதுகான்

6. காந்தியடிகள் தமது உயிரையும் தியாகம்செய்ய நேரிட்ட சமூகநலப்பணி எதுவென்றால் :

(அ) தீண்டாமையை அகற்றுதல்.

(ஆ) இந்து, முஸ்லிம் ஒற்றுமை.

(இ) கள்ளுண்ணாமை.

(ஈ) ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை.

7. சமூகத்தில் தாழ்த்தப்பட்டோர்கள் எவருடைய தொண்டிற்கு மிகவும் கடமைப்பட்டவர்கள் என்றால் :

(அ) டாக்டர் முத்துலட்சுமி.

(ஆ) டாக்டர் பாபு ராஜேந்திரப் பிரசாத்.

(இ) டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்.

(ஈ) டாக்டர் அன்னிபெசன்ட்.

8. ஆங்கிலக் கல்விக்கான மெக்காலேவின் திட்டத்தைச் செயல் படுத்திய தலைமை ஆளுநர் :

(அ) டல்ஹௌசி பிரபு.

(ஆ) கானிங் பிரபு.

(இ) ரிப்பன் பிரபு.

(ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு.

9. கிறித்துவசமயப் பரப்பு குழுவினரின் தொண்டுகளில் மிக முக்கியமானது :

(அ) கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான பணிகள்.

(ஆ) சமயத்துறையில் விழிப்புணர்ச்சி.

(இ) தேசிய உணர்ச்சியின் எழுச்சி.

(ஈ) பிரதேச மொழிகள் வளர்ச்சி.

10. இந்திய தத்துவம், மற்றும் இந்து சமயத்தின் மேன்மையை மேலை நாட்டினர் உணரச்செய்த மாபெரும் இந்தியர் :

(அ) ராமகிருஷ்ண பரமஹம்சர்.

(ஆ) சுவாமி விவேகானந்தர்.

(இ) இராஜா ராம்மோகன்ராய்.

(ஈ) டாக்டர் இராதாகிருஷ்ணன்.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ———தை தோற்றுவித்தவர் இராஜா ராம்மோகன்ராய் ஆவார்.

2. இராஜா ராம்மோகன்ராயின் ஆதரவுடன்———என்ற தலைமை ஆளுநர் சதி என்ற கொடிய பழக்கத்தை ஒழித்தார்.

3. ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்தவர்———ஆவார்.

4. பெண்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட இந்தியப் பெண்மணிகளில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்——— ஆவார்.

5. ———என்ற சிறந்த தேசபக்தரைக் கோபாலகிருஷ்ண கோகலே தமது ஆசானாகக் கருதினார்.

6. கோபாலகிருஷ்ண கோகலே———க்கு அரசியலில் ஆசானாக விளங்கினார்.

7. முதல் முறையாகக் காந்தியடிகள்———கொடுங்கோல் ஆட்சியை எதிர்ப்பதற்குச் சத்தியாகிரக முறையைக் கையாண்டு அதில் வெற்றியும் பெற்றார்.

8. தென்னிந்தியாவில் உப்புச்சத்தியாகிரகம்———தலைமையின் கீழ் நடைபெற்றது.

9. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்———ஆவார்.

10. தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம்———என்பவரின் முயற்சியின் விளைவேயாகும்.

11. சென்னை சேவாசதனம்———என்ற அம்மையாரால் தோற்றுவிக்கப்பட்டது.

12. 1854ஆம் ஆண்டு இந்திய கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். ஏனெனில் இவ்வாண்டில்———என்பவர் இந்திய கல்வித் திட்டம் ஒன்றினைத் தயாரித்தார்.

13. சாந்திநிகேதனில் விஸ்வபாரதிப் பல்கலைக் கழகம்——— என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

14. ———என்பவரின் முயற்சியின் விளைவாக இந்தியாவில் மேநாட்டு விஞ்ஞானம், மருத்துவக் கல்வி ஆகியவைகள் கற்பிக்க ஏற்பாடாயிற்று.

15. தட்சினேஸ்வரத்துப் பூசாரியான———இந்தியாவின் தலை சிறந்த ஆன்மீக ஞானியாக விளங்கினார்.

16. நரேந்திர நாத் தத்தா என்று அழைக்கப்பட்ட இவர் பிற்காலத்தில்———என்ற பெயர்கொண்டு புகழ்பெற்று விளங்கலானார்.

17. சிறந்த ஆன்மீகச் சிந்தனையாளராகவும், நாட்டுப்பற்று மிக்கவராகவும், தேசியவாதியாகவும் விளங்கிய துறவியார் ———ஆவார்.

18. முஸ்லிம் பெண்களிடையே இருந்துவந்த பர்தா அணியும் முறை அகற்றப்பட வேண்டுமென்று கூறியவர்——— ஆவார்

19. அயர்லாந்தில் பிறந்து இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட அம்மையார்——— ஆவார்

20. மெய்ஞ்ஞான சபையானது———தலைமையேற்ற பின்னர் தான் சிறப்படையலாயிற்று

21. இரவீந்திர நாத் தாகூரின்———க்கு நோபல் பரிசு கிடைத்தது.

22. ———என்பவர் மராத்திய இலக்கியத்தின் தந்தை எனப் படுகிறார்.

23. வீரேசலிங்கம் பந்துலு இயற்றிய———எனும் தெலுங்கு நூல் மிகச் சிறப்பானது.

25. தமிழ் நாட்டில் சிறந்த கவிஞராகவும் சீர்திருத்தவாதியாகவும் தேசியவாதியாகவும் புகழடைந்தவர்———ஆவார்.

III. சுருக்கமான விடை தருக :

1. மேலைநாட்டுக் கல்வி புகுத்தப்பட்டதால் இந்தியரின் வாழ்க்கையில் எத்தகைய மாறுதல்கள் விளைந்தன ?

2. பிரம்ம சமாஜத்தின் குறிக்கோள்கள் யாவை ?

3. தேசிய உணர்ச்சியைப் புகட்டுவதில் சுவாமி தயானந்த சரஸ்வதியின் பங்கு யாது ?

4. இந்து சமூகத்தில் இளங்கைம்பெண்களின் மறுமணத்தை ஆதரித்த சீர்திருத்தவாதிகள் யாவர் ?

5. சாரதாச் சட்டம் என்பதனை விளக்குக.

6. பெண்கள்நல முன்னேற்றத்தில் பண்டித ரமாபாய் அம்மை யாரின் சேவைகளை எழுதுக.

7. சத்தியாகிரகம் என்பதனை விளக்குக.

8. நமது தேசத் தந்தை எனப் போற்றப்படுவர் யார்? ஏன்?

9. ஏழை மக்களின் மறுவாழ்விற்காகக் காந்தியடிகள் அறிவித்த கருத்துகள் யாவை?

10. அணு ஆயுதச் சோதனைகளைத் தடைசெய்வதற்காக இராஜாஜி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

11. இந்திய தேசிய இயக்கத்தில் பெரியார் ஈ.வே. இராமசாமியின பங்கு யாது?

12. ஏழைகள் மற்றும் நோயாளிகள் ஆகியோர்களின் நலனுக்காக டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் தோற்றுவித்த நிறுவனங் கள் யாவை?

13. சேவைக்கு ஒரு சுப்புலட்சுமி என்று அழைக்கப்பட அவ் வம்மையார் செய்த அரும் பணிகள் யாவை?

14. இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீரிய கருத்துகள் யாவை?

15. இராமகிருஷ்ண இயக்கத்தைத் தொடங்கியவர் யார்? இவ்வியக்கத்தினர் ஆற்றிவரும் தொண்டுகளைக் குறிப்பிடுக.

16. முஸ்லீம் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காகச் சர் சையது அகமதுகானின் அரும்பணிகள் யாவை?

17. இந்தியாவில் மெய்ஞ்ஞான சபை தோன்றுவதற்காகப் பாடுபட்டவர்கள் யாவர்?

18. இராமலிங்க அடிகளாரைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

19. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியங்களைப் படைத்த அறிஞர்கள் யாவர்?

20. பாரதிதாசனின் இலக்கியங்களுக்கு மையப்பொருள் யாது? அவரது இலக்கியப் படைப்புகள் யாவை?

IV. விரிவான விடை எழுதுக:

1. தேசியம் மற்றும் சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றிற்கு இராஜா ராம்மோகன்ராய் ஆற்றிய அரும்பணிகளை விளக்குக.

2. 19ஆம் நூற்றாண்டின் சமூகச் சீர்திருத்தங்களைப் பற்றி விவரிக்கவும்.

3. இந்திய தேசியம், சமூகப் பணிகளுக்குக் கோபாலகிருஷ்ண கோகலே செய்த சேவைகளை விவரித்து எழுதுக.

4. காந்தியடிகளின் சமூக சேவைகளை விளக்குக.

5. அரசியல், சமூகம், இலக்கியம் ஆகிய துறைகளில் இராசாஜி யின் சாதனைகளைக் குறிப்பிடுக.

6. பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களது வாழ்க்கையையும், அவர் ஆற்றிய நற்பணிகளையும் தொகுத்து எழுதுக.

7. டாக்டர் அம்பேத்கார் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் ஆற்றிய அரும்பணிகளைக் குறிப்பிடுக.

8. 19ஆம் நூற்றாண்டின் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியைப் பற்றி விளக்கி எழுதுக.

9. நமது நாட்டின் கல்வி, சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்குக் கிறித்துவசமயச் சபையினர் ஆற்றிய நற்பணிகளை விளக்குக.

10. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தேசிய உணர்ச்சியின் எழுச்சியை விவரி.

## செய்முறைப் பயிற்சி

1. இந்தியாவின் சமூகம் மற்றும் பண்பாடு ஆகிய துறைகளில் நற்பணிகள் ஆற்றிய பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துத் தெரிந்துக் கொள்க.

2. தமிழ் இலக்கிய நூல்களைப் படிப்பதில் ஆர்வம் கொள்க.

# 6. இந்திய சுதந்தரப் போராட்டமும் பிரதிநிதித்துவ ஆட்சி மன்றங்களின் வளர்ச்சியும்

## (முதல் நிலை)

### *இந்திய அரசியல் அதிகாரம் இங்கிலாந்து நாட்டு அரசுக்கு மாற்றப்படுதல்*

1857ஆம் ஆண்டில் நிகழ்ந்த முதல் சுதந்தரப் போரின் விளைவாக இந்திய நிர்வாகத்தைப் பிரிட்டிஷ் அரசே ஏற்றுக்கொண்டது. ஆங்கில பாராளு மன்றத்தில் அதன் நிர்வாகப் பொறுப்பை இந்திய செயலர் ஏற்றார். அவருக்கு ஆலோசனை வழங்க 15 அங்கத்தினர் கொண்ட ஒரு குழு அமைக்கப் பட்டது தலைமையாளுநர் அரசப்பிரதிநிதி என்று அழைக்கப்பட்டார். இந்த மாற்றத்தின்படி, முதல் அரசப் பிரதிநிதியாகக் கானிங் பிரபுவே அமர்த்தப் பட்டார்

### *விக்டோரியாப் பேரரசியாரின் அறிக்கை (11-1-1858)*

இந்தியாவின் நிர்வாகத்தை இங்கிலாந்து அரசி விக்டோரியா நேரடியாக ஏற்றுக் கொண்ட விபரத்தை, 1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியன்று அலகாபாத்தில் நடந்த ஒரு பெரும் விழாவில் கானிங்பிரபு அறிவித்தார்.



படம் 24.
விக்டோரியா பேரரசியார்

### *அறிக்கையில் குறிப்பிட்டவை*

1. இந்திய சிற்றரசர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் பேரரசியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2. இந்திய மன்னர்களின் உரிமைகள் உறுதிப் படுத்தப்பட்டன. அவர்களுக்கு வாரிசு இல்லாவிட்டால் தத்து எடுத்துக் கொள்ளலாம். அவர்களின் உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கில அரசு தலையிடாது. ஆங்கிலேயர்கள் இனித் தங்களுடைய எல்லைகளை விரிவுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதில்லை.

3. பொதுமக்கள் ஆங்கில ஆட்சியின்கீழ் எத்தகைய அச்சமும் இன்றி வாழலாம். அவர்களின் சமயப் பழக்க வழக்கங்களில் அரசு தலையிடாது.

### *இந்திய தேசியக் காங்கிரசு நிறுவப்படுதல் (1885)*

ஆங்கிலக் கல்வியின் விளைவாக மேலைநாட்டு அரசியல் கருத்துகளும், அரசியல் அமைப்பு முறைகளும் இந்தியாவில் வேரூன்றின. மேற்கத்திய அறிஞர்களான ஜெரீமி பென்தாம், ஜான் ஸ்டூவர்ட் மில் போன்றவர்கள் எழுதிய நூல்கள் இந்திய நாட்டில் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களிடம் சுதந்தர தாகத்தை ஏற்படுத்தின. அவை நடுத்தர வகுப்பு மக்களின் மனதில் அரசியல் விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணின.

இந்திய அரசாங்கம் சாதி, சமய, இன வேறுபாடுகள் இல்லாமல் நடத்தப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், இக்கொள்கையைப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை. இதனால், கற்றோர்களிடையே ஆங்கில ஆட்சியின்மீது வெறுப்புத் தோன்றியது. இந்திய சிவில்பணித் தேர்வில் (ஐ. சி. எஸ்.) சுரேந்திர நாத் பானர்ஜி என்பவர் வெற்றி பெற்றார். ஆனால், அவரை அப்பதவிக்கு வர விடாதபடி ஆங்கில அரசு செய்தது. அரசியாரின் மன்றத்தில் முறையிட்டதன் பயனாக அவர் அப்பதவியில் அமர்த்தப்பட்டார். பிறகு சில காரணங்களைக் காட்டி, அவர் அப்பதவியிலிருந்து நீக்கப் பட்டார். இதனால் படித்த இந்தியர்கள் மனதில்

ஆங்கில ஆட்சியின்மீது வெறுப்பு ஏற்பட்டது. சுரேந்திர நாத் பானர்ஜி இந்திய மக்களிடையே அரசியல் விழிப் புணர்வையும், ஒற்றுமை உணர்ச்சியையும் தூண்டும் வகையில் 1876இல் கல்கத்தாவில் 'இந்திய கழகம்' என்ற பெயரால் ஒரு கழகத்தை அமைத்தார். இந்தியா வில் பல முக்கிய நகரங்களில் கூட்டங்களைக் கூட்டி இந்திய தேசிய இயக்கத்தை அவர் வளர்க்க முற்பட் டார். அவரது தலைமையில் 1883இல் கல்கத்தாவில் 'இந்திய தேசிய மாநாடு' கூட்டப்பட்டது. அதில் நாட்டின் பல பகுதிகளிலிருந்துவந்த இந்து, முஸ்லிம் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அச்சமயத்தில் ஏ. ஓ. ஹியூம் என்ற ஓய்வு பெற்ற ஆங்கில உயரதிகாரி கல்விபெற்ற இந்தியர்களுக் கென்று தனியாக ஓர் அமைப்பு உருவாக்க எண்ணம் கொண்டவராக இருந்தார். அவருடைய நோக்கத்திற்கு அப்போது இந்திய அரசப் பிரதிநிதியான டஃப்ரின் பிரபுவும் தமது ஆதரவை நல்கினார். ஹியூமின் முயற்சி யினால் இந்திய தேசியக் காங்கிரசின் முதல் கூட்டம் பம்பாயில் 1885இல், டபிள்யூ. சி. பானர்ஜி என்ற புகழ் பெற்ற கல்கத்தாவைச் சேர்ந்த வழக்கறிஞரின் தலைமையில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பிரோஸ்ஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி, ஜஸ்டிஸ் ரானடே, சென்னை இந்து பத்திரிகை ஆசிரியரான ஜி. சுப்ரமணிய அய்யர் போன்ற பெருந்தலைவர்கள் கலந்துகொண்டனர். பின்னர், சுரேந்திரநாத் பானர்ஜி யின் தலைமையிலான இந்திய தேசிய மாநாடும், இந்திய தேசியக் காங்கிரசுடன் இணைந்துவிட்டது. அது முதல், காங்கிரசு மாநாடு ஒவ்வோர் ஆண்டும் ஏதேனும் ஒரு முக்கிய நகரில் நடைபெறுவது வழக்க மாயிற்று.

### இந்திய தேசியக் காங்கிரசின் தொடக்ககாலக் குறிக்கோள்கள்

19ஆம் நூற்றாண்டு முழுவதும் அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டிப்பதும், சீர்திருத்தங்களை வற்புறுத்துவதுமே காங்கிரசின் கொள்கைகளாக இருந்து வந்தன. பின்வரும் நோக்கங்களைக் காங்கிரசு முக்கிய மாக வற்புறுத்தியது.

1. மத்திய, மாநில ஆட்சிகளில் பிரதிநிதித்துவ சட்டசபைகளை நிறுவ வேண்டும்.

2. இலண்டனிலுள்ள இந்திய ஆலோசனை சபையை நீக்குதல்,

3. பொதுக்கல்வியையும் தொழில்நுட்பக் கல்வியை யும் பரப்புதல்.

4. இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும், இந்தியர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும்.

5. அரசாங்கத்தின் உயர்பதவிகளில் இந்தியர் களுக்கு அதிக இடம்கொடுக்க வேண்டும். இந்திய சிவில் பணிக்கான (ஐ.சி.எஸ்.) தேர்வுகளை இங்கிலாந் திலும், இந்தியாவிலும் ஒரேசமயத்தில் நடத்த வேண்டும்.

தொடக்கத்தில் காங்கிரசு இயக்கத்தை ஆங்கில அரசு வெறுக்கவில்லை. ஆனால், அரசின் போக்கு விரைவிலேயே மாறியது. முதலில் ஏ. ஓ. ஹியூமிற்கு ஆதரவு அளித்த டஃப்ரின் பிரபு, இறுதியில் காங்கிரசின் கொள்கைகளையும், அதன் நடவடிக்கைகளையும் கண்டித்தார். அதன் பிறகு, ஆங்கில ஆட்சியாளர்கள் காங்கிரசுடனிருந்த தங்களது தொடர்பினைத் துண்டித்துக் கொண்டார்கள்.

### வங்காளப் பிரிவினையும் (1905) தேசிய இயக்கம் வலுவடைதலும்

வங்காளத்தில் தேசிய இயக்கம் மிக வேகமாக வலுவடைந்து வந்தது. அதனை ஒடுக்க, 1905இல் நிருவாக வசதிக்கெனக் காரணம்கூறி வங்காளத்தைக் கர்சன் பிரபு பிரிவினைசெய்தார். தேசிய உணர்வு வளர்வதற்கு இப்பிரிவினை ஊறுவிளைவிக்கும் என இந்தியர்கள் கருதினர். நாடெங்கிலும் வங்கப் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடந்தன. பிரிட்டிஷ் பொருள்களைப் புறக்கணித்தல், சுதேசி அல்லது நம்நாட்டுப் பொருள்களையே பயன்படுத்து தல், தேசியக் கல்வியைப் பரப்புதல் போன்ற உறுதி மொழிகளை மக்கள் எடுத்துக்கொண்டனர்.

1906இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசு மாநாடு இத்திட்டங்களை ஆதரித்தது. மேலும், அங்குதான் காங்கிரசு தன் வரலாற்றில் முதன் முறையாகப் 'பூரண சுதந்தரம்' (சுயராச்சியம்) பெறுவதே தனது குறிக் கோள் என அறிவித்தது. இப்புரட்சி நடவடிக்கைகளை ஆதவரித்தவர்கள் பால கங்காதர திலகர், பிபின் சந்திர பால், லாலா லஜபதிராய், அரவிந்தகோஷ் போன்ற தலைவர்களாவார்கள். தமிழ்நாட்டில் வ. உ. சிதம்பர னார் தலைமையில் வங்கப் பிரிவினையை எதிர்த்தும், சுதேசி இயக்கத்தை ஆதரித்தும் பெரும் கிளர்ச்சி நடை பெற்றது. அமரகவி பாரதியாரும், சுப்பிரமணிய சிவாவும் அவருக்கு உறுதுணையாக நின்றனர்.

தேசியவாதிகள் தொடங்கிய கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கில அரசாங்கம் அடக்குமுறையை ஏவியது. ஆனால், மக்களின் ஒருமித்த தேசியக்கனலை அழிக்க முடியவில்லை.

### சர் சையது அகமதுகானும், அலிகார் இயக்கமும்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சர் சையது அகமதுகான் என்பவர் சிறந்த முஸ்லிம்

தலைவராவார். 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு ஆங்கிலேயரிடம் வெறுப்பு இருந்துவந்தது. மேனாட்டுக் கல்வி பெறுவதில் இந்துக்களைவிட முஸ்லிம்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதைச் சர் சையது உணர்ந்தார். எனவே, அவர் முஸ்லிம்களிடையே, மேல்நாட்டுக் கல்வியைப் பரப்புவதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டார். அரசாங்கத்தில் முஸ்லிம்கள் உயர்பதவிகள் வகிப்பதன் மூலம்தான் அவர்களது நலன்கள் பாதுகாக்கப்படும் என்ற கருத்துகளை அவர் கொண்டிருந்தார். இத்தகைய நோக்கங்களுடன் அவர் 1870இல் அலிகாரில் ஒரு பள்ளியை நிறுவினார். விரைவிலேயே அது முகம்மதிய ஆங்கிலக் கீழ்த் திசைக் கல்லூரியாய் மாறியது (இதுவே தற்கால அலிகார் பல்கலைக் கழகமாகும்). முஸ்லிம்களும், இந்துக்களும் இந்தியாவின் இரண்டு கண்கள் என்று அவர் கூறிவந்தார். எனினும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு அவர் ஆங்கிலேயருடன் ஒத்துழைப்பதுதான் சிறந்தவழி என நம்பிக்கை கொண்டிருந்தார். முஸ்லிம்கள் அரசியலில் ஈடுபடுவதைவிட அவர்களின் முன்னேற்றத்திற்குக் கல்விதான் அவசியம் என்றும் கூறினார். காங்கிரசு வலியுறுத்திய பிரதிநித்துவ ஆட்சி அமைந்தால், அதில் பெரும்பான்மையினரான இந்துக்களின் ஆதிக்கமே ஏற்படும் என்று கருதி அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். அதே நோக்கத்தின் அடிப்படையில்தான் அவர் இந்திய சிவில் பணிக்கான (ஐ. சி. எஸ்.) தேர்வுகள் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடைபெறவேண்டுமென்ற காங்கிரசின் கோரிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்தியாவில் இந்துப் பெரும்பான்மையினரின் ஆதிக்க அபாயம் என்ற அச்சம் அவரிடத்தில் குடிகொண்டிருந்தது. அதுவே, பிற்காலத்தில் இந்து-முஸ்லிம் பிரிவினைக்கு வித்திட்டது என்றால் அது

மிகையாகாது. இந்திய தேசியக் காங்கிரசு தோன்றிய மறுஆண்டு சர் சையது 1886இல் முஸ்லிம் கல்வி மாநாடு ஒன்று நடத்தினார். இந்த நிலைமையில் ஆங்கிலேயர்கள், முஸ்லிம்களை மற்ற இந்தியரிட மிருந்து பிரிக்க, 'பிரித்தாளும் சூழ்ச்சியை'க் கையாண் டனர்.

### முஸ்லிம்லீக் நிறுவப்படுதல் (1906)

கர்சன் பிரபு வங்காள மாநிலத்தை முஸ்லிம்கள் அதிகமுள்ள பகுதி கிழக்கு வங்காளமென்றும், இந்துக்கள் அதிகமுள்ள பகுதி மேற்கு வங்காளமென்றும் இரண்டு தனித்தனி மாகாணங்களாகப் பிரித்ததை எதிர்த்து, வங்காளத்தில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதிலு முள்ள மக்கள் ஆங்கில அரசுக்கு எதிராகப் போராடி தேசிய இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்தனர். முஸ்லிம்களை இந்துக்களிடமிருந்து பிரிக்க, ஆங்கில அரசாங்கம், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டது. அதன் விளைவே, 1906இல் டாக்காவைச் சார்ந்த நவாப்சலிமுல்லா என்பவர் தோற்றுவித்த 'முஸ்லிம்லீக்' என்ற அரசியல் நிறுவனமாகும். அந்த நிறுவனம், வங்காளப் பிரிவினையை ஆதரித்தது. காங்கிரசு இயக் கத்தின் அந்நியப் பொருள்களை விலக்குதல், நம் நாட்டுப் பொருள்களையே ஆதரித்தல் போன்ற இயக் கங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. அது ஆங்கில அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைக் கூடுமான வரையில் ஆதரித்தது. நாடு முழுவதும் வாழும் முஸ்லிம் களின் நலன்களைப் பெருக்குவதில் கவனம் செலுத் தியது. வளர்ந்துவரும் இந்திய தேசியக் காங்கிரசின் செல்வாக்கைக் குறைக்க உறுதிகொண்டது. முஸ்லிம் இளைஞர்கள் காங்கிரசு இயக்கத்தில் சேருவதிலிருந்து தடுத்து, அவர்களுக்கு அரசியல் வாழ்வில் முன்னேற வாய்ப்பளிக்கவும் முன்வந்தது. சுருங்கக்கூறின், இந்துக்களுக்கெதிராக முஸ்லிம்களுக்கு அரசியல்

அனுகூலங்களையும் மற்ற நன்மைகளையும் பெற்றுத் தருவது முஸ்லிம் லீகின் நோக்கமாகும்.

### சூரத் மாநாடும் காங்கிரசில் பிளவும் (1907)

இந்திய தேசியக் காங்கிரசில் கோகலேயின் தலைமையிலான மிதவாதிகளுக்கும், திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் தீவிரமடைந்தன. மிதவாதிகள் அரசுக்கு விண்ணப்பங்கள், வேண்டுகோள்கள் விடுப்பது போன்ற முறைகளைக் கையாண்டு, சீர்திருத்தங்களையும் சலுகைகளையும் பெற விழைந்தனர். ஆனால், தீவிர வாதிகள் 'தன்னாட்சி' யைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்கள் மறியல், சுதேசி இயக்கம், சட்ட மறுப்பு போன்ற முறைகளை ஆதரித்தனர். மிதவாதி களில் குறிப்பிடத்தக்க தலைவர்கள் பிரோஸ்ஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே போன்றோர்களாவர். தீவிரவாதி களின் தலைவர்கள் வரிசையில் திலகர், அரவிந்த கோஷ், பிபின் சந்திர பால், லாலா லஜபதிராய், வ. உ. சிதம்பரனார் ஆகியோர்கள் இருந்தனர்.

1907இல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட கருத்து மோதல்களின் விளைவாகக் காங்கிரசு இரு கூறுகளாகப் பிரிந்தது. 1916இல் இலட்சுமணபுரி மாநாட்டில் பிளவுபட்ட காங்கிரசு மீண்டும் ஒன்றுபட்டது.

### லோகமான்ய பாலகங்காதரத் திலகர் (1856-1920)

லோகமான்ய பாலகங்காதரத் திலகர், நாட்டின் சுதந்தரத்திற்காகப் போராடிய பெரும் தலைவர்களுள் ஒருவர் ஆவார். அவர் மகாராட்டிர மாநிலத்தில் பிறந்

தவர். இளமையிலேயே ஆங்கிலேயரின் கொடுங் கோலாட்சியைக் கண்டு இவர் மனம் கொதித்தது.

கல்வி வளர்ச்சிப் பணிக்காகவும், மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்காகவும் திலகர் 'தக்காணக் கல்விச் சங்கம்' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். 'மராட்டா' என்ற ஆங்கில இதழையும், 'கேசரி' என்னும் மராத்தி இதழையும் தொடங்கினார். அவற்றின் வாயிலாக மக்களிடையே நாட்டுப்பற்றினையும் தேசிய உணர்ச்சியினையும் பரப்பி வந்தார்.



படம் 25.
லோகமான்ய பாலகங்காதரத் திலகர்

1905ஆம் ஆண்டில் வங்கப் பிரிவினையை எதிர்த்துத் திலகர் போராட்டம் நடத்தினார். ஆங்கிலேயரின் கொள்கைகளைக் கண்டித்து நாடெங்கிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தினார். 1906இல் நடந்த கல்கத்தா மாநாட்டில் 'அந்நியப் பொருள்களைப் புறக்கணித்தல்', 'சுயராச்சியக் கோரிக்கை' போன்ற தீர்மானங் களைக் கொண்டுவந்து தமது திட்டங்களுக்கு ஆதரவு பெற்றார். ஆங்கில அரசுடன் ஒத்துழைக்கக்கூடாது என்ற எண்ணத்தை மக்களிடையே உண்டாக்கினார். காங்கிரசு இயக்கத்தில் இவர் தீவிரவாதியாக விளங்கினார். திலகரின் தலைமையில் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பல போராட்டங்கள் நடைபெற்றன. ஆங்கில அரசு காங்கிரசில் பிளவு ஏற்படச் செய்யும் வகையில் தீவிரவாதிகளைக் கைதுசெயது, கடுமையான சிறைத் தண்டனைகளை விதித்தது. மிதவாதிகளிடம் சற்று மெத்தனமாகவே நடந்து கொண்டது. திலகருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்

தண்டனை வழங்கி, அவரைப் பர்மாவிலுள்ள மாண்டலேச் சிறைக்கு அனுப்பியது. 'சுயராச்சியம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்', என்று முதன் முதல் முழக்கமிட்டவர் திலகர் ஆவார்.

## *அரவிந்த கோஷ் (1872-1950)*

அரவிந்தர் என்பார் வங்காளத்தில் பிறந்தவர். இங்கிலாந்து சென்று உயர்கல்வி பெற்றார். அவர் வாழ்ந்த காலத்தில் சிறந்த அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். தீவிர நாட்டுப் பற்றுடையவரான இவர், தாம்பெற்ற இந்திய சிவில் பணிப் பதவி (ஐ. சி. எஸ்.) யைத் துறந்து, விடுதலை இயக்கத்தில் முழுமனதுடன் இறங்கினார். தமது பேச்சுத் திறனாலும் எழுத்துத் திறனாலும் ஆங்கில ஆட்சியின் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்து வந்தார். காங்கிரசு இயக்கத்தில் இவர் தீவிரவாதிகளின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். வங்கப் பிரிவினையை எதிர்த்து நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் இவர் முக்கியப் பங்குவகித்தார். புகழ்மிக்க 'அலிப்பூர் சதி வழக்கில்' அரவிந்தரை ஆங்கில அரசு சம்பந்தப்படுத்தியது.



படம் 26.
அரவிந்தர்

பிரிட்டிஷ் இந்திய அரசுப் பிடியிலிருந்து இவர் வெளியேறி, பிரெஞ்சு ஆட்சியிலிருந்த புதுச்சேரியில் தஞ்சம் அடைந்தார். அங்கு அவர் தமது எஞ்சிய நாள்களை அரசியலிலிருந்து விலகி, ஆன்மீக வாழ்வில் கழித்தார்.

## வ. உ. சிதம்பரனார் (1872-1936)

தென்னாட்டுத் திலகர் என்று போற்றப்பட்ட வ. உ. சிதம்பரனார் தமிழ்நாட்டில் சுதந்தரப் போராட்டத்தில் முன்னணியில் இருந்தவர். இந்திய தேசியக் காங்கிரசில், திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளின் பக்கம் இவர் இருந்தார். இளமை முதற்கொண்டே தேசிய உணர்வு கொண்டவராகவும் விளங்கினார். வங்கப் பிரிவினையை எதிர்த்து நடந்த போராட்டத்தில், தமிழ் நாட்டில் தலைமையேற்று நடத்தினார். சுதேசி இயக்கத்தைத் தமிழகமெங்கும் பரப்பினார்.



படம் 27.
வ. உ. சிதம்பரனார்

இவர் ஆங்கிலேயருக்கு எதிராகத் தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தோற்றுவித்தார். எனவே, மக்கள் இவரைக் கப்பலோட்டியத் தமிழர் என்று அழைத்தனர். அரசின் கொடுமைகளை எடுத்துக் கூறி, மக்களிடையே இவர் தேசிய உணர்ச்சியை ஊக்குவித்து வந்தார். அதனால், அரசாங்கத்தின் சினத்திற்கு உள்ளாகிக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். சிறையில் இவர் பல கொடுமைகளை அனுபவித்து நலிந்தார்.

வ. உ. சி. சிறந்த தமிழ்ப் புலவராகவும் கவிஞராகவும் விளங்கினார். சமூகச் சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டினார். தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்டார். பெண்களின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டார்.

அவருடைய இயக்கங்களுக்கு அமரகவி சுப்பிரமணிய பாரதியாரும், சுப்பிரமணிய சிவாவும் துணை நின்றனர்.

### *மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் (1909)*

இந்திய தேசியக் காங்கிரசில் ஏற்பட்ட பிளவைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள ஆங்கில அரசு முனைந்தது. மிதவாதிகளைத் திருப்திசெய்யவும், தீவிரவாதிகளின் வளர்ச்சியைத் தடைசெய்யவும் திட்டமிட்டது. இச்சமயத்தில் முஸ்லிம்லீக், ஆங்கில அரசிற்குச் சாதகமாக இருந்தது. முஸ்லிம் தேசியவாதிகளிடமிருந்து முஸ்லிம் லீகினரைப் பிரிப்பதும் ஆங்கில அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இத்தகைய நோக்கங்களுடன் அரசப் பிரதிநிதி மின்டோ பிரபுவும், இந்திய செயலரான மார்லி என்பாரும் கலந்தாலோசித்து எடுத்துக்கொண்ட முடிவே 1909ஆம் ஆண்டின் மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள் ஆகும். இதன் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:

1. மாநில, மத்திய சட்டசபைகளின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. எனினும், அரசாங்க அதிகார வர்க்கத்தினர் மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தது.

2. அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை விவாதிக்கும் உரிமை, சட்டசபைக்கு அளிக்கப்பட்டது. ஆனால், விவாதத்தின் முடிவை அரசு ஏற்கவேண்டுமென்ற கட்டாயமில்லை.

3. முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி வழங்கப்பட்டது.

இந்திய தேசியக் காங்கிரசு எதிர்பார்த்த அளவிற்கு மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் இல்லை. மேலும்,

வகுப்புவாதத் தேர்தல் தொகுதிமுறையைப் புகுத்தியதைக் காங்கிரசு வெறுத்தது. இந்த முறையானது, காலப்போக்கில் பல வகுப்புக் கலவரங்கள் தோன்ற வழிவகுத்தது. ஆங்கில ஆட்சியில் நம்பிக்கை கொண்டிருந்த காங்கிரசு மிதவாதிகள்கூட ஏமாற்றமடைந்தனர். இச்சட்டத்தினால் உண்மையான, மக்களாட்சிக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இதனால், பிளவுபட்ட மிதவாதிகளும், தீவிரவாதிகளும் 1916இல் ஒன்றாய் இணைந்தனர். தேசியக் காங்கிரசு, விடுதலை இயக்கத்தைத் தீவிரப்படுத்தியது.

## பயிற்சி

I. பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. விக்டோரியாப் பேரரசியாரின் அறிக்கையின்படி:

(அ) 1857ஆம் ஆண்டு பெரும்புரட்சி, முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

(ஆ) இந்திய நிர்வாகத்தை இங்கிலாந்தின் அரசியார் நேரடியாக ஏற்றுக்கொண்டார்.

(இ) தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி ஆனார்.

(ஈ) இந்தியச் செயலர் நியமிக்கப்பட்டார்.

2. படித்த இந்தியர்கள் ஆங்கில ஆட்சியின்மீது வெறுப்படையக் காரணம் எதுவெனில்:

(அ) இந்தியர்களின் தேசிய உணர்ச்சியை ஆங்கில அரசு மதிக்கவில்லை.

(ஆ) அவர்கள் இந்திய சிவில் பணிக்கான தேர்வுகளை இலண்டனில்தான் எழுத வேண்டியிருந்தது.

(இ) சுரேந்திரநாத் பானர்ஜி இந்திய சிவில் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.

(ஈ) சுரேந்திரநாத் பானர்ஜி தேசிய விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தினார்.

3. 'சுயராஜ்யம்' என்பதை தனது முக்கிய நோக்க மாகக் காங்கிரசு அறிவித்தது எப்போது என்றால் :

(அ) 1907இல் சூரத் மாநாட்டில்.

(ஆ) 1906இல் கல்கத்தா மாநாட்டில்.

(இ) 1885இல் பம்பாயில் நடந்த முதல் மாநாட்டில்.

(ஈ) 1916இல் நடைபெற்ற லட்சுமணபுரி மாநாட்டில்.

4. 1909ஆம் ஆண்டு மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் காங்கிரசுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஏனெனில்,

(அ) அதன் கோரிக்கைகள் நிறைவுபெறவில்லை.

(ஆ) மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே வேற்றுமைகளை வளர்த்தது.

(இ) சட்டசபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

(ஈ) தனித் தொகுதிமுறை வகுப்புவாரி அடிப்படையில் அளிக்கப்பட்டது.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. இந்திய தேசியக் காங்கிரசு———ஆண்டில் நிறுவப் பட்டது.

2. வங்காளத்தை இரண்டு தனி மாகாணங்களாகப் பிரித்த அரசப் பிரதிநிதி———ஆவார்.

3. அலிகார் பல்கலைக்கழகம் தோன்றக் காரணமானவர் ———ஆவார்.

4. நவாப் சலிமுல்லா என்பவர்———நிறுவினார்.

5. 'கப்பலோட்டிய தமிழர்' என்று அழைக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத் தலைவர்———ஆவார்.

III. குறுகிய விடை எழுதுக :

1. முதல் இந்திய சுதந்தரப் போர் முடிந்ததும் இந்திய நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை ?

2. பேரரசி விக்டோரியாவின் அறிக்கையில் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் யாவை ?

3. இந்திய தேசியக் காங்கிரசு தோன்றுவதற்குக் காரணமாய் விளங்கிய தலைவர்கள் யாவர் ?

4. சர் சையது அகமதுகான் ஏன் காங்கிரசை எதிர்த்தார்?

5. முஸ்லிம் லீகின் நோக்கங்கள் யாவை?

6. காங்கிரசில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே வேற்றுமைகள் ஏற்பட அமைந்த காரணங்கள் யாவை?

7. மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?

**IV. விரிவான விடை எழுதுக:**

1. இந்திய தேசியக் காங்கிரசு தோன்றக் காரணங்கள் யாவை?

2. இந்திய தேசியக் காங்கிரசின் தொடக்கக் கால நோக்கங்கள் யாவை?

3. 1905இல் நடைபெற்ற சம்பவங்கள் எவ்வாறு தேசிய இயக்கத்தை வலுவடையச் செய்தன?

4. சுதந்தரப் போரில் பாலகங்காதர திலகரின் அரும் பணிகளை விவரித்து எழுதுக.

5. மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியக் கூறுகள் யாவை? காங்கிரசு ஏன் அவைகளை ஏற்றுக்கொள்ள வில்லை?

## செய்முறைப் பயிற்சி

1. தேசிய விடுதலை இயக்கத்தில் பங்குகொண்ட திலகர், அரவிந்தர், வ. உ. சி. போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலகத்திலுள்ள புத்தகங் களின் மூலம் படித்துத் தெரிந்துகொள்க.

2. தேசியத் தலைவர்களின் படங்களைச் சேகரிக்கவும்.

# 7. இந்திய சுதந்தரப்போராட்டமும், பிரதிநிதித்துவ ஆட்சி மன்றங்களின் வளர்ச்சியும்

## (இரண்டாம் நிலை)

### *முதல் உலகப் போரின்பொழுது இந்திய அரசியலில் ஏற்பட்ட விளைவுகள்*

முதல் உலகப்போர் (1914 - 18) நடந்துகொண்டிருக்கும்பொழுது இந்திய அரசியலில் சில புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. பிரிட்டன் துருக்கியின்மீது படையெடுத்து, அந்த நாட்டைக் கைப்பற்றியது. துருக்கிய சுல்தான், முஸ்லிம் சமயத்தினரால் புனிதமாகக் கருதப்படும் 'காலிபா'ப் (சமயத் தலைவர்) பதவியை வகித்து வந்தார். பிரிட்டன் அவரை அப்பதவியிலிருந்து நீக்கியது. எனவே, இதுகாறும் பிரிட்டனை ஆதரித்து வந்த இந்திய முஸ்லிம்கள் ஆங்கில ஆட்சியின்மீது வெறுப்பு அடைந்து கிலாபத் இயக்கத்தைத் துவக்கினர். 1916இல் லக்னோ காங்கிரசு மாநாட்டில், பிரிந்திருந்த மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றாக இணைந்தனர். மேலும், அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தைத் தோற்றுவித்தார். திலகரும் அவ்வியக்கத்திற்குத் தமது ஆதரவை நல்கினார். பின்னர் இந்திய தேசியக் காங்கிரசு, பிரிட்டிஷ் அரசின் போர் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தந்து உதவி செய்ய முடிவு செய்தது.

### *மான்டேகுவின் ஆகஸ்டு மாத அறிக்கை (1917)*

பிரிட்டன், முதல் உலகப்போரில் தனது ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்த நாடுகளின் போர்வீரர்கள் மற்றும் பொருளுதவிகளைக் கொண்டு வெற்றிபெற்றது.

அப்போரில் ஏழு இலட்சம் இந்திய போர்வீரர்கள் பிரிட்டனுக்காகப் போரில் கலந்துகொண்டனர். இந்திய கருவூலத்திலிருந்து 100 மில்லியன் பிரிட்டிஷ் பவுன்கள் செலவுசெய்யப்பட்டன. எனவே, இந்திய அரசின் செயலரான சர் எட்வின் சாமுவேல் மான்டேகு இந்தியர்களின் உதவிக்குக் கடமைப்பட்டவராக இருந்தார். அவர் 1917 ஆகஸ்டில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில், போர் முடிவடைந்ததும் இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி படிப்படியாக வழங்கப்படும் என்றும், சட்டமன்றங்களிலும் அரசாங்க நிர்வாக உயர் பதவிகளிலும் மேலும் பல இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் கூறப்பட்டன.

1918இல் போர் முடிவடைந்தது. ஆனால், தனது போர்க்கால வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கம் பிரிட்டனுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகிற்குமிடையே இணக்கம்ஏற்பட்டது. கிலாபத், தன்னாட்சி ஆகிய இயக்கங்கள் தொடங்கப்பட்டன.

### *1919ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம்*

மான்டேகுவும், இந்திய அரசப் பிரதிநிதியான செம்ஸ்போர்ட் பிரபுவும் கூடி 1918இல் அறிக்கை ஒன்றினை வெளியிட்டனர். அதில், இந்திய அரசாங்கத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. மான்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்பட்ட இந்த மாற்றங்களைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு '1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்ட' த்தை இயற்றியது. அதன் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :

1. மத்திய சட்டசபை இரு சபைகளாக மாற்றி அமைக்கப்பட்டது. அவை: கீழ்ச்சபை அல்லது சட்டசபை மற்றும் மேல்சபை அல்லது இராஜ்யசபை என்பவையாகும்.

2. இந்தியரின் நலனைக் கவனித்துக்கொள்ள இங்கிலாந்தில் ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டார். அப்பதவி இந்தியர் ஒருவருக்கே வழங்கப்பட்டது.

3. இந்திய செயலர் மற்றும் அரசப் பிரதிநிதி ஆகியோரின் ஆலோசனை சபைகளில் இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.

4. மாகாண சட்டசபைகள் விரிவுபடுத்தப்பட்டன. மாகாண நிர்வாக இலாகாக்கள் இரு துறைகளாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒதுக்கப்பட்டதுறை மற்றும் மாற்றப்பட்டதுறை என்பவையாகும். ஒதுக்கப்பட்ட துறையில் சட்டம், நிதி, நீதி, காவல் போன்றவை அடங்கும். இவை, ஆளுநரின் நிர்வாகக் குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. மாற்றப்பட்ட துறையில் கல்வி, மருத்துவம், பொதுச்சுகாதாரம், விவசாயம், போன்றவை அடங்கும். இவற்றைப் பொது மக்களின் பிரதிநிதிகளாகிய அமைச்சர்கள் கவனிப்பார்கள். இம்முறையிலான அரசாங்கம் 'இரட்டை ஆட்சி' எனப்பட்டது.

மான்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தச் சட்டம் மத்திய அரசில் உண்மையான பொறுப்பாட்சியை ஏற்படுத்தவில்லை. படை நிர்வாகம், வெளியுறவு, நிதி, இந்திய சுதேச மன்னர்கள், சமயம் ஆகிய பல முக்கியத் துறைகளில் அரசப் பிரதிநிதியின் முன் அனுமதியின்றி மத்திய சட்டசபையில் மசோதாக்கள் கொண்டுவர முடியாது. மற்றத் துறைகளிலும் செய்யப்பட்ட தீர்மானங்களை ஏற்கவோ, மறுக்கவோ அரசப் பிரதிநிதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், தனி ஆணைகளின் மூலம் சட்டங்களை அறிவிக்க அவருக்கு மேலான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனவே, பொறுப்பாட்சி அல்லது இரட்டை ஆட்சி என்பது வெறும் சொல்லளவிலேயே இருந்தது. இச் சட்டத்தினால் திருப்தி அடையாத இந்தியர்கள்

தங்களது உரிமைகளுக்காகவும், தன்னாட்சிக்காகவும் கடுமையாகப் போராடத் தொடங்கினர்.

### ரௌலட் சட்டமும், ஜாலியன்வாலாபாக் படுகொலையும்

பிரிட்டிஷ் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை. எனவே, இந்திய தேசியக் காங்கிரசு அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்துக் கதவடைப்புகள், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவைகளை நடத்தியது. இந்தக் கிளர்ச்சிகளை ஒடுக்க அரசாங்கம் 1919இல் ரௌலட் சட்டத்தைக் கொண்டுவந்தது. இந்தச் சட்டத்தின்படி அரசாங்கம் விசாரணை இன்றி எவரையும் தண்டிக்க அதிகாரம் பெற்றது. அரசாங்கத்தின் இந்த அடக்கு முறைச் சட்டத்திற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக, மார்ச்சு 30ஆம் நாள் குறிப்பிடப் பட்டது. காவல்துறையினர் டில்லி, லாகூர், அமிர்த சரஸ் ஆகிய இடங்களில் மக்கள் கூட்டங்களின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தக் கொடுஞ்செயல் களுக்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக அமிர்தசரசில் ஜாலியன்வாலாபாக் என்னுமிடத்தில்1919ஆம்ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. மக்கள் பெருந்திரளாக அங்குக் குழுமியிருந் தனர். கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்று வந்தது. மேலும் தற்காப்பிற்கு ஆயுதம் ஏதும் தாங்கியும் கூட்டத்தினரில் ஒருவரும் இல்லை. அப்படி இருந்தும் யாதொரு முன்னறிவிப்பின்றி, ஜெனரல் டையர் என்ற ஆங்கில அதிகாரி மக்கள் கூட்டத்தினரைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துமாறு தன் படையினருக்கு ஆணையிட்டார். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உள்பட நூற்றுக்கணக்கான மக்கள் துப்பாக்கிக் குண்டு களுக்கு இரையாயினர். இந்த நிகழ்ச்சி 'ஜாலியன் வாலாபாக் படுகொலை' என்றும், 'அமிர்தசரஸ் படுகொலை' என்றும் வழங்கப்படுகிறது.

### காந்தியடிகள் காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றல்

ஜாலியன்வாலாபாக் படுகொலையினால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் ஆங்கில ஆட்சியின் மீது கடும் சினம் கொண்டனர். தேசிய விடுதலை இயக்கம் மேலும் தீவிரமடைந்தது. இந்தச் சூழ் நிலையில் இந்திய தேசியக் காங்கிரசு இயக்கம் மகாத்மா காந்தியடிகளின் தலைமையின்கீழ் வந்தது. திலகர் கோகலே போன்ற பழம்பெரும் தேசியத் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலகை நீத்தனர். இந்திய தேசிய இயக்கத்தின் தனிப்பெரும் தலைவராகக் காந்தியடிகள் விளங்கலானார்.

### கிலாபத் இயக்கம்

முதல் உலகப்போரின் முடிவில் துருக்கியப் பேரரசு சிதைக்கப்பட்டு, பிரிட்டனின் ஆதிக்கம் அங்கு ஏற்பட்டது. முஸ்லிம் இனத்தவர்களால் போற்றப்படும் 'காலிபா'வாகிய துருக்கிய சுல்தானின் வீழ்ச்சி இந்திய முஸ்லிம்களிடையே பிரிட்டிஷ் ஆட்சியின் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. வரம்பற்ற ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியின் வளர்ச்சியை எதிர்க்க முஸ்லிம் லீக் காங்கிரசுடன் ஒத்துழைக்க முன்வந்தது. இவ்வொற்றுமையின் விளைவாகக் 'கிலாபத் இயக்கம்' தோன்றியது. 'அலி சகோதரர்கள்' என்று புகழ்பெற்றிருந்த முகமது அலியும், சௌகத் அலியும் இந்த இயக்கத்தின் முன்னணித் தலைவர்



படம் 28.
மௌலானா அபுல்கலாம் ஆசாத்

களாவர். காந்தியடிகளும், மௌலான அபுல்கலாம் ஆசாத் போன்ற தேசிய முஸ்லிம் தலைவர்களும் கிலாபத் இயக்கத்திற்குப் பெரும் ஆதரவு நல்கினர். இவ்வியக்கத்தின் மூலம் இந்து, முஸ்லிம்களிடையே இணக்கம் ஏற்பட்டது.

## ஒத்துழையாமை இயக்கம்

முதல் உலகப்போர் நிகழ்ந்துகொண்டிருந்த நேரத்தில், அந்நிய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான **சத்தியா** கிரகம் என்ற அகிம்சைமுறையிலான இயக்கத்தை தமது ஆயுதமாகப் பயன்படுத்தி, காந்தியடிகள் அதற்கான வழிமுறைகளைப் பக்குவப்படுத்தி வந்தார். 1917இல் பீகாரில் சம்பரான் என்னுமிடத்தில் ஆங்கிலத் தோட்ட முதலாளிகளின் கொடுங்கோலை எதிர்த்து அவுரிப் பயிரிடும் குடியானவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். அந்த அறப் போராட்டத்திற்குக் காந்தியடிகளும், இராஜேந்திரப் பிரசாத் அவர்களும் தங்களது ஆதரவை நல்கி, போராட்டம் வெற்றிபெறச் செய்தனர். அதன்பின், அகமதாபாத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தைக் காந்தியடிகள் முன்னின்று நடத்தி, அவர்களின் குறைகள் அகற்றப்பட உதவினார். பின்னர் குஜராத்தில் கெய்ரா மாவட்டத்தில் குடியானவர்கள் வரிகொடா இயக்கம் நடத்தினர். இவ்வியக்கத்திற்கும், காந்தியடிகள் தலைமை தாங்கி வெற்றி கண்டார். அரசாங்கம் நிலவரி உயர்வை அகற்றியது. இப்போராட்டத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் காந்தியடிகளுக்கு உறுதுணையாக நின்றார்.

1920இல் காங்கிரசு 'இரட்டை ஆட்சி' முறையை எதிர்த்தது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். நாடெங்கிலும் அவரது அறைகூவலுக்கு இணங்கிச் சட்டமன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவைகளுக்குச் செல்லுதல் புறக்கணிக்கப்பட்டது.

அரசாங்கம், ஒத்துழைக்க மறுத்தவர்களை இரக்கமின்றி ஒடுக்க முயன்றது. எனினும், மாகாண சட்டசபைகள் புறக்கணிக்கப்பட்டன. மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ் போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் தொழில் செய்வதை நிறுத்தினர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அறப் போராட்டத் தொண்டர்களைச் சிறைப்படுத்தினர். இவ்விதமான சூழ்நிலையில் 1921இல் வேல்ஸ் இளவரசர் எட்வர்ட் இந்தியாவிற்கு வருகைதந்தார். அவர் பம்பாயில் வந்து இறங்கியபோது, அவர் வருகையை எதிர்த்து மக்கள் கருப்புக்கொடிகள் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். பிரிட்டிஷாரின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து நாடு முழுவதும் அமைதியான முறையில் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

1922 பிப்ரவரி மாதத்தில் ஐக்கிய மாகாணத்திலுள்ள (உ. பி.) சௌரிசௌரா என்னுமிடத்தில் காவல்நிலையம் ஒன்றிற்கு மக்கள் கூட்டம் தீவைத்தது. இந்த வன்முறைச் செயலால் காந்தியடிகள் மனவருத்தமடைந்தார். உடனடியாக அவர் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிட்டார். எனினும், அவர் கைது செய்யப்பட்டு, புனேவிற்கருகில் எரவாடாச் சிறையில் அடைக்கப்பட்டார்.



படம் 29.
சி. ஆர். தாஸ்

### *சுயராஜ்யக் கட்சி (1923)*

ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் திடீரென்று நிறுத்தியது சில காங்கிரசு தலைவர்களுக்கு ஏமாற்றமளித்தது. சி. ஆர். தாஸ், மோதிலால் நேரு மற்றும் சிலர் 'சுயராஜ்யக் கட்சி' யை நிறுவினர். சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு இரட்டை ஆட்சி

முறையைச் செயலற்றுவிடச் செய்வதை இக்கட்சி தன் நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தக் கட்சியினர் மாகாண, மத்திய சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அரசாங்கத்தின் திட்டங்களை இவர்கள் கடுமையாக எதிர்த்து வெற்றி அடைந்தனர். ஆனால், ஆளுநர்களும் அரசப் பிரதிநிதியும் தங்களுடைய சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்றினர்.

### *சைமன் குழு (1927)*

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, புதிய அரசியல் அமைப்பு எவ்வாறு இயங்கிவருகின்றது என்பதைக் குறித்து ஆராயவேண்டுமென்று 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. எனினும், அரசியல் அமைப்பைக் காங்கிரசு குறைகூறி வந்ததால், பிரிட்டிஷ் அரசாங்கம் கெடுக்காலம் முடிவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சைமன் குழுவினை அமைத்தது. இக்குழு இந்திய அரசியல் அமைப்பினைப்பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்டது. சர் ஜான் சைமன் என்பார் இக்குழுவின் தலைவர் ஆவார். ஆனால், இக்குழுவில் இந்தியர் ஒருவரும் இல்லை. எனவே, காங்கிரசும் மற்ற அரசியல் கட்சிகளும் இக்குழுவைப் புறக்கணித்தன. இந்தியாவெங்கிலும் அமைதியான முறையில் சைமன் குழுவின் வருகையை எதிர்த்துக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்தியாவில் தனது பயணத்தை முடித்தபின், சைமன் குழு இங்கிலாந்திற்குத் திரும்பிச்சென்றது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குச் சைமன் குழு சில பரிந்துரைகளைச் செய்தது. அதன்படி, இந்திய மாகாணங்களுக்குச் சுயாட்சி அளிக்கப்படவேண்டும், பிரிட்டிஷ் இந்திய இராய்ச்சியங்களும், சுதேச சமஸ்தானங்களும் அடங்கிய கூட்டாட்சி அமைப்புமுறை ஏற்படுத்தவேண்டும் என்றும் பரிந்துரைகள் செய்யப்

பட்டன. இது சம்பந்தமாக மேலும் ஆலோசனைகள் செய்ய இலண்டனில் வட்டமேசை மாநாடுகள் நடத்தப்படவேண்டுமென்றும் பரிந்துரை செய்யப் பட்டது.

### லாகூர் காங்கிரசு (1929)

சைமன் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் இலண்டன் நகரில் வட்டமேசை மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் அழைக்கப்பட்டன.

இந்த நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய தேசியக் காங்கிரசு மாநாடு லாகூரில் டிசம்பர் மாதம் 1929இல் கூடியது. இம் மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமைவகித்தார். அப்போது 'முழுச் சுதந்தரமே' காங்கிரசின் இறுதி யான இலட்சியம் என அறி விக்கப்பட்டது. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வ தில்லை என்றும் ஒத்துழை யாமை இயக்கத்தைத் தொடங்குவதென்றும் தீர் மானிக்கப்பட்டது. 1929ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி நள்ளிர வில் ஜவஹர்லால் நேரு இந்தியாவின் தேசியக் கொடியைப் பறக்கவிட்டார். அதனைத் தொடர்ந்து 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி இந்தியா முழுவதும் சுதந்தர



படம் 30.
ஜவஹர்லால் நேரு

நாளாகக் கொண்டாடப்பட்டது. அன்றுமுதல் இந்தியர் விடுதலை அடைந்த நாள்வரை ஒவ்வோர் ஆண்டும் அந்த நாள் இந்தியாவின் சுதந்தர நாளாகக் கொண்டாடப்பட்டுவந்தது.

### வட்டமேசை மாநாடுகள்

1930ஆம் ஆண்டில் நடந்த முதல் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசுத் தலைவர்கள் கலந்துகொள்ள வில்லை. எனவே, மாநாடு பயனற்றுப் போயிற்று. காங்கிரசுத் தலைவர்கள் கலந்துகொள்ளவேண்டியதன் அவசியத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது. இந்திய அரசப் பிரதிநிதியான இர்வின் பிரபு காந்திஜி யுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாய நிலையில் இருந்தார். அதன் விளைவே, 1931ஆம் ஆண்டு மார்ச்சில் ஏற்பட்ட காந்தி-இர்வின் உடன்படிக்கையாகும். அதன்படி காங்கிரசு தேசியவாதிகள் அனைவரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அரசு, தனது தனி ஆணைகள் அனைத்தையும் திரும்பப்பெற்றது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவைக்கவும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளவும் சம்மதித்தார். அதன்படியே 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குக் காங்கிரசின் ஒரே பிரதிநிதியாகக் காந்தி யடிகள் சென்றார். ஆனால், அம்மாநாடு காந்தியடி களின் திட்டங்களை ஏற்கவில்லை. அவர் பம்பாயில் வந்து இறங்கியதும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். 1932இல் மூன்றாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொண்ட மற்றக் கட்சித் தலைவர்களுடன் பிரிட்டிஷ் அரசு நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை நிறைவேற்றியது.

## *1935ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம்*

இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

1. மத்திய அரசாங்கத்தில் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களையும், இந்திய சுதேச அரசுகளையும் இணைக்கும் 'கூட்டாட்சி' ஏற்படுத்தப்பட்டது. மத்திய அரசில் 'இரட்டை ஆட்சி' முறை புகுத்தப்பட்டது. பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல் முதலிய துறைகள் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழுவின் பொறுப்பில் விடப்பட்டது. மற்றத் துறைகள் சட்டசபைக்குப் பொறுப்புள்ள அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

2. மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை நீங்கி, முழுப் பொறுப்பாட்சி ஏற்பட்டது.

3. சிந்துவும் ஒரிசாவும் தனி மாகாணங்களாயின. பர்மாவும், ஏடனும் பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்டன.

4. ரிசர்வ் பாங்க் இந்தியாவில் ஏற்படுத்தப் பட்டது.

5. இந்தியா முழுமைக்கும் உயர்நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

### *மாகாணங்களில் சுயஆட்சி உருவாதல்*

மத்திய அரசில் கூட்டாட்சி ஏற்படுத்துவதென்பது ஏட்டளவிலேயே நின்றுவிட்டது. ஆனால், மாகாணங்களில் ஓரளவிற்கு உண்மையான சுயஆட்சி 1937இல் ஏற்படுத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட மாகாணச் சட்டசபைகள் உருவாக்கப்பட்டன. 1937இல் நடைபெற்ற தேர்தல்களில் இந்திய தேசியக் காங்கிரசு எட்டு மாகாணங்களில் பெரும்பான்மை பெற்று அமைச்சரவைகளை அமைத்தது.

இராஜகோபாலாச்சாரியின் தலைமையிலான அமைச்சரவை, சென்னை மாகாணத்தில் ஏற்படுத்தப் பட்டது.

முஸ்லிம் லீக் இரு மாகாணங்களில் மட்டுமே பெரும்பான்மை பெற்று அமைச்சரவைகளை ஏற்படுத்தியது. எனினும், எல்லா மாகாணங்களிலும், முஸ்லிம் லீக்கின் உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம்பெற வேண்டுமென்று முஸ்லிம் லீக் வற்புறுத்தியது. ஆனால், காங்கிரசு லீக்கின் கோரிக்கைக்கு இணங்க மறுத்தது. எனவே, 1940இல் நடைபெற்ற லாகூர் மாநாட்டில் முஸ்லிம் லீக் முஸ்லிம்கள் தனி இனத்தவர்கள் என்றும் காங்கிரசின் ஆட்சியில், அவர்களுக்கு நீதி வழங்கப் படாது என்றும் கூறி 'பாகிஸ்தான்' என்ற பெயர் கொண்ட தனிச் சுதந்தர நாடு அமைக்கப்படவேண்டு மென்றும் அறிவித்தது.

## பயிற்சி

**I. பின்வரும் விடைகளில் எது மிகச் சரியானது:**

1. இந்திய தேசிய விடுதலை இயக்கம் முதலாம் உலகப் போருக்குப் பிறகு மேலும் வலுவடைந்தது, ஏனெனில் :

   (அ) பிரிட்டன் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தயங்கியது.

   (ஆ) பல இந்தியப் போர்வீரர்கள் பிரிட்டனுக்காக நடந்த இப்போரில் பலியாயினர்.

   (இ) பிரிட்டன் ஐரோப்பாவில் தன் எதிரி நாடுகளுடன் நடத்திய இப்போரிற்காக இந்தியரின் பணமும், பொருளும் செலவிடப்பட்டது.

   (ஈ) பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராட முஸ்லிம் லீகும் முன்வந்தது.

2. 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் இந்தியர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை, ஏனென்றால்:

   (அ) மத்திய சட்டசபையின் மீதான அரசப் பிரதிநிதியின் அதிகாரங்கள் அளவுகடந்து வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 'இரட்டை ஆட்சி' அமைக்கப்படும் என்று கூறப் பட்டது வெறும் சொல்லளவிலேயே நின்றுவிட்டது.

(இ) இதன் கூறுபாடுகளில் சில காங்கிரசுக்கு பெருத்த ஏமாற்றத்தை உண்டுபண்ணின.

(ஈ) முஸ்லிம் லீக், தாம் எதிர்பார்த்த அளவிற்குச் சலுகைகள் பெறவில்லை.

3. இந்தியாவில் கிலாபத் இயக்கம் தோன்றுவதற்கான முக்கியக் காரணம்:

(அ) ஜாலியன் வாலாபாக்கில் நடந்த படுகொலையின் விளைவு.

(ஆ) முஸ்லிம் லீகுடன் காந்திஜி சமரசம் ஏற்படுத்திக் கொண்டார்.

(இ) துருக்கியப் பேரரசின் சிதைவு.

(ஈ) முஸ்லிம் லீகிற்கும் காங்கிரசுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடு.

4. 1922இல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவைத்தார், ஏனெனில்:

(அ) பிரிட்டிஷ் அரசு அடக்குமுறைகளைக் கையாண்டது.

(ஆ) முஸ்லிம் லீக் காங்கிரசுடன் உத்துழைக்க மறுத்தது.

(இ) காங்கிரசுகாரர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுச் சிறையி லிடப்பட்டனர்.

(ஈ) சௌரி சௌராவில் வன்முறைகளில் சிலர் ஈடுபட்டது காந்தியடிகளின் உள்ளத்தைப் புண்படுத்தியது.

5. முதன் முறையாக மாகாணங்களில் பொறுப்பாட்சி அமைச்சரவைகள் ஏற்படுவதற்கு வழிசெய்த சட்டம்:

(அ) 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம்.

(ஆ) 1919ஆம் ஆண்டு மான்ட் போர்ட் சட்டம்.

(இ) 1909ஆம் ஆண்டு மின்டோ-மார்லி சட்டம்.

(ஈ) 1929ஆம் ஆண்டில் லாகூர் காங்கிரசு மாநாடு முழுச் சுதந்தரம் பெறுவதே தனது குறிக்கோள் என முடிவுசெய்தது.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. முதல் உலகப் போர்———ஆம் ஆண்டிலிருந்து ———ஆம் ஆண்டுவரை நடைபெற்றது.
2. மாகாணங்களில் ‘இரட்டை ஆட்சி’ முறையைப் புகுத்திய சட்டம்———ஆகும்.
3. மக்களின் தேசிய எழுச்சியை ஒடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம்———என்ற சட்டத்தைப் பிறப்பித்தது.
4. கிலாபத் இயக்கத்தின் மாபெரும் தலைவர்கள்— ——, ———ஆவர்.
5. ஆங்கிலேயரின் கொடுங்கோல் ஆட்சிக்கெதிராகக் காந்தியடிகள்———தை தமது ஆயுதமாகத் தேர்ந்தெடுத்தார்.

**III. குறுகிய விடை எழுதுக :**

1. முதல் உலகப் போர் இந்திய அரசியலில் ஏற்படுத்திய விளைவுகள் யாவை ?
2. 1919ஆம் ஆண்டு மான்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் ஏன் இந்தியர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை ?
3. ‘ஜாலியன்வாலாபாக் படுகொலை’யைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக.
4. காந்தியடிகள் முதன்முதலில் சத்தியாகிரக முறையைப் பின்பற்றி எந்த இடங்களில் நடத்திய போராட்டங்களில் வெற்றி கண்டார் ?
5. சுயராஜ்யக் கட்சியின் தலைவர்கள் யாவர் ? அக்கட்சியின் நோக்கங்கள் யாவை ?
6. 1929இல் நடைபெற்ற லாகூர் காங்கிரசின் வரலாற்றுச்' சிறப்பினைக் கூறுக.
7. காந்தியடிகள் வட்டமேசை மாநாட்டில் ஏன் கலந்து கொண்டார் ? அதன் விளைவு யாது ?
8. எப்பொழுது, ஏன் முஸ்லிம் லீக் தனி நாடு கோரியது ?

**IV. விரிவான விடை எழுதுக:**

1. மான்ட்போர்ட் சீர்திருத்தச் சட்டத்தின் சிறப்பான அம்சங்கள் யாவை ?
2. 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் முக்கியக் கூறுபாடுகள் யாவை ?
3. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி விவரி.

## செய்முறைப் பயிற்சி

1. தேசியத் தலைவர்களின் படங்களைச் சேகரித்துப் படப்புத்தகத்தில் ஒட்டுதல்.
2. பள்ளி நூலகத்திலுள்ள நூல்களைப் படித்து இந்திய தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி மேலும் அறிந்துகொள்க.

# 8. இந்திய சுதந்தரப் போராட்டம்

## (இறுதி நிலை)

### இரண்டாம் உலகப் போரும்- இந்திய அரசியலில் அதன் விளைவுகள்

1939ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1945ஆம் ஆண்டுவரை இரண்டாம் உலகப்போர் நடைபெற்றது. இந்திய அரசியல் கட்சிகள், மாகாண அமைச்சரவைகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசியாமல், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை அப்போரில் ஈடுபடுத்தியது. அப்போரின் நோக்கங்களைத் தெளிவு படுத்தும்படி காங்கிரசு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டது. மேலும், மத்தியில் ஒரு தாற்காலிக தேசிய அரசாங்கம் ஏற்படுத்தவும், போர் நின்றபிறகு இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்கும்எண்ணம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உண்டா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தியது. ஆனால், இந்தக் கோரிக்கைகளை அரசப் பிரதிநிதி லின்லித்கோ பிரபு புறக்கணித்தார். எனவே, மாகாணங்களில் காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகின.

### *முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கை*

காங்கிரசு அமைச்சரவைகள் பதவியைத் துறந்தது முஸ்லிம் லீகிற்கு மகிழ்ச்சியைத் தந்தது. எனவே, அது தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் 'மீட்கப்பட்ட நாள்' கொண்டாடியது. அத்துடன், இந்தியாவைப் போரில் பங்கேற்கச் செய்த தற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்தது. 1940இல் லாகூரில் கூடிய மாநாட்டில்

முஸ்லிம் லீக் பாகிஸ்தான் என்ற பெயர்கொண்ட தனிநாடு கோரி ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது. பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லிம் லீகிற்கு மறைமுகமான ஆதரவு தந்தது. அதே நேரத்தில், காங்கிரசு இயக்கத்தை ஒடுக்கவும் முயற்சி செய்தது.

1940ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் போர் முயற்சிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்படுமென்று அறிவித்தது. அக்குழுவில் சில இந்தியத் தலைவர்களையும் சுதேச மன்னர்களையும் சேர்த்துக்கொள்வதாகவும் கூறிற்று. மேலும், போர் முடிவுற்றதும் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வரைவதற்குப்பிரதிநிதிகள் அடங்கியகுழு ஒன்று அமைக்கப்படுமென்றும் அறிவித்தது. போருக்குக் காங்கிரசு மற்றும் இதர கட்சிகளின் ஆதரவைப் பெறும் உள்நோக்கத்தில்தான் இந்த அறிவிப்புகள் செய்யப்பட்டன. இவ்வறிவுப்புகள் தெளிவாகப் பல பிரச்சினைகளைக் குறித்து விளக்கிக் கூறவில்லை. எனவே, காங்கிரசு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்க மறுத்தது. காந்தியடிகள் தனிநபர் சத்தியாகிரக இயக்கத்தைத் தொடங்கினார். அரசாங்கம் பல தேசியவாதிகளைக் கைது செய்தது. அவர்களுடைய பத்திரிகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

### *கிரிப்ஸ் திட்டம் (1942)*

1941இல் போரில் பிரிட்டனுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் நிலைமை கடும் சோதனையாக இருந்தது. ஜப்பானும் அவைகளுக்கு எதிராகப் போரில் இறங்கி இந்தோசீனா, பிலிப்பைன்ஸ், மலேயா, இந்தோனேஷியா, பர்மா முதலிய நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்தது. சிங்கப்பூர், ரங்கூன் ஆகிய இடங்களை ஜப்பானியர் தாக்கிக் கைப்பற்றினர். பின்னர்,

ஜப்பானியப் படைகள் அஸ்ஸாமின் எல்லைக்கருகில் முன்னேறியதும்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் பதட்டம் கொள்ளலாயிற்று. இந்திய மக்களின் ஆதரவையும், காங்கிரசின் ஆதரவையும் பெற முடிவுசெய்தது. எனவே, பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்ற பிரிட்டிஷ் அமைச்சர் தலைமையில் இந்தியாவிற்கு ஒரு தூதுக்குழுவினை அனுப்பினார்.

கிரிப்ஸ் தூதுக்குழு 1942ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் டில்லி வந்தடைந்தது. பல இந்திய தலைவர்களுடன் கலந்துபேசி, அவர்களுடைய நோக்கங்களை அறிந்த பின்னர் தமது திட்டத்தைக் கிரிப்ஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார். அவரது திட்டத்தின் அடிப்படையில், போர் நின்றபின்னர் இந்தியாவிற்கு 'டொமினியன் அந்தஸ்து' அளிக்கப்படும். இந்தியர்களின் விருப்பத்திற்கிணங்க அரசியல் நிர்ணயசபை ஒன்று அமைக்கப்படும். சுதேச அரசுகள் தம் விருப்பப்படி இயங்கலாம். அதாவது, மாகாணங்கள் புதிய டொமினியனில் சேருவதோ அல்லது சேராமல் இருப்பதோ அவைகளின் விருப்பமாகும். பாதுகாப்புத் துறையைத் தவிர மற்ற எல்லாத் துறைகளின்மீதும் அதிகாரம்பெற்ற ஒரு தாற்காலிக அரசாங்கம் மத்தியில் அமைக்கப்படும் என்றும் அத்திட்டத்தில் கூறப்பட்டது.

அத்திட்டத்தில் காங்கிரசு கோரிய 'முழுச் சுதந்தரம்' உடனே அளிக்கப்படவில்லை. எனவே, அது கிரிப்ஸின் திட்டத்தைப் புறக்கணித்தது. 'பாகிஸ்தான்' உருவாக்கப்படவேண்டுமென்ற முஸ்லிம் லீகின் கோரிக்கையைப் பற்றியும் இத்திட்டத்தில் ஏதும் கூறப்படவில்லை. எனவே, அந்தக் கட்சியும் கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இவ்வாறாகக் கிரிப்ஸ் தூது தோல்வியில் முடிந்தது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் அல்லது ஆகஸ்டுப் போராட்டம் (1942)

கிரிப்ஸ் திட்டம் தோல்வியுற்ற நேரத்தில்தான் ஜப்பானியர் இந்தியாவின் தலைவாயிலுக்கு வந்து விட்டனர். பிரிட்டனின் ஆட்சி இருப்பதால்தான் இந்தியாவிற்கு ஜப்பானியத் தாக்குதல்அபாயம் இருந்து வருகிறது என்று காந்திஜி எண்ணினார். பிரிட்டன் வெளியேறினால் இந்தியாவிற்கு ஜப்பானிய அபாயம் நீங்கிவிடுமென்று நம்பினார்.

எனவே, காந்திஜி 1942 ஆகஸ்ட் 8ஆம் நாள் அன்று 'வெள்ளையனே வெளியேறு' என்ற அறிக்கையை வெளியிட்டார். அன்று பம்பாயில் கூடிய காங்கிரசுக் கூட்டத்தில் ஜவஹர்லால் நேரு வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அது அந்த மாநாட்டில் எல்லோராலும் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முடிவு நாடெங்கிலும் பெருத்த பரபரப்பினை உண்டாக்கியது. வன்முறையற்ற பொதுமக்கள் போராட்டம் உடனடியாகத் தொடங்கப்படும் எனக் காங்கிரசுத் தீர்மானம் அறிவித்தது.

ஆனால், ஆங்கில அரசு புரட்சி நிலைமையை எதேச்சாதிகார முறையில் சமாளிக்க முயன்றது. 1942 ஆகஸ்டு எட்டாம் தேதி நள்ளிரவில் காங்கிரசுத்தலைவர் களைக் கைது செய்தது. காந்தியடிகள் உள்பட காங்கிரசின் செயற்குழு உறுப்பினர் அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஊர்வலங்களும்,பொதுக்கூட்டங்களும் தடைசெய்யப்பட்டன. அதனால், சினம்கொண்ட மக்கள் நாடெங்கும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், மறியல்கள் போன்ற வன்முறையற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். இவற்றை ஒடுக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது.

கூட்டங்களைக் கலைப்பதற்குத் தடியடிப் பிரயோகத்துடன் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. நல்ல வழிகாட்டிகளான தலைவர்களனைவரும் சிறையில் இருக்கவே, மக்களின் ஆவேசம் கட்டுக்கடங்காமல் போயிற்று. எனவே, சில இடங்களில் மக்கள் வன்முறைச் செயல்களிலும் இறங்கினர். இவ்வாறு நாடு முழுவதிலும் அரசாங்கத்தின் அடக்குமுறையும், அதனைமீறி மக்களின் அழிவுவேலையும் ஒன்றையொன்று தொடர்ந்து வந்தன. ஆனால், முஸ்லிம் லீக் ஆகஸ்ட் 1942இல் புரட்சியை எதிர்த்தது. மேலும் 'இந்தியாவைப் பிரிவினை செய்து வெளியேறு' என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது.

### *நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸும், (1897-1945) இந்திய தேசியப் படையும்*

பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்துச் சுபாஷ் சந்திரபோஸின் தலைமையின்கீழ்த் தீவிர இயக்கம் ஒன்று தோன்றியது. இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில் போஸ் அரசினரால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். எனினும், அவர் மாறுவேடம் பூண்டு காபூலுக்குத் தப்பிச்சென்றார். அங்கிருந்து பெர்லினுக்கும், பின் ஜப்பானியர் உதவியுடன் டோக்கியோவிற்கும் சென்றார். இறுதியாகச் சிங்கப்பூரை வந்தடைந்தார்.



படம் 31.
நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்

தென்கிழக்கு ஆசியாவில் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் குடியிருந்தனர். அவர்களைக்கொண்டு, ஜப்பானியருடன் சேர்ந்து பிரிட்டிஷ் படைகளை

எதிர்த்துப் போரிட ஒரு ப்படையைத் திரட்டும் முயற்சியில் நேதாஜி இறங்கினார். ஆங்லேயர் போரில் தோல்வி அடைந்தபோது விட்டுச்சென்ற இந்திய வீரர்களை ஒன்றுதிரட்டி 'இந்திய தேசிய இராணுவம்' (ஆஜாத் ஹிந்த் பௌஸ்) என்ற சுதந்தரப் படையை அமைத்தார். 'ஆஜாத் ஹிந்த்' என்ற சுதந்தர இந்திய அரசாங்கம் ஒன்றையும் சிங்கப்பூரில் அமைத்தார். எல்லோராலும் சுபாஷ் போஸ் 'நேத்தாஜி' (தலைவர்) என்று அழைக்கப்பட்டார்.

அவரது படை தொடக்கத்தில்பெற்ற சில வெற்றிகள் இந்திய மக்களிடையே உற்சாகத்தினை ஏற்படுத்தியது. ஆனால், ஆங்கிலேயர் வெகு விரைவிலேயே ஜப்பானியரைப் போரில் பின்வாங்கச் செய்தனர். இறுதியில் ஜெர்மனியும், ஜப்பானும் போரில்தோல்வியுற்றன. போரின் கடைசிக் கட்டத்தில் சுபாஷ் சந்திரபோஸ் ஒரு விமான விபத்தில் இறந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

### *காந்தி-ஜின்னா பேச்சுகள் (1944)*

1942 ஆகஸ்டு மாதம் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் போது சிறையில் வைக்கப்பட்ட காந்திஜி 1944ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை இந்திய அரசியல் பிரச்சினையைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அதனால் காந்தியடிகள் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முஸ்லிம் லீகின் தலைவரான ஜின்னாவுடன் கலந்து பேசினார். வலுவில் தம்மை



படம் 32.
முகமது அலி ஜின்னா

நாடிவந்த காந்தியடிகளை அவர் பொருட்படுத்த வில்லை. இந்தியாவைப் பிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஜின்னா பேசினார். எனவே, அரசியல் பிரச்சினை களுக்குத் தீர்வு ஏதும் கிடைக்கவில்லை. காந்தியடி களின் மனம் பெரிதும் புண்பட்டது.


### வேவல் திட்டம் (1945)

இந்திய அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுக்காண புதிய அரசப் பிரதிநிதி வேவல் பிரபு ஒரு திட்டத்தை வெளியிட்டார். அதனை விளக்கும்பொருட்டு ஜூன் 1945இல் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டினார். அவரது திட்டத்தின்படி அரசப் பிரதிநிதியின் நிர்வாகச் சபையில் அரசப் பிரதிநிதியும், தலைமைத் தளபதியும் தவிர மற்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தியர்களாகவே இருப்பார்கள். அதில் முஸ்லிம்களுக்கும் இந்துக் களுக்கும் சமப் பிரதிநிதித்துவம் இருக்கும் என்றும் கூறப்பட்டது. எல்லா முஸ்லிம் உறுப்பினர்களையும் முஸ்லிம் லீக்தான் நியமிக்க வேண்டுமென்று ஜின்னா வாதம் செய்தார். காங்கிரசு அமைப்பில் முஸ்லிம் இனத் தவருக்கு எவ்விதத்தொடர்பும் இல்லை என்றும் முஸ்லிம் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கச் செய்யும் கட்சி முஸ்லிம் லீக் ஒன்றேதான் என்றும் கூறினார். எனவே, சிம்லா மாநாடு தோல்வியில் முடிவுற்றது.

### அமைச்சரவைத் தூதுக்குழுவும் இடைக்கால அரசும் (1946)

1945இல் இரண்டாம் உலகப்போர் முடிந்தது. இங்கிலாந்தில் பொதுத்தேர்தல் நடந்தது. அதில் சர்ச்சிலின் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியுற்றது. தொழிற்கட்சி வெற்றிபெற்றது. அக் கட்சியின் தலைவர் கிளெமென்ட் அட்லி பிரிட்டிஷ் பிரதமரானார். இந்தியாவிற்குச் சுதந்தரம் வழங்குவதில்

இனித் தாமதம் ஏற்படக்கூடாது என்று புதிய பிரிட்டிஷ் தலைவர்கள் உணர்ந்திருந்தனர். எனவே, அட்லி 1946 மார்ச் மாதத்தில் பெதிக் லாரென்சு பிரபு, ஏ. வி. அலெக்சாந்தர், சர். ஸ்டாபோர்ட்கிரிப்ஸ் ஆகிய இங்கிலாந்து அமைச்சர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்றினை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். இந்தியாவில் புதிய அரசியல் அமைப்பு வரையப்படும் வரை இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசியல் நிர்ணயச் சபை ஒன்றைக் கூட்டுவதும் தூதுக்குழு பரிந்துரைகளின் முக்கிய அம்சங்களாகும். காங்கிரசு இவற்றிற்கு ஆதரவுதந்தது. ஆனால், பாகிஸ்தான் ஏற்படுவது பற்றி ஏதும் கூறப்படாததால் முஸ்லிம் லீக் இவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.



படம் 33.
அட்லி பிரபு

### *இடைக்கால அரசு (1946)*

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் பரிந்துரைப்படி 1946ஆம் ஆண்டில் அரசப் பிரதிநிதி வேவல் பிரபு இடைக்கால அரசை நிறுவினார். இதில், வேவல் பிரபு தலைவராகவும் ஜவஹர்லால் நேரு துணைத் தலைவராகவும் விளங்கினார்கள். முதலில் முஸ்லிம் லீகினர் இதில் சேர மறுத்தபோதிலும், பின்னர் சேர்ந்து பணியாற்றினர். எனினும், முஸ்லிம் லீக் அமைச்சர்கள் அரசாங்கத்தில் நேருவின் தலைமையை

ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பல இன்னல்களைக் கொடுத்து வந்தனர். 'நேரடி நடவடிக்கை' போன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி அரசாங்கம் செயலற்றுப் போகும்படி செய்தனர். வங்காளத்தில் குறிப்பாக நவகாளியில் வகுப்புவாதக் கலவரங்கள் தோன்றின. எண்ணற்ற மக்கள் துன்பமடைந்தனர்.

### *அரசியல் நிர்ணய சபை*

இதற்கிடையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் நடைபெற்றன. காங்கிரசு உறுப்பினர் பெரும்பான்மை பலம் பெற்றனர். முஸ்லிம் லீகினர் காங்கிரசு பெற்ற இடங்களில் மூன்றில் ஒரு பங்குதான் வெற்றிபெற்றனர். எனவே, முஸ்லிம் லீக் அதில் சேர மறுத்தது. எனினும், 1946ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் தேதி அரசியல் நிர்ணய சபை கூடியது. பாபு இராஜேந்திரபிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த நேரத்தில் வகுப்புவாத கலவரங்கள் தீவிரமடைந்துவந்தன. 1947ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு முக்கியக் கொள்கையை வெளியிட்டது; 1948ஆம் ஆண்டு ஜூன் மாத அளவில் 'அதிகார மாற்றம்' செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்ற மௌண்ட்பேட்டன் பிரபு இந்திய அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். எனவே, முஸ்லிம் லீக் 'நேரடிப் போராட்டத்தை' மீண்டும் ஆரம்பித்தது. பஞ்சாபில் வகுப்புவாத கிளர்ச்சிகள் நடந்தன. பின்னர் சிந்துவிலும், வடமேற்கு மாகாணத்திலும் கிளர்ச்சி பரவியது. சிறுபான்மையாக இருந்தவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டனர். வல்லமை வாய்ந்த பிரிட்டிஷ் அரசு இக்கொடூரமான செயல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியது. இத்தகைய சூழ்நிலையில் 1947 மார்ச் 24ஆம் தேதி மௌண்ட்பேட்டன் பிரபு அரசப் பிரதிநிதியாகப் பதவி ஏற்றார்.

### மௌண்ட்பேட்டன் திட்டம்

காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகிற்குமிடையே சமாதானத்தைத் தோற்றுவித்து நாட்டின் அமைதியைக் காப்பது மௌண்ட்பேட்டன் பிரபுவின் உடனடி வேலையாக இருந்தது. இந்திய தலைவர்களுடன் சமரசப் பேச்சுகள் நடத்திப் பிரிவினை ஒன்றுதான் சிக்கலான இந்திய பிரச்சினையைத் தீர்க்க வழியென்பதை உணரவைத்தார். தமது பிரிவினை திட்டத்திற்கு அவர்களுடைய இணக்கத்தைப் பெற்று இலண்டன் சென்றார். அங்கு பிரிட்டிஷ் அமைச்சரவையின் பரிசீலனைக்குப் பிறகு, இந்திய பிரிவினை அதிகார பூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தியாவிற்குத் திரும்பியதும் ஜூன் மாதம் 3ஆம் தேதி பிரிவினை திட்டத்தை வெளியிட்டார். ஆகஸ்டு மாதத்தில் அதிகார மாற்றம் ஏற்படுவது உறுதியாயிற்று. மௌண்ட்பேட்டன் திட்டத்தின்படி இந்திய துணைக் கண்டம் இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு தனிச் சுதந்தா நாடுகளாகப் பிரிக்கப்படும். முஸ்லிம்கள் பெரும்பான்மையுள்ள பிரதேசங்கள் 'பாகிஸ்தான்' என்ற தனி நாடாகும். எஞ்சிய பகுதிகள் இந்திய நாடாக இருக்கும். அத்திட்டத்தையொட்டி ஆங்கிலப் பாராளுமன்றம் நிறைவேற்றிய இந்திய சுதந்தர மசோதா 1947 ஜூலை 18ஆம் தேதி சட்டமாயிற்று. அதன்படி 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியா சுதந்தரம் பெற்றது. ஜவஹர்லால் நேரு சுதந்தர இந்தியாவின் முதல் பிரதமர் ஆனார். அதற்கு முந்திய நாள் (ஆகஸ்டு 14) பாகிஸ்தான் உருவாகியது. கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகிய பகுதிகளைக் கொண்டது பாகிஸ்தான் நாடாகும்.

### இந்திய சுதேச அரசுகள் இணைதல்

1947ஆம் ஆண்டு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நீங்கியது. அப்போது இந்திய துணைக்கண்டத்தில்

562 சுதேச அரசுகள் இருந்துவந்தன. அவற்றில் சில பாகிஸ்தானிலும், பல இந்திய யூனியனிலும் இருந்தன. சுதேச மன்னர்களில் பலர் சுதந்தரமாக இருக்க விரும்பினர். ஆனால், மௌண்ட்பேட்டன் பிரபு அவர்களை அழைத்து அறிவுரை வழங்கினார். அவர்கள் அண்மையிலுள்ள இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேருவதுதான் நல்லது என்று எடுத்துரைத்தார். அப்போது இந்தியாவின் துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பணியாற்றிவந்த சர்தார் வல்லபபாய் பட்டேல் இந்திய சுதேச அரசுகளுக்கான இலாகாப் பொறுப்பினையும் ஏற்றார். 'ஐக்கிய இந்தியா' என்ற குறிக்கோளைத் தலையாயதாகக் கருத்தில்கொண்டு பட்டேல் வெகுவேகமாகச் செயல்பட்டார். அவர் சுதேச மன்னர்களுக்குச் சில உரிமைகளையும் சலுகைகளையும் அளித்து அவர்கள் இந்திய அரசுடன் இணையும்படி செய்தார். சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பதில் மூன்று வழிகள் வகுக்கப்பட்டன. அவை:



படம் 34.
*சர்தார் வல்லபபாய் பட்டேல்*

*1.* சில சுதேச அரசுகள் அவற்றிற்கு அண்மையிலுள்ள மாநிலங்களுடன் இணையலாம். *உதாரண*மாகப் புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் ஆகிய அரசுகள் சென்னை மாகாணத்துடன் இணைக்கப்பட்டன.

2. சிறிய அரசுகள் பல ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு புதிய இராச்சியமாக இந்திய ஒன்றியத்தில்

சேர்த்துக்கொள்ளப்பட்டன. உதாரணமாக, இராச புத்திர அரசுகள் அனைத்தும் ஒன்றாக இணைத்து 'இராஜஸ்தான்' என்று ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட பெரிய அரசுகளில் பெப்சு, மத்திய பாரதம், திருவாங்கூர், கொச்சி ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.

3. சில மிகச் சிறிய சுதேச அரசுகள் மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. உதாரணமாகப் போப்பால், கூச்பீகார், மணிப்பூர், திரிபுரா ஆகியவை நேரடி மத்திய ஆட்சியின்கீழ் வந்தன.

கத்தியவாரிலிருந்த சிற்றரசான ஜுனாகாட் முஸ்லிம் அரசரால் ஆளப்பட்டுவந்தது. அதன் மக்கள் இந்துக்கள். நவாப், பாகிஸ்தானுடன் இணைய விரும் பினார். ஆனால், மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினார்கள். நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. நவாப் பயந்து பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார். மக்கள் விருப்பப்படி ஜுனாகாட் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.

ஹைதராபாத் அரசர் (நிஜாம்) ஒரு முஸ்லிம் ஆவார். அதன் பெரும்பான்மையான மக்கள் இந்துக்க ளாவர். நிஜாம், 'இரசாக்கர்கள்' செல்வாக்குட்பட்டும் சையத் காஸிம் ரஸ்வி என்ற தலைவரின் பிடியிலும் இருந்தார். எனவே, இந்திய ஒன்றியத்துடன் ஹைதராபாத் இணைய மறுத்தது. மேலும், இரசாக்கர் கள் மக்களுக்குப் பெரும் துன்பம் விளைவித்து வந்தனர். வேறுவழியின்றி, இந்திய அரசு 'போலிஸ் நடவடிக்கை' மேற்கொண்டு, தனது இராணுவத்தை அனுப்பியது. ஹைதராபாத் நிஜாம் பணிந்தார். நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டன. அது இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது.

காஷ்மீர் இந்து அரசரால் ஆளப்பட்டுவந்தது. அந்தச் சுதேச அரசின் மக்களில் பெரும்பாலோர்

முஸ்லிம்கள். இந்துக்களும் சீக்கியர்களும் அந்த அரசில் வாழ்ந்துவந்த மற்ற வகுப்பினராவர். முதலில் காஷ்மீர் அரசர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேர விரும்பவில்லை. பாகிஸ்தான் அரசு காஷ்மீரைத் தனது நாட்டுடன் இணைத்துக்கொள்ள மலைவாழ் மக்களையும், தனது படையினரையும் ஏவிவிட்டுக் குழப்பம் விளைவித்தது. அந்த நிலையில் காஷ்மீர் அரசர் இந்திய ஒன்றியத்துடன் சேர்ந்துகொள்ளச் சம்மதித்தார். அதன்பின் இந்திய இராணுவம் காஷ்மீரின் பாதுகாப்பிற்கு அனுப்பப்பட்டது. நமது இராணுவத்தினர் காஷ்மீரத்தில் போரிட்டு, பாகிஸ்தான் படைகளையும் மலைவாழ் கூட்டத்தினரையும் விரட்டியடித்தனர். ஐ. நா. வின் தலையீட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. மற்றப் பகுதிகள் இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இணைந்தன.

சுதேச அரசுகளின் பிரச்சினைகளை உறுதியுடனும், திறமையுடனும், அரசியல் விவேகத்துடனும் தீர்த்துவைத்து இந்தியாவின் ஒற்றுமையைக் காத்த பெருமை சர்தார் வல்லபபாய் பட்டேல் அவர்களையே சாரும். எனவே, அவர் 'இந்தியாவின் பிஸ்மார்க்' என்றும் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்றும் புகழப்படுகிறார்.

### *இந்தியா ஒரு குடியரசு நாடாதல்*

அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினர்கள் 1946இல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் தலைவர் டாக்டர் பாபு இராஜேந்திர பிரசாத் ஆவார். 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் தேதி இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கும் பணி நிறைவேறியது. இச்சட்டம் 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது. அன்று, இந்தியா ஒரு ஜனநாயக மக்கள் குடியரசாக உருவானது. பிரிட்டிஷ் டொமினியனிலிருந்து இந்தியா விடுபட்டது.



படம் 35.
டாக்டர் இராஜேந்திர பிரசாத்

இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஆவார். 1929ஆம் ஆண்டு லாகூர் காங்கிரசு மாநாட்டிற்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26ஆம் நாள் சுதந்தர நாளாகக் கொண்டாடப்பட்டுவந்தது. எனவே, அந்த நன்னாள் குடியரசு தோன்றிய நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டாக்டர் இராஜேந்திரபிரசாத்துக்குப்பின் டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் ஜாகிர் ஹுசேன், வி. வி. கிரி, பக்ருதீன் அலி அகமது, நீலம் சஞ்சீவ ரெட்டி ஆகியோர்கள் இந்தியக் குடியரசு தலைவர்களாகப் பணியாற்றினார்கள். தற்போது திரு. ஜெயில்சிங் அவர்கள் நமது குடியரசு தலைவராக விளங்குகிறார்.

## பயிற்சி

**I. பின்வரும் உட்பிரிவுகளில் எது மிகவும் பொருத்தமானது?**

*கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்விக்கான காரணம்:*

(அ) மாகாணங்கள் தனித்து இயங்கவும் அனுமதிக்கப்பட்டன.

(ஆ) காங்கிரசின் நோக்கங்களுக்கு எதிர்மாறான நோக்கங்களை முஸ்லிம் லீக் கொண்டிருந்தது.

(இ) காங்கிரசின் 'முழுச் சுதந்தரக்' கோரிக்கையும் முஸ்லிம் லீகின் தனிநாட்டுக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

(ஈ) அரசப் பிரதிநிதி இணக்கம் தெரிவிக்கவில்லை.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. 1940இல் லாகூரில் நடைபெற்ற மாநாட்டில் முஸ்லிம் லீக்-——— என்ற பெயர் கொண்ட தனி நாடு அமைப்பதைக்குறித்துத் தீர்மானம்.ஒன்றை நிறைவேற்றியது.

2. பிரிட்டிஷ் பிரதமர்———என்பவர் இந்தியாவிற்குக் கிரிப்ஸ் தூதுக்குழுவினை அனுப்பியவர் ஆவார்.

3. ———இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கப்பட்டது.

4. இந்திய தேசிய இராணுவம் ——— என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

5. இந்தியாவிற்குச் சுதந்தரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படலாகாது என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் பிரதமர் ———ஆவார்.

6. மௌண்ட்பேட்டன் திட்டம்———இல் அறிவிக்கப்பட்டது.

7. பாகிஸ்தானின் சுதந்தர நாள்———ஆகும். ——— இந்தியா சுதந்தரம் அடைந்த நாளாகும்.

8. இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசாக———நாளில் உருவாகியது.

9. இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதி———ஆவார்.

10. ———'இந்தியாவின் பிஸ்மார்க்' என்று அழைக்கப்படுகிறார்.

III. குறுகிய விடை எழுதுக :

1. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பின்னர் காங்கிரசு அமைச்சரவைகள் ஏன் பதவியிலிருந்து விலகின ?

2. காந்தியடிகள் 1940இல் தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத்தை ஏன் தொடங்கினார் ?

3. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்குக் கிரிப்ஸ் தூதுக் குழுவினை ஏன் அனுப்பியது?

4. கிரிப்ஸ் திட்டத்தை விளக்குக .

5. காங்கிரசும் முஸ்லிம் லீகும் கிரிப்ஸ் திட்டத்தை ஏன் மறுத்தன?

6. ஆகஸ்ட் 1942இல் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஏன் அறிவித்தார்?

7. இந்திய சுதந்தரப் போராட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வகிக்கும் பங்கு யாது?

8. 1944இல் காந்தியடிகள், ஜின்னாவை ஏன் சந்தித்துப் பேசினார்? அப் பேச்சுவார்த்தைகளின் விளைவு யாது?

9. வேவல் பிரபு இந்தியர்களுக்கு அளித்த திட்டம் யாது?

10. சிம்லா மாநாடு (ஜூன் 1945), ஏன் தோல்வியில் முடிந்தது?

11. அமைச்சரவைத் தூதுக்குழுவினை இந்தியாவிற்கு அனுப்பிய பிரிட்டிஷ் பிரதமர் யார்? அத்தூதுக்குழுவில் இடம்பெற்ற பிரிட்டிஷ் அமைச்சர்கள் யாவர்?

12. பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் அறிக்கையினைக் காங்கிரசு மற்றும் முஸ்லிம் லீக் எங்ஙனம் வரவேற்றன?

13. இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு முதலில் முஸ்லிம் லீக் ஏன் விரும்பவில்லை? பின்னர் அதில் சேருவதற்கான காரணம் யாது?

14. மௌண்ட்பேட்டன் பிரபு அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றபோது, இந்தியாவில் உருவாகி இருந்த சூழ்நிலை யாது?

15. மௌண்ட்பேட்டன் திட்டம் என்பது யாது?

16. பிரிவினையின்போது பாகிஸ்தானுடன் இணைக்கப் பட்ட பகுதிகள் யாவை?

17. ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்தியக் குடியரசு நாளாக ஏன் அறிவிக்கப்பட்டது?

18. டாக்டர் பாபு இராஜேந்திரபிரசாத்திற்குப் பிறகு குடியரசு தலைவர்களாகத் பணியாற்றியவர்கள் யாவர்?

**IV. விரிவான விடை எழுதுக:**

1. இந்திய அரசியலில் இரண்டாம் உலகப் போர் ஏற்படுத்திய விளைவுகள் யாவை?

2. 'ஆகஸ்ட் புரட்சி' (1942) அல்லது 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை விவரித்து எழுதுக.

3. ஆகஸ்ட் 1942லிருந்து ஆகஸ்டு 1947 வரையிலான இந்திய சுதந்தரப் போராட்டத்தினை விளக்குக.

4. இந்திய ஒன்றியத்தில் சுதேச அரசுகள் எவ்வாறு இணைக்கப்பட்டன?

5. ஜுனாகாட், ஹைதராபாத், காஷ்மீரம் ஆகிய சுதேச இராச்சியங்கள் எவ்வாறு இறுதியில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன?

## செய்முறைப் பயிற்சி

**பள்ளி நூலகத்திலிருந்து நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கீழ்வருபவைபற்றி மேலும் புதிய விவரங்களைத் தெரிந்துகொள்க:**

1. இரண்டாம் உலகப் போர்; நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்; சர்தார் வல்லபபாய் பட்டேல் மற்றும் டாக்டர் பாபு இராஜேந்திரபிரசாத்.

2. தேசிய தலைவர்களின் படங்களைச் சேகரித்துப் படப் புத்தகத்தில் ஒட்டுக.

3. காந்தியடிகள், ஜின்னாவுடன் நடத்திய பேச்சுகளைக் கற்பனைசெய்து ஓர் உரையாடல் எழுதுக.

4. நேதாஜி சுபாஷ்சந்திரபோஸின் நாட்டுப்பற்று, நாட்டு விடுதலை இயக்கத்தில் அவர்தம் பணி என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

5. இந்தியாவிற்கு அதிகார மாற்றம் செய்வதில் மௌண்ட் பேட்டன் பிரபுவின் பங்கினைப் பாராட்டி ஒரு கட்டுரை எழுதுக.

6. சொற்போர் நடத்துக. தலைப்பு: 'நான் விரும்பும் சிறந்த தேசத்தலைவர்'.

# 9. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

## தேசியக் கொடியும், தேசிய கீதமும் தேசியச் சின்னமும்

***தேசியக் கொடி***

1906ஆம் ஆண்டிலேயே *மாடம் காமா* என்னும் பார்சிப் பெண்மணியால் *பாரிஸ் மாநாட்டில்* உருவாக்கப் பெற்றது ***மூவண்ணக்கொடி.*** ஜாலியன்வாலாபாக் படுகொலையின்போது நமது இளம் பள்ளிக்குழந்தைகளை வரிசையில் நெடுந்தூரம் நடத்திச் சென்று ஆங்கில தேசியக் கொடியான 'யூனியன் ஜாக்' கொடிக்கு ஆங்கிலப் போர்வீரர்கள் வணக்கம் செய்ய வைத்தது காந்தியடிகளின் கவனத்தைக் கவர்ந்தது. தேசியக் கொடியின் அவசியத்தை உணர்ந்த அவர் காங்கிரசு மாநாட்டில் கொண்டுவரப்பட்ட பல கொடிகளுள் மத்தியில் இராட்டை பொறிக்கப்பட்ட கொடியை நமது தேசியக்கொடியாகத்தேர்ந்தெடுத்தார். இக்கொடியைத்தான் இராட்டைக்குப் பதிலாக அசோகச் சக்கரத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அரசியல் அமைப்புச் சபை நமது தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது. இதன் *காவி நிறம் தியாகத்தையும்,* ***வெண்மை தூய்மையையும், பச்சை செழிப்பையும்*** குறிக்கின்றன. வெண்மையின் நடுவேயுள்ள *நீலநிறச்* ***சக்கரம் உயிருள்ள நம் பாரம்பரியத்தையும்,*** இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு உதவும் காந்தியடிகளின் ***இராட்டையையும்*** சுட்டுகிறது. இக்கொடி நம் உயிரினும் மேம்பட்டதால், இதை முறைப்படி கௌரவித்து நாம் காப்பாற்றவேண்டும்.


***தேசிய கீதம்***

விடுதலைப்போர் நடந்த காலத்தில் வங்காளக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜி, தமது நவீனம் 'ஆனந்த மடத்தில்' இயற்றிய 'வந்தே மாதரம்' தேசிய கீதமாகப் பாடப்பட்டுவந்தது. பின்னர், உலகப் புகழ்பெற்ற இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய

'ஜன கண மன' எனத் தொடங்கும் பாடல் 1911 டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரசு மாநாட்டில் முதன்முறையாகப் பாடப் பட்டது. இதுவே நமது தேசிய கீதமாக 1950இல் அரசியல் அமைப்புப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இதைத் தகுந்த உச்சரிப்புடனும், இதற்குரிய பண்ணுடனும் அனைவரும் பாடி, தாயகத்தின் மதிப்பைக் காக்கவேண்டும்.

### தேசியச் சின்னம்

நம் நாட்டுச் சின்னம் சாரநாத்திலுள்ள அசோகர் தூணிலிருந்து எடுக்கப்பட்டதாகும். 24 ஆரங்கள் கொண்ட *தர்ம சக்கரத்தின்* இடப்புறம் குதிரையும், வலப்புறம் எருதும் கொண்ட வட்ட அடித்தளத்தின் மேலே ***நான்கு சிங்கங்கள்*** கொண்ட சின்னமே நமது தேசியச் சின்னமாகும். பார்வைக்கு மூன்று சிங்கங்கள் தாம் தெரியும், இதனடியில் 'சத்தியமேவ ஜயதே' (வாய்மையே வெல்லும்) என்ற வாக்கியம் எழுதப் பட்டிருக்கிறது. நாள் தோறும் உழைத்துச் சதா இயங்கிக்கொண்டிருத்தலை இச்சக்கரம் நமக்கு



படம் 36.
அசோகரது சாரநாத்
கல்தூண் உச்சி

உணர்த்துகிறது. இதை நாம் பொன்னேபோல் காப்பாற்ற வேண்டும்.

*சிறப்பியல்புகள்*

இந்தியா எனப்படும் ***பாரதம்*** ஒரு முழுமையான ***சுதந்தர மக்களாட்சிக் குடியரசு.***

எந்த வெளிநாட்டிற்கும் இந்தியாவின்மீது ஆதிக்கம் செலுத்தவோ, இந்திய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவோ உரிமையில்லை.

இந்தியா ஒரு மக்களாட்சி நாடு. இந்தியர்களே இந்திய நாட்டின் அரசை உருவாக்குகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

இந்தியா ஒரு குடியரசு நாடு. இந்திய நிர்வாகம் குடியரசு தலைவரின் பெயரால் நடைபெறுகின்றது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இந்திய குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. அவை: சமத்துவ உரிமை, சுதந்தர உரிமை, பேச்சுரிமை, சமய உரிமை, கல்வி-பண்பாட்டு உரிமை, சொத்துரிமை, சட்டபூர்வமாகப் பரிகாரம் தேடும் உரிமை என்பனவாகும்.

இந்திய ஒன்றியத்தில் பல மாநிலங்கள் இணைந்துள்ளன. கூட்டாட்சி அமைப்பு முறையில் இந்திய அரசாங்கம் இயங்கி வருகிறது. ஆட்சி அதிகாரங்கள் மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. எனினும், நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கென மத்திய அரசுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசு ஒரு சமயச் சார்பற்ற அரசு. அதனால், சமயத்திற்கு எதிரான அரசு என்று அர்த்த

மன்று; எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்தும் அரசு என்பது பொருள்.

*மத்திய அரசு*

மத்திய அரசின் உறுப்புகள் முறையே குடியரசு தலைவர், துணைத்தலைவர், பிரதம அமைச்சரும் அமைச்சரவையும், நாடாளுமன்றம், தலைமை நீதிமன்றம் ஆகும். மத்திய அரசு புதுடில்லியில் இயங்கு கிறது. இது நாடு முழுவதற்கும் பொதுவானதாகும்.


*குடியரசு தலைவர்*

குடியரசு தலைவர் 'ராஷ்டிரபதி' என அழைக்கப் படுகிறார். இவர் மத்திய நாடாளுமன்றத்தில் (பாராளுமன்றம்) அடங்கிய கீழ்ச்சபை, மேல்சபை களின் உறுப்பினர்களாலும், மாநில சட்டசபைகளி லுள்ள கீழ்ச்சபையின் உறுப்பினர்களாலும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் படுவார்.

*குடியரசு தலைவரின் அதிகாரங்கள்*

இவர் இந்திய ஒன்றியத்தின் நிர்வாகத் தலைவ ராவார். இவரே முப்படைகளின் தலைவரும் ஆவார். பிரதம அமைச்சரையும், ஏனைய அமைச்சர்களையும் இவர் நியமிக்கிறார். ஆளுநர்கள், முப்படைகளின் தளகர்த்தர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள், நீதிபதிகள் முதலிய உயர் அதிகாரிகளையும் அவரே நியமிக்கிறார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக் கள், இவருடைய இசைவு பெற்றபின்பே சட்டங்க ளாகும். நாடாளுமன்றத்தைக் கூட்டவும், ஒத்திப் போடவும், கீழ்ச்சபையைக் கலைக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. நாடாளுமன்றம் செயற்படாத




படம் 37.

மத்திய அரசு

காலங்களில், அவசியம் ஏற்பட்டால் தம் தனி ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கவும், மன்னிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு.

இவர் இத்தகைய அதிகாரங்கள் பெற்றிருந்தாலும் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டியவராக உள்ளார்.

### துணைத்தலைவர்

இவர் நாடாளுமன்றத்தின் இருசபைகளின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்றத்தின் மேல்சபைக்கு இவரே தலைவர். இவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

### அமைச்சரவை

நாட்டின் நிர்வாகத்தை மத்திய அமைச்சரவை கவனித்து வருகிறது. இதன் தலைவர் பிரதம அமைச்சர் ஆவார்.

### பிரதமர்

பொதுவாக நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபையான லோக்சபாவில் உள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே பிரதமராக நியமிக்கப்படுவார். பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படி, ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் கீழ்ச்சபைக்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றனர்.

### நாடாளுமன்றம்

நமது நாடாளுமன்றத்தில் இரண்டு சபைகள் உள்ளன. கீழ்ச்சபையை 'லோக்சபை' (மக்கள் சபை) என்றும், மேல் சபையை 'இராஜ்ய சபை' என்றும் கூறுகிறோம்.

*லோக்சபை*

இதன் உறுப்பினர்கள் 21 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்களால் நேரடியாக ஐந்தாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இச்சபையில் 544 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களுடைய தலைவரை இவர்களே தேர்ந்தெடுக்கின்றார்கள். இவர் "சபாநாயகர்" என அழைக்கப்படுகின்றார்.

*இராஜ்யசபை*

இராஜ்யசபையில் 244 உறுப்பினர்கள் உள்ளனர். கலை, விஞ்ஞானம், இலக்கியம், சமூக சேவை முதலியவற்றில் சிறந்து விளங்குபவர்களுள் 12 பேர்களை இச்சபையின் உறுப்பினர்களாகக் குடியரசு தலைவர் நியமிப்பார். ஏனையோர் மாநிலங்களிலுள்ள கீழ்ச் சட்டசபை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இது நிரந்தரமானது. இதன் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் பதவி வகிக்கலாம். இதன் உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவியிலிருந்து விலகுவர்.

*அதிகாரங்கள்*

இந்திய நாடு முழுவதற்கும் பொதுவான சட்டங்களை இயற்றும் பொறுப்பு நாடாளுமன்றத்திற்கு உண்டு. பண மசோதாக்கள் தவிர, ஏனையவற்றில் இரு சபைகளுக்கும் சம அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. அவை இருசபைகளிலும் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் குடியரசு தலைவரின் இசைவிற்கு அனுப்பப்படும். அவரது இசைவுபெற்ற மசோதாக்கள் சட்டங்களாகும்.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளில் மக்கள் சபை (லோக்சபை) வலிமை வாய்ந்தது. நிதி சம்மந்தப்பட்ட

மசோதாக்கள் முதன் முதலாக லோக்சபாவில்தான் கொண்டுவரப்படவேண்டும். இராச்சியசபா ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவை நிறைவேற்றப்படும்.

### தலைமை நீதிமன்றம்

இந்தியாவின் தலைமை நீதிமன்றம் புதுடில்லி நகரில் உள்ளது. அதில் ஒரு தலைமை நீதிபதியும், பல நீதிபதிகளும் உள்ளனர். அவர்கள் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். இதன் அதிகாரங்கள் பின்வருவன:


நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் நம் அரசியல் அமைப்பிற்கும், மக்கள் உரிமைக்கும் பாதுகாப்பாக இருக்கின்றனவா எனப் பரிசீலிக்கும். மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஏற்படும் சச்சரவு களையும், மாநில அரசுகளிடையே ஏற்படும் சச்சரவு களையும் தீர்த்துவைக்கும். மாநில உயர்நீதி மன்றங்களி லிருந்து வரும் சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.

### மாநில அரசு

இந்திய மாநில அரசின் உறுப்புகள் **ஆளுநர், அமைச்சரவை, சட்டமன்றம், உயர்நீதி மன்றம்** ஆகியவையாகும்.

### ஆளுநர்

மாநில அரசாங்கத்தின் தலைவர் ஆளுநர் ஆவார். இவர் இந்திய குடியரசு தலைவரால் நியமிக்கப் படுகிறார். இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். சட்டமன்றத்தில் உள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை முதலமைச்சராகவும், முதலமைச்சரின் அறிவுரையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்க ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. சட்டசபை




படம் 38. மாநில அரசு

களில் நிறைவேறிய மசோதாக்களைச் சட்டங்களாக்கு வதற்கு ஆளுநரின் இசைவு தேவை. சட்டசபையைக் கூட்டவும், ஒத்திப்போடவும், கீழ்ச் சட்டசபையைக் கலைக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரங்களை முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில்தான் ஆளுநர் செலுத்தி வருகிறார்.

*அமைச்சரவை*

மாநில நிர்வாகத்தை அமைச்சரவையே நடத்தி வருகிறது. அமைச்சரவை மாநில மக்களவைக்கும் பொறுப்புள்ளதாக இருக்கின்றது.

*சட்டமன்றம்*

ஒவ்வொரு மாநிலத்திலும் சட்டமன்றம் உள்ளது. சில மாநிலங்களில் சட்டமன்றத்தில் இரு சபைகளும், சில மாநிலச் சட்டமன்றங்களில் கீழ்ச்சபை மட்டும் இருக்கும். அவற்றில் கீழ்ச்சபை **சட்டப் பேரவை** என்றும், மேல் சபை **சட்ட மேலவை** என்றும் அழைக்கப் படுகின்றன. சட்டப் பேரவையின் உறுப்பினர்கள் 21 வயது நிரம்பிய வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பொதுவாக இச்சபை ஐந்து ஆண்டுகள் நீடிக்கும். சட்ட மேலவை உறுப்பினர்கள் பலவிதமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தச் சபையின் உறுப் பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை பதவி விலகுவர். பணமசோதாக்கள் முதன் முதலில் கீழ்ச் சட்டசபையில்தான் கொண்டு வரப்பட வேண்டும். இதில், அதன் முடிவே இறுதியானதாகும்.

*உயர்நீதி மன்றம்*

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வோர் உயர்நீதி மன்றம் உண்டு. அதில் ஒரு தலைமை நீதிபதியும்

பல நீதிபதிகளும் உள்ளனர். இந்திய குடியரசின் தலைவரால் அவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

## உள்ளாட்சி முறை

இந்திய அரசியல் அமைப்புப்படி மக்கள் தலஆட்சியில் பங்கு பெறுவதற்கான மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் ஊராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் தலைவர்களும், உறுப்பினர்களும், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கிராம ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் ஆவர். ஒன்றியத்தின் தலைவரும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### *மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்*

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு மன்றத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள், மாவட்ட அதிகாரிகள் உறுப்பினர்களாக இடம் பெறுவர். மாவட்ட ஆட்சியர் தலைமை வகித்து நடத்துவார்.

### *நகராட்சி மன்றங்கள்*

நகரங்களில் நகராட்சி மன்றங்களும், பெரிய நகரங்களில் மாநகராட்சி மன்றங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் தலைவர்கள் (மேயர்) நகரமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநகராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் ஆணையர் என்னும் அரசாங்க அதிகாரி நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

உள்ளாட்சி மன்றங்கள் கல்வி, சுகாதாரம், சாலைகள் அமைத்தல், தெருவிளக்குகள் போடுதல் முதலியவற்றைக் கவனித்துக்கொள்ளுகின்றன. அவற்றின் முக்கிய வருமானம் நிலவரி, வீட்டுவரி, தொழில்வரி, சந்தைவரி முதலியனவாகும்.

## *இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள்*

இந்தியா சுதந்திரம் பெற்றபின் மத்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை நிறைவேற்றி வருகின்றது. **நவீன இந்தியாவின் சிற்பி** எனப் போற்றப்படும் **ஜவஹர்லால் நேரு** திட்டமிட்ட பொருளாதாரத்தின்மூலம்தான் நாட்டில் விரைவான முன்னேற்றம் ஏற்படும்என அறிந்தார். எனவே, மத்திய அரசு இத்திட்டங்களை உருவாக்கியது. இதுகாறும் ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறியுள்ளன.

## *முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56)*

இத்திட்டத்திற்குச் செலவழிக்கப்பட்ட தொகை 3760 கோடி ரூபாய்களாகும். இத்திட்டத்தில் விவசாய முன்னேற்றத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டது. உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசன வசதித் திட்டங்களும், பன்னோக்கு அணைக்கட்டுத் திட்டங்களும், சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் விளைவாக உணவுப்பொருள் உற்பத்தி பெருகியதுடன், நமது தேசிய வருமானமும் உயர்ந்தது.

## *இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61)*

இத்திட்டத்திற்காக 7772 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இத்திட்டத்தில் தொழில் பெருக்கத் திற்கும், குறிப்பாக கனரகத் தொழில்களுக்கும், போக்குவரத்துச் சாதனங்களுக்கும் அதிக முக்கியத் துவம் அளிக்கப்பட்டது. இத்திட்ட காலத்தில்தான்,

தற்காலப் பொருளாதாரத்திற்கு அடிப்படையான நவீன தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. பின்தங்கிய நாடுகளில் அதுவரை கேள்விப்படாதிருந்த பல ஆதார மற்றும் கனரகப் பொருள் உற்பத்தி இயந்திர ஆலைகள் பெரும் முதலீடு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டன.

### மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66)

இத்திட்டத்திற்கு 12,767 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. உணவுத்துறையில் தன்னிறைவு அடைதல், அடிப்படைத் தொழில்களை விரிவடையச் செய்தல், ஏற்றுமதியை உயர்த்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சீனா, பாகிஸ்தான் போர்களும் நாட்டில் பஞ்ச நிலைமையும் சிக்கல்கள்களை ஏற்படுத்தின.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969-74)

இத்திட்டத்தில் 25,000 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள்: நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், பின் தங்கிய மக்கள் நல்வாழ்வு அடைதல், வேலை வாய்ப்பை அதிகரித்தல் போன்றவையாகும்.

### ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974-79)

இத்திட்டத்தின்படி ரூ. 53,411 கோடி செலவிடப்பட்டது. இதன் நோக்கங்கள்: வறுமையை ஒழித்தல், தன்னிறைவு காணுதல், ஆரம்பக் கல்வி வசதியைப் பெருக்குதல், விவசாயம் மற்றும் மக்கள் தேவைக்கான தொழில்களைப் பெருக்குதல், கிராமப்புற மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றுதல் முதலியனவாகும்.

### இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை

சுதந்தர இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையை உருவாக்கித்தந்த பெருமை பிரதம அமைச்சர்

***ஜவஹர்லால் நேருவிற்கே*** உரியதாகும். பிறநாடுகளுடன் ஒத்துழைத்து உலக அமைதிக்குப் பாடுபடுவதே இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் தலையாய நோக்கமாகும். குடியேற்ற ஆதிக்கத்தை ஒழித்து, மக்களின் விடுதலைக்குப் பாடுபடுவது இரண்டாவது நோக்கமாகும். இனவேற்றுமை இல்லாச் சமுதாயத்தை உருவாக்குவது மூன்றாவது நோக்கமாகும். உலகில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்குச் சமாதான முறையில் தீர்வுகாண்பது நான்காவது நோக்கமாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளில் திடமான நம்பிக்கை வைப்பதும் இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு கூறாகும்.

இந்திய வெளியுறவுக் கொள்கை ***கூட்டுச் சேராக் கொள்கையின்*** அடிப்படையில் அமைந்ததாகும். இரண்டாம் உலகப்போருக்குப்பின், ருஷ்யாவும், அமெரிக்க ஐக்கியநாடும் இருபெரும் வல்லரசுகளாகத் தோன்றி, ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டன. இந்தியா எந்த வல்லரசுடனும் சேராமல் தனித்து நின்று சுதந்தரமாகச் செயல்பட்டு வருகிறது. இதுவே ***நடுநிலைக் கொள்கை*** அல்லது ***கூட்டுச்சேராக் கொள்கை*** என்பதாகும். இந்தியா எந்த ஒரு நாட்டுடனும் இராணுவக் கூட்டுச் சேருவதில்லை. எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொண்டிருக்க வேண்டும் என்பது இந்தியாவின் கொள்கையாகும்.

இந்தியாவின் நடுநிலைக் கொள்கையும், அமைதிப் பணிகளும் நேருவினால் உருவாக்கப்பட்ட 'பஞ்சசீலக் கொள்கை'யால் மேலும் வலுப்பெற்றன. 1955ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்தோனேஷியாவிலுள்ள ***பாண்டுங்*** என்னும் நகரில் ***ஆசிய, ஆப்பிரிக்க மாநாடு*** நடைபெற்றது. அம்மாநாடு இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக்கொண்டது.

*பஞ்சசீலக் கொள்கைகள்*


1. ஒவ்வொரு நாடும் பிறநாட்டின் எல்லைகளையும், உரிமைகளையும் மதித்து நடத்தல் வேண்டும்.
2. எந்த நாடும் மற்ற நாட்டின் மீது ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.
3. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடக்கூடாது.
4. சமாதானச் சகவாழ்வு.
5. நாடுகளிடையே கூட்டுறவை வளர்த்தல்- என்பனவாகும்.

ஐக்கிய நாடுகள் அவையின் கொள்கைகளிலும், ஆக்கச் செயல்களிலும் இந்தியா முழு நம்பிக்கைக் கொண்டுள்ளது. ஐ. நா. வின் அமைதி ஏற்படுத்துகின்ற பணியிலும், அமைதி காக்கின்ற பணியிலும் இந்தியா தனது முழு ஒத்துழைப்பை நல்கி இருக்கின்றது. கொரியா, காங்கோ, சைப்ரஸ், இந்தோ-சீனா மற்றும் தென்மேற்கு ஆசிய நாடுகளில் ஐ. நா. வின் அமைதி காக்கும் பணிகளில் இந்தியா பெரிதும் பங்கேற்றிருக்கின்றது.

'அணுசக்தி ஆக்கப் பணிக்கே' என்ற தத்துவத்தில் இந்தியா நம்பிக்கை கொண்டிருக்கிறது.

*1950ஆம் ஆண்டு முதல் அரசியல் அமைப்புச் சட்ட வளர்ச்சி*

நாட்டின் மாறுபட்ட சூழ்நிலைக்கேற்றவாறு சட்டங்களைத் திருத்தி அமைக்க, அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வழி வகுக்கப் பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் 1951ஆம்




படம் 39. இந்தியா-மாநிலங்கள்

ஆண்டு முதல் பல திருத்தங்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக, மொழிவழி அடிப்படையில் இந்திய மாநிலங்களைத் திருத்தி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 1953இல் ஆந்திரம் தனி மாநிலமாக அமைக்கப்பட்டது. அதற்கடுத்த இருபது ஆண்டுகளில் இந்தியாவில் மொழிவாரி அடிப்படையில் பல மாநிலங்களும், மத்திய அரசின் நேராட்சிக்குட் பட்ட பிரதேசங்களும் உருவாக்கப்பட்டன. தற்பொழுது இந்தியாவில் 22 மாநிலங்களும், இந்திய அரசின் நேராட்சிக்கு உட்பட்ட 9 பிரதேசங்களும் இயங்கி வருகின்றன.

சமுதாய நலன்களை முன்னிட்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை ஜமீன்தாரி முறை ஒழிப்பு, வங்கிகள் தேசிய உடைமையாக்கப் படுதல், இந்திய சுதேச மன்னர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியங்களும், சலுகைகளும் நிறுத்தப்பட்டமை போன்றவைகளாகும்.

## பயிற்சி

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. 1906இல் பாரிஸ் மாநாட்டில் முதன்முறையாக இந்தியாவின் மூவண்ணக் கொடியை அறிமுகம் செய்தவர்———ஆவார்.
2. 'ஜனகணமன' எனத்தொடங்கும் நமது தேசியக் கீதம் ———என்பவரால் இயற்றப்பட்டது.
3. நமது தேசியச் சின்னத்தின் அடியில் பொறிக்கப் பட்டுள்ள வாக்கியம்———என்று கூறுகிறது.
4. எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்தும் நமது அரசை———அரசு என்று கூறலாம்.
5. இந்திய குடியரசு தலைவர்——— என அழைக்கப் படுகிறார்.

6. நாடாளுமன்றத்தின் மேல்சபையின் (இராஜ்ய சபை) தலைவர்———ஆவார்

7. பொதுவாக, லோக்சபாவில் உள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே———ஆக நியமிக்கப்படுகிறார்.

8. நாடாளுமன்றத்தில் இரு சபைகள் உள்ளன. அவை ——— மற்றும் ———ஆகும்.

9. நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் மசோதாக்கள் ——— யின் இசைவு பெற்றுச்சட்டங்களாகும்.

10. நாடாளுமன்றத்தில் உள்ள இருசபைகளில்———மிக வலிமை வாய்ந்ததாகும்.

11. இந்திய குடியரசின் நீதி மன்றங்களில் மிக உயர்ந்தது ———ஆகும்.

12. மாநில ஆளுநர்———ஆல் நியமிக்கப்படுகிறார்.

13. ———நவீன இந்தியாவின் சிற்பி என்று அழைக்கப்படுகிறார்.

14. ———சுதந்தர இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர் ஆவார்.

15. உலகில் இரண்டு பெரும் வல்லரசுகளின் ஆதிக்க போட்டியில் எந்தக்கட்சியிலும் சேராமல், இந்தியா ———என்ற தனது வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.

16. ஆசிய, ஆப்பிரிக்க மாநாட்டில் ஜவஹர்லால் நேருவின் ——— கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17. போர் ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து உலக நாடுகளைக் காப்பாற்றவும், பன்னாட்டுக் கூட்டுறவை வளர்ப்பதற்காகவும்———அமைக்கப்பட்டுள்ளது.

18. மொழிவழி அடிப்படையில் முதன் முதலாக——— மாநிலம் அமைக்கப்பட்டது.

II. குறுகிய விடைகள் எழுதுக :

1. நமது தேசியக் கொடியைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

2. நமது தேசியச் சின்னத்தைப் பற்றி விளக்குக.

3. நமது அரசியல் அமைப்பில் இந்திய குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் யாவை?

4. இந்தியப் பிரதமரும், ஏனைய அமைச்சர்களும் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள் ?

5. லோக்சபை மற்றும் இராஜ்யசபை ஆகியவற்றிற்கு இடையேயுள்ள ஏதேனும் இரு வேறுபாடுகளைக் கூறுக.

6. தலைமை நீதிமன்றத்தின் அலுவல்கள் யாவை ?

7. தலசுயாட்சி மன்றங்கள் பொதுமக்கள் நலனுக்காகச் செய்யும் பணிகள் யாவை ?

8. கூட்டுச் சேராக் கொள்கையை விளக்குக.

9. பஞ்சசீலக் கொள்கையை விளக்குக.

10. மக்கள் நலனைக் கருதி அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் யாவை ?

III. விரிவான விடை எழுதுக :

1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகளை எழுதுக.

2. குடியரசு தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்? அவரது அதிகாரங்களைக் கூறுக.

3. நமது நாடாளுமன்றத்தின் அமைப்பையும், அது எவ்வாறு இயங்குகிறது என்பதையும் விளக்குக.

4. மாநிலச் சட்டசபைகளைப் பற்றி விளக்குக.

5. நம் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை விவரிக்கவும்.

## செய்முறைப் பயிற்சி

1. நமது தேசியக் கொடியின் வரலாற்றைப் பற்றியும் அதனை ஏற்றிவைக்கும்போது கவனிக்க வேண்டிய முறைகளையும் தெரிந்து கொள்க.

2. நமது தேசியக் கொடியின் படத்தைக் குறிப்பேட்டில் வரைக.

3. அசோகரது சாரநாத் தூணிலிருந்து எடுக்கப்பட்ட நமது தேசியச் சின்னத்தின் படத்தைச் சேகரித்து, படப்புத்தகத்தில் ஒட்டி வைக்கவும்.

4. நமது தேசியக் கீதத்தைத் தகுந்த உச்சரிப்புடனும், உரிய பண்ணுடனும் பாடக் கற்றுக்கொள்.

5, உனது படப்புத்தகத்தில் நமது குடியரசு தலைவர்களின் படங்களைச் சேகரித்து ஒட்டிவைக்கவும்.

6. ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்க.

7. இந்திய தேசப்படத்தில் தற்கால மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும், அவற்றின் தலைநகரங்களையும் வெவ்வேறு வண்ணமிட்டுக்குறிப்பிடுக.

## காலவரிசைப் பட்டியல்

1498 வாஸ்கோடகாமா கோழிக்கோடு வந்தடைதல்

1600 ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிக நிறுவனம் உருவாகுதல்

1757 பிளாசிப்போர்

1773 ஒழுங்குமுறைச் சட்டம்

1857 முதல் சுதந்தரப்போர்

1858 பேரரசி விக்டோரியாவின் அறிக்கை

1861 இந்தியக் கவுன்சில்கள் சட்டம்

1885 இந்திய தேசியக் காங்கிரசு நிறுவப்படுதல்

1905 வங்காளப் பிரிவினை

1906 முஸ்லிம் லீக் நிறுவப்படுதல்

1909 மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள்

1914—18 முதலாம் உலகப்போர்

1916 அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம்

1919 மான்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்
ஜாலியன்வாலாபாக் படுகொலை (13 ஏப்ரல்)

1920 காங்கிரசுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தல்
ஒத்துழையாமை இயக்கம்

1927 ஸைமன் கமிஷன் அமைப்பு

1929 லாகூர் காங்கிரசு

1930 சட்டமறுப்பு இயக்கம் முதலாம் வட்டமேசை மாநாடு

1931 காந்தி-இர்வின் உடன்படிக்கை
இரண்டாம் வட்டமேசை மாநாடு

1935 இந்திய அரசாங்கச் சட்டம்

1937 மாகாண சுய ஆட்சி ஆரம்பம்

1939 இரண்டாம் உலகப்போர் ஆரம்பம் (செப்டம்பர்)
மாகாணங்களில் காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகல்

1940 முஸ்லிம் லீகின் தனிநாடு ''பாகிஸ்தான்'' கோரிக்கை

1942 கிரிப்ஸ் தூது
ஆகஸ்டுப் புரட்சி (வெள்ளையனே வெளியேறு)

1945 இரண்டாம் உலகப்போர் முடிவு.

1946 பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் வருகை
இடைக்கால அரசின் அமைப்பு (செப்டம்பர் 2)

1947 மௌண்ட்பேட்டன் திட்டம் (ஜூன் 3)
இந்தியா சுதந்தரம் அடைதல் (ஆகஸ்டு 15)

1947 ஜவஹர்லால் நேரு, பிரதம அமைச்சர்

1948 மகாத்மா காந்தி இறத்தல் (ஜனவரி 30)

1950 இந்தியா குடியரசு நாடாதல்

1951 முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுதல்

1956 மொழிவாரி மாநிலங்கள் அமைப்புச் சட்டம்

1962 சீன ஆக்கிரமிப்பு

1964 ஜவஹர்லால் நேரு இறத்தல்
லால்பகதூர் சாஸ்திரி பிரதமர்

1965 இந்திய-பாகிஸ்தான் போர்

1966 லால்பகதூர் சாஸ்திரி இறத்தல்;
இந்திரா காந்தி பிரதமர்

1971 இந்திய-பாகிஸ்தான் போர் பங்களாதேஷ் உதயமாதல்

1972 சிம்லா ஒப்பந்தம் (இந்தியா, பாகிஸ்தான்)

1977 மொரார்ஜி தேசாய்-இந்திய பிரதமர்

1980 இந்திரா காந்தி-இந்திய பிரதமர்

1982 இன்சாட் I ஏ. விண்வெளியில் செலுத்தப்பட்டது
டில்லியில் 9வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

ஆப்செட் முறையில் கவர் அச்சிட்டோர் :
**லக்ஷ்மி ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
சிவகாசி - 626 123.